Authorised by the Director of Public Instruction, Madras,
for use in Schools under Public Management also. (Gazette 28-6-1921)

SIXTH READER

(TAMIL)

ஆறும் பாட புத்தகம்

(ஏழாம் வகுப்பு)

BY

C. R. NAMASIVAYA MUDALIAR,

Lecturer in Tamil, Queen Mary's College, Madras

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

(*Vide Gazette, Part I B, 4th June 1912, Page 371.*)

MADRAS:

C. COOMARASAWMY NAIDU & SONS

1926

Rights Reserved]

[Price 7 As.

R. M. V. Shanmu
Ahangu

ஆரும் பாட புத்தகம்

ஆ ரு

R M V. Shan

(ஏழாம் வகுப்பு)

மேரீ யாசியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'கல்லாசிரியன்' பத்திராதிபருமாகிய

கா. நமச்சிவாய முதலியார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1926

[ரிஜிஸ்தர் செய்தது] [விலை 7 அணா

ROJA. MUTHIAH
ARTIST
...AIYUR P.O.

பொருள் அடக்கம்

வாசக பாடங்கள்

எண்	விஷயம்	பக்கம்
1.	கடவுள் ஒருவர் உண்டென்பது	5
2.	நச்சுப் பொய்கை	10
3.	கனேரிப் பறவை	18
4.	சுவேஸ் கால்வாய்	22
5.	திமிங்கிலம்	29
6.	மனோ ராஜ்யம்	33
7.	வாய் மதத்தால் வந்த கேடு	37
8.	சூது விரும்பேல் — I	43
9.	நல்ல மனைவி	48
10.	கடன் கோடல்	53
11.	பழியோரிடம் பாவமோரிடம்	57
12.	அறிவின் பெருமையும் கல்விச் செருக்கும்	63
13.	சூது விரும்பேல் — II	71
14.	சகோதர ஒற்றுமை	79
15.	சூது விரும்பேல் — III	88
16.	வாலிபச் சாரணர் இயக்கம்	97
17.	சிறுவர்க்குரிய முதற் கடமை	104

செய்யுட் பாடங்கள்

I.	நன்னெறி	113
II.	பழமொழி விளக்கம்	118

ஆரும் பாட புத்தகம்

1. கடவுள் ஒருவர் உண்டென்பது

சுந்தரம் — நண்ப, மாணிக்கம்! நீ அந்தப் புத்தகத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருந்து, காலங் கடத்துகிறுயே, அஃது என்ன புத்தகம்?

மாணிக்கம் — சுந்தர! இது பிரகிருதி சாஸ்திரம்; இதனை வாசிக்குந்தோறும் என் மனத்தில் அளவிறந்த வியப்பும் விருப்பும் உண்டாகின்றன.

சுந்தரம் — பிரகிருதி சாஸ்திரமா, அஃது எவ்விஷயங்களைப் பற்றிப் பேசுகிறது?

மாணிக்கம் — பிரகிருதி சாஸ்திரம் இன்ன விஷயங்களைப்பற்றிப் பேசும் என்பதை நீ இதுவரையில் அறியாயா? அஃது, இவ்வுலகத்திற் காணும் இயற்கைப் பொருள்களைப்பற்றி விவரித்துக் கூறும்.

சுந்தரம் — அப்படியா, எல்லா நூல்களும் பொருள்களின் குணகுணங்களைக் குறித்துத்தானே கூறுகின்றன; இதை வாசிப்பதனல் வியப்பென்ன? விருப்பென்ன? கட்டுக்கதையிற் காணும் புதுமை எதும் இல்லையே; எல்லாம் கண்கூடாகக் காண்பதுதானே?

மாணிக்கம் — ஆகா! அப்படியும் எண்ணிவிடலாமா? பிரகிருதி சாஸ்திரத்தைப் படிக்குந்தோறும் இயற்கைப் பொருளின் இயல்பும், அதன்கண் அமைந்துள்ள விசித்திரங்களும் விளங்குவதனல், வியப்பு

உண்டாகின்றது. ஆகவே, அதை ஆக்கிய தலைவனிடத்தில் விருப்பு உண்டாகின்றது.

சுந்தரம் — ஆகா, நன்று நன்று, வெகு நன்று! இயற்கைப் பொருள்களில் வியப்பாம், இயற்றியவனிடத்தில் விருப்பாம்! என்ன கொள்கை! என்ன சித்தாந்தம்! நீ சொல்வது முன்னுக்குப் பின் முரண்படுகிறதே; இதுதான் உன் சித்தாந்தமோ?

மாணிக்கம் — சுந்தா! நான் சொல்வதில் முரண் என்ன? சொல் பார்ப்போம்.

சுந்தரம் — முன்பு, அது பிரகிருதி சாஸ்திரம் என்றாய், அது இயற்கைப் பொருள்களைப்பற்றி இயம்பும் என்றாய்; பின்பு, அவற்றை ஆக்கிய தலைவன் ஒருவன் உளன் என்றாயே, உனக்கென்ன பித்தமோ? பேய்த்தன்மையோ? பிரகிருதி என்றால் இயற்கை; அதாவது பொருள் தானே அமைவது. அவ்வாறாக, அதை ஆக்கத் தலைவன் ஒருவன் உண்டாவானேன்? இது 'மலடி மகன்' என்பதுபோல் இருக்கின்றதே.

மாணிக்கம் — ஐயோ, என் அரிய நண்ப! உனக்கென்ன விபரீதஞானம் உண்டாய்விட்டது. 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது!' என்னும் முதுமொழியைக் கேட்டறியாயா? காரணம் இல்லாமல் காரியம் உண்டாகுமா? தெய்வம் இன்றி ஜகம் உண்டாகுமா? அன்றியும்,

'தீட்டுவோன் இன்றி ஆமோ
சித்திரம் திகழ்பொற் பாவை
ஆட்டுவோன் இன்றித் தானே
ஆடுமோ திவ்வி யாழின்

மீட்டுவோன் இன்றிக் கீதம்
விளையுமோ சரா சரங்கள்
நாட்டுவோன் ஒருவன் இன்றி
நன்கமைந் தொழுகுங் கொல்லோ'

என்னும் பாடலைப் படித்ததில்லையா? இன்றேல், இது-போன்ற கருத்துக்களைக் கேட்டது மில்லையா?

சுந்தரம் — இதெல்லாம் வீண் பேச்சு, கட்டுக் கதை; காட்சிப் பிரமாணம் ஏதேனும் உண்டா?

மாணிக்கம் — அப்படியா, காட்சிப் பிரமாணமா வேண்டும்? புகையைக் கண்ட இடத்தில் தீயுண்டு என்று அநுமானிக்கவில்லையா? அதுபோல சிருஷ்டிப் பொருளைக் கண்டவிடத்தில் அதைப் படைத்த இறை-வன் ஒருவன் உண்டென்று உணர வேண்டுவதில்லையா?

சுந்தரம் — மறுபடியும் பழைய பாடமே படிக்கி-றாயே, இயற்கைப் பொருளுக்கு இறைவன் என்ன?

மாணிக்கம் — பொருள்கள் இயற்கையானவை-யாகக் காணுமே யன்றி, எதுவும் தானே இயல்பாக உண்டாயிருக்க மாட்டாது. அப்படி உண்டான பொ-ருள் ஏதேனும் ஒன்று இருந்தால் நீ சொல் பார்க்கலாம்.

சுந்தரம் — இதுதானே, ஒன்றென்ன, எல்லாம் இயற்கையாய் உண்டானவைகளே. இதோ நிற்கும் இந்த விருக்ஷமும் இயற்கையாய் உண்டானதே.

மாணிக்கம் — இந்த விருக்ஷமும் இயற்கையாய் உண்டானதா? நல்லது, இவ் விருக்ஷம் எதிலிருந்து உண்டாயிற்று?

சுந்தரம் — நல்ல கேள்வி, இது தெரியாதா, விரு-க்ஷம் அதன் வித்திலிருந்து உண்டாயிற்று.

மாணிக்கம் — சரிதான், அந்த வித்து எதிலிருந்து உண்டாயிற்று?

சுந்தரம் — என்ன, யாரும் கேட்காத கேள்வி கேட்கிறாய்? நீ கேட்கும் உனது கேள்வியைப் போலத்தான் உனது சித்தாந்தமும் இருக்கும். இருக்கட்டும், வித்து விருக்ஷத்திலிருந்து உண்டாயிற்று.

மாணிக்கம் — அன்ப! அவசரப்படாதே, கருத்தைக் கவனி. விருக்ஷம் வித்தினின்றும் உண்டாயிற்று, வித்து விருக்ஷத்தினின்றும் உண்டாயிற்று என்றால், இவற்றுள் முதலில் உண்டானது வித்தோ? விருக்ஷமோ?

சுந்தரம் — (ஓஹோ, இதேது ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டோம், முதல் வித்து உண்டாயிற்று என்போமானால், அந்த வித்து உண்டான ஆதி விருக்ஷம் ஒன்று இருந்திருக்கவேண்டும். விருக்ஷம் முதல் உண்டாயிற்று என்போமானால், அவ் விருக்ஷம் உண்டாவதற்கு முதல் வித்து ஒன்று இருந்திருக்க வேண்டும். இதென்ன, இரண்டிடத்தும் இடர்ப்படுகின்றதே என்று தனக்குள் எண்ணித் திகைத்து, ஈன சுரத்தோடு) நண்ப! இதற்குத் தக்க விடை சொல்ல என்னால் முடியவில்லை.

மாணிக்கம்—சுந்தரம், கற்றறிந்த நீயே கடவுள் இல்லை என்று கருதினால், கல்லாத மூடர் என்ன நினைப்பார்? எதும், தலைவன் ஒருவன் இன்றித் தானே அமையாது; அருளே தம் வடிவமாகவுடைய ஆண்டவன், ஆன்மாக்கள் பொருட்டு இவ்வுலகில் வழங்கி-

யுள்ள பொருள்களைக் கண்டு, அவற்றின் அற்புதங்களை உணர்ந்து உன்னுந்தோறும், அப்பரம பிதாவின் அருட்டிறம் நன்கு விளங்கும். ஆதலால், நாம் அப்பெருமானிடத்து நீங்காத அன்புபூண்டு, அவரை மனத்தால் நினைத்து, வாக்காற் பாடி, காயத்தால் வணங்கி வழிபடுவதே, பெறற்கரிய இம் மானிடப் பிறவி பெற்றதற்கு மாண்பாகும்.

சுந்தரம்—மெய்தான், மெய்தான், அந்தோ, என்ன செய்வேன்! என் வாழ்நாளை வீணாளாக்கிக் கழித்தேனே! யான் முன்பு தெய்வ நிச்சயமுடையவனாகி, பாவத்தை நீக்கி, புண்ணியத்தைக் கைக்கொண்டு நடந்து வந்தேன். பூத பௌதிக சாஸ்திரங்களில் நன்கு பயின்ற பின்பு, எல்லாம் இயற்கையா யமைந்தனவே யென்றெண்ணி இறுமாந்தேன்; இறுமாப்பெல்லாம் இன்றோடு ஒழிந்தது. இன்று நீ கற்பித்த நற்புத்தியால் நன்னெறி யறிந்தேன்.

மாணிக்கம் — தோழ, சுந்தர! சென்றவைகளை யுன்னிக் கன்றுவது நன்றன்று; நீ மாத்திரமே யன்று மாணவரிற் சிலர், ரசாயன சாஸ்திரம் முதலிய நூல்களிற் சிறிது தேர்ச்சி யடைந்தவுடன், முற்றும் கற்று, முழுதும் உணர்ந்தவர்போல் தருக்கி, தம்மைத் தாமே மதித்து, கடவுளேது? கிடவுளேது? எல்லாம் கட்டுக்கதை, 'எட்டுச் சுரைக்காய்' என்று வாசா ஞானம் பேசும் வழக்கத்தை அடைகின்றனர்.

சுந்தரம் — என் அரிய மாணிக்கவாசக! இன்று நீ மொழிந்த மாணிக்கவாசகத்தை என்றும் மறவேன். வந்தனம், விடைகொடு, போய் வருகின்றேன்.

மாணிக்கம்—கேட்டதனல் யாதும் பயன்படாது; கேட்டதைச் சிந்தித்தலால், விளையும் பயனுக்கு அளவே இல்லை. ஆதலால், நாம் என்றும் நல்ல நூல்களைக் கற்று, விஷயங்களை யுணர்ந்து இன்பமடைந்து வாழ்தல் வேண்டும். போய் வருக, வந்தனம்.

2. நச்சுப் பொய்கை

நச்சுப் பொய்கை என்பதற்கு விஷத் தன்மையுள்ள நீரைக் கொண்டுள்ள தடாகம் என்பது பொருள். இதைப்பற்றிய விருத்தாந்தம் ஒன்று பாரதத்தில் வருகின்றது. அதனை இங்குக் கூறுவோம்:

2. பண்டைக்காலத்தில், பாண்டவர் கௌரவர் என்னும் இரண்டு வகுப்பினர் வட இந்தியாவில் வாழ்ந்தனர், கௌரவர் பாண்டவர்மீது எஞ்ஞான்றும் அழுக்காறுகொண்டு, அவர்களுக்கு இடையூறு பல இழைத்து வந்தனர்.

3. ஒருகால், கௌரவரில் தலைவனான துரியோதனன், பாண்டவர்களை வஞ்சிக்குமாறு எண்ணங் கொண்டு அதை நிறைவேற்றும் வண்ணம், கண்டோர் வியக்கத்தக்க மாளிகை யொன்றைக் கட்டி முடித்தனன். பின்னர், தான் அவ் வரண்மனைக்குக் கிருகப் பிரவேசஞ் செய்யப் பாண்டவர் வரவைப் பெரிதும் நாடினவன்போல், தன் தந்தையாகிய திருதராட்டிரனது கையெழுத்தமைந்த திருமுகம் ஒன்றை அவர்களுக்கு அனுப்பினன்.

4. அது கண்ட பாண்டு மைந்தர் பரிந்து சென்று ஆண்டுச் சேர்ந்தனர். குறித்த நாளில் கிரகப்பிரவேசஞ் செய்து, அனைவோரும் அறுசுவை யுண்டி அன்பு-

டன் உண்டு உவந்திருக்கும் காலத்து, துரியோதனன் சகுனி முதலானோர் தருமரை நோக்கி, 'இன்றைப் பொழுதை இனிது கழிக்க ஏதேனும் விளையாடலாமே' என்று கேட்டனர். தருமர் அதற்கு உடம்படுதலும், சகுனி துரியோதனன் காட்டிய குறிப்பை யுணர்ந்து, 'சொக்கட்டான் ஆடலே சுகம்' என்றான். தருமர்,

'உருவழிக்கும் மானம் உயிர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் செல்வம் சிதைக்கும் — மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து'

என்பது முதலிய மேற்கோள்களைக் காட்டி, அவ் விளையாடல் தீவினையை விளைவிக்குமென்று மறுத்தனர். பின்னர், தருமர் கௌரவர் கூறிய வஞ்ச மொழியில் மயங்கி, ஒருவாறு அதற்கு உடம்பட்டுச் சகுனியோடு சொக்கட்டான் ஆடினர். ஆட்டத்தில் தருமர் நாடு, நகரம், சேனை முதலிய அனைத்தும் தோற்றதன்றி, தம் மனைவியாகிய திரௌபதியையும் முடிவில் பணயமாக வைத்துத் தோல்வி யடைந்தனர்.

5. பாரினையே யன்றி பாரியையும் பணயமாக வைத்துத் தோற்ற பாண்டுமைந்தரை நோக்கி, மூண்டு இருந்த விதுரன் முதலாயினோர் பெரிதும் வருந்தி நிற்க, துரியோதனன், 'இவர்கள் பன்னிராண்டு காட்டில் வசித்து, ஓராண்டு எவர் கண்ணிலும் படாமல் மறைந்திருந்து, பதிமூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் இங்கு வருவாராயின், தமது நாட்டைத் திரும்பவும் அடைந்து வாழலாம்' என்றனன்.

6. பாண்டவர் அந்தப் பாவியின் மொழிக்கு இணங்கி, பன்னிராண்டு வனவாசஞ் செய்யச் சென்ற-

னர். ஆண்டு, பாண்டவர் துயர் பல அடைந்து காலங் கழித்து வருமளவில், துரியோதனன் அவர்கட்கு அவ்வப்போது இன்னல் பல இழைத்து வந்தனன். அவற்றில் ஒன்றை ஈண்டுக் கூறுவோம்:

7. பன்னிரண்டாம் ஆண்டின் இறுதியில் துரியோதனன் பாண்டவரைக் கொல்லும் வண்ணம் ஒரு சூழ்ச்சி புரிவானுனன். சகுனியும் அவனுக்கு உடனிருந்து அவனது தீச்செயல்கள் அனைத்திற்கும் ஏற்றவாறு உதவி புரிந்து வந்தான்.

8. ஒரு நாள் துரியோதனன் காளமாமுனி என்னும் தவசியை யணுகி, தன் கருத்தை வெளியிட்டு, பாண்டவரைக் கொல்ல ஒரு யாகம் விரைவில் முடித்தல் வேண்டுமென்று வேண்டினன். அப் பெரியார் அதனை அறவும் மறுத்து, துரியோதனனுக்கு நற்புத்தி புகட்டி அனுப்பினர். வஞ்சகர் நெஞ்சம் இரும்பினும் வலியதாதலால், துரியோதனன் முனிவர் மொழியைச் சிறிதும் மேற்கொள்ளாமல், மேலும் மேலும் அவரடியில் தன் முடிபட வணங்கி, அவரைப் பெரிதும் வேண்டினன். துரியோதனனுக்குத் தீவினை முந்துறுதலால் அம்முனிவரும் அவனது வேண்டுகோளுக்கு இணங்குவாராயினர்.

9. பின்னர், அக் காளமா முனிவர் கானகத்தை யடைந்து, துரியோதனன் விரும்பியவாறே வேள்வியொன்றை இயற்றினர். அதிலிருந்து தீப்போல் சிவந்த கண்ணும், இருள்போல் கறுத்த மேனியும் கொண்டு ஓர் அரக்கன் தோன்றினன். அவனது கோரரூபத்தைக் கண்டஞ்சி காளமா முனிவரும் கொஞ்சங் கலங்குற்றார்; பின்பு, ஒருவாறு தேறினர். அப்போது அந்த அரக்கன் முனிவரை முனிந்து நோக்கி, 'யான் இங்குச்

செய்யவேண்டுவது யாது?' என்று கேட்க, முனிவர், 'நீ விரைந்து சென்று பாண்டவரைக் கொன்று வருதல் வேண்டும்' என்றனர். எனலும், அந்த அரக்கன் முனிவரை நோக்கி, 'அப் பாண்டவர் என் கண்ணிற் படாராயின், திரும்பி வந்து உம்மையே கொல்வேன்' என்றான். அதற்கு முனிவரும் உடம்பட்டனர். அடாது செய்வோன் படாதுபடுதல் அடைவேயன்றே? அதன்மேல் அரக்கன் அவ்விடத்தினின்றும் அகன்றனன்.

10. இங்ஙனம் இவ்வாறாக, அந்தணச் சிறுவன் ஒருவன் வனத்திலிருந்த பாண்டவர்களைக் கண்டு வணங்கி, 'ஐயன்மீர்! யான் அரிதிற பெற்ற மான்றோலைக் கலைமான் ஒன்று கவர்ந்து போயிற்று; என்ன செய்வேன்!' என்று வருந்தி நின்றனன். பிறர் துயரம் காணப்பொறுத்தருமர், அவன் நிலையைக் கண்டு வருந்தி, அம்மானைத் தொடர்ந்து சென்றனர். அதுகண்ட தம்பியர் நால்வரும் தமையன் சென்ற வழியே தாமும் செல்வாராயினர். அந்த மாயமான் அண்மையிற் காண்பதேபோல தொடர்ந்து தோன்றி, ஐவரையும் நெடுந்தூரங் கொண்டு சென்று, முடிவில் ஒருவர் கண்ணிலும் படாமல் மறைந்துவிட்டது.

11. பின்னர், பாண்டவர் மிகவும் களைப்புற்று, நின்றுந் தோன்றாது, ஒரு தருவின்கீழ் தங்கினர். அப்போது தருமருக்கு நீர்வேட்கை மிகவே, அவர் சகாதேவனை நோக்கி, 'தாகத்தால் நாக்கு வரட்சியடைகிறது; சிறிது நீர் தேடித் தருக' என்றனர். தமையன் மொழியைத் தட்டி நடவாத சகாதேவன் விரைந்து சென்று, பல்வேறிடங்களிலும் பருகுநீர் தேடிப்பார்த்து, முடிவில் ஒரு தடாகத்தை அடைந்தனன். அடைந்தவன்,

அதில் நீரைக்கண்டதும் தனக்கும் நீர்வேட்கை மிகுந்தது. அதிக ஆர்வத்தோடு ஓரடி நீர் பருகினான். உடனே விஷம் தலைக்கேறி, கண் இருண்டு, மண்ணில் வீழ்ந்து மாண்டுமடிந்தான். தம்பி வரத் தாமதமாகக் கண்ட தருமர் நகுலனை அனுப்பினர். அவனும் சகாதேவன் சென்றவழியே சென்று அப்பொய்கையையடைந்து, அந்தப் புனலைப் பருகி உயிர் துறந்தான். பின்னர் அர்ச்சுனனும் அவ்வாறேயானான். சென்ற மூவரும் வாராமையால் மூவவாட்டமுற்ற தருமரை அங்கிருந்து, வீமன் விரைந்து சென்று, அக்குளக்கரையைக் குறுகி, தம்பியர் மூவரும் மண்ணில் வீழ்ந்து மாண்டு கிடப்பதைக் கண்டு, பெரிதும் மனமுளைந்து, 'இஃது என்னை! இஃதோ நச்சுப்பொய்கையோ? இதன் நீரைப்பருகியே இவர்கள் இறந்துபட்டிருத்தல் வேண்டும். யாம் திரும்பிப்போய் இதனைத் தருமருக்கு அறிவித்தால் அவரும் உயிர் விடுவர். அதன் பின்னர் யாமிருந்து ஆகும் பயன்யாது. அதனினும் நாமும் இவரோடு இறந்துபடுதல் நன்று' என்றெண்ணி, தானும் அப் பொய்கையில் இறங்கி நீரை யருந்தி, நிலத்தில் வீழ்ந்து, உயிர்துறந்தான்.

12. தம்பிமார் நால்வரும் வராததுகண்ட தருமர், 'என்னை, நம் தம்பியர் நால்வரும் நமன் கையிற்பட்டனரோ! இவர்கட்கு இன்னல் இழைப்பார் எவரும் இவ்வுலகில் இலரே. யாது நேர்ந்ததோ, சென்று அறிவோம்' என்று தம் தம்பியரைத்தேடிச்சென்று, அவர்களனைவரும் குளக்கரையில் இறந்து கிடத்தலைக்கண்டு, மனம் சோர்ந்து, ஒன்றுந் தோன்றாது மண்ணிற் சாய்ந்து உணர்வற்றுக் கிடந்தார்.

ROJA. MUTHIAH
ARTIST

13. அப்போது, காளமா முனிவன் இயற்றிய யாகத்தினின்றும் எழுந்த அரக்கன், பாண்டவரைத் தேடிவந்து, பொய்கைக்கரையில் ஐவரும் உயிர் துறந்து கிடப்பதைக் கண்டு, 'என்னே! காளமாமுனி இறந்தவரைக் கொல்லவோ நம்மை ஏவினன்' எனச் சினந்து சென்று, அம் முனிவனையே கொன்றுவிட்டான்.

14. பின்னர், தருமர் ஒருவாறு மூர்ச்சைதெளிந்து, தாமும் அப் பொய்கை நீரைப் பருகச் சென்றனர். அப்போது, 'யான் கேட்கும் வினாக்களுக்கு விடைகூறு முன்னர், இப் புனலைப் பருகலாகாது' என ஓர் அசரீரிவாக்கு ஆகாயத்தே எழுந்தது. பொறையையே பூணாகப் பூண்ட தருமர், அதுகேட்டு, மயங்கி, நின்று ஆலோசிக்கு மளவில், அசரீரி தருமரை நோக்கி வினவலுற்றது:

அசரீரி— தருமர்—

சொல்லு நூல்களில் பெரியது எது? - அரிய மெய்ச் சுருதி.
இல்லறத்தினுக் குரியது எது? - எண்ணுடை யில்லாள்.
மல்லல் மாலையில் மணமுள்ளது எது? - வண் ஜாதி.
நல்ல மாதவ மேது? - தங் குலம் புரி நடையே.

முனிகுலந்தொழ கடவுள் யார்? - மொய்துழாய் முகுந்தன்.
நனை மணங் கமழ் குழலினர்க்கு இயற்கையாது? - அது நாண்.
தன மிகுந்தவர்க் கேது அரண்? - தகை பெறு தானம்.
இனியதேது இரு செவிக்கு? - இளங்குதலையர் இன்சொல்.

நிற்பதேது சொல்? - நீடு இசை யொன்றுமே நிற்கும்.
கற்பதேது சொல்? - கசடறக் கற்பதே கல்வி.
அற்பமாவ தேது? - அனைத்தினும் அயல் கரத் தேற்றல்.

(இதைப் பாட்டாகவும் வாசிக்கவும்)

15. அசரீரி தான் விளைய வினைக்கள் அனைத்திற்கும், தருமர் ஏற்றவாறு விடை கூறக் கேட்டு, மனமிக மகிழ்ந்து, அவருக்குத் தன் மெய்யுருக் காட்டித் தான் தருமதேவதை என தெரிவித்தது. மற்றும் அந்தத் தேவதை, தருமரை நோக்கி, 'நினக்கு வேண்டும் வரம் எதனும் ஒன்று கேள்' என, தருமர், பார்ப்பனச் சிறுவன் இழந்த மான் தோலை அருளுமாறு வேண்டினர். தருமதேவதை தருமர் வேண்டியவாறே அதனை அருளி, 'மற்றும் ஒரு வரம் வேண்டுக' என்றது. அதற்குத் தருமர், 'இறந்து கிடக்கும் இவர்களில் நகுலன் உயிர்த்து எழும்வண்ணம் அருள் புரிக' என்று இரந்து நின்றார். அதற்குத் தருமதேவதை, 'உன்னுடன் பிறந்த வீமன் முதலிய சகோதரர் இருக்க, மாற்றவள் மைந்தன் உயிர்பெற வேண்டினமை யாது காரணம்?' என்று வினவ, தருமர் கூறுவர்: 'எந்தாய்! குந்திக்கு யானேர் புதல்வன் உயிருடன் இருக்கின்றேன்; என் இரண்டாய தாயாராகிய மாத்திரைக்கும் ஒரு புதல்வன் இருத்தல் முறையாமன்றே?' என்றார். தருமதேவதை தருமரது தரும குணத்தை யுன்னி, அவ்வாறே அருள் புரிந்ததன்றி, மற்றை மூவருங்கூட உயிர்த்தெழும் வண்ணம் கிருபை செய்தது.

16. பின்னர் அந் நால்வரும், உறங்கி எழுந்தவர்போல உயிர்பெற்றெழலும், தருமதேவதை பாண்டு மைந்தர் ஐவரையும் நோக்கி, 'மைந்தர்காள்! நீவிர் இப்பன்னிரு யாண்டு வனத்தில் கழித்ததேபோல், மற்றோர் யாண்டும் மச்ச நாடு சென்று மறைந்து கழித்து, நாடு பெற்று இன்புற்று வாழ்வீராக' எனக் கூறித் தன் உருக்காட்டி அகன்றது.

3. கனேரிப் பறவை

பகுத்தறிவு என்பது மானிடர்க்கே யன்றி, சிற்சில பறவைகளுக்கும், விலங்குகளுக்குங்கூட ஒருவாறு அமைந் திருக்கின்றது. நமது நாட்டிலுள்ள கிளி காகணவாய்ப்புள் முதலிய பறவைகளும், நாய் யானை வானரம் முதலிய விலங்குகளும் பகுத்தறிவுடையன

வாம். இவையன்றி, அமெரிக்கா கண்டத்திலுள்ள பரிகசப் பறவை, கனேரித்தீவிலுள்ள பொன்னிறப் பறவை முதலியனவும் பகுத்தறிவுள்ள பக்ஷிகளெனப் பல்லோராலுங் கொண்டாடப்படுகின்றன.

2. பிள்ளைகாள்! நீங்கள் நான்காம் பாட புத்தகத்தில் பரிகசப் பறவையைப் பற்றிய விஷயங்களைப் பக்க ஆறிந்திருக்கின்றீர்கள். சண்டு கனேரிப் பறவையைப் பற்றிச் சிறிது கூறுவோம்:

3. இப் பொன்னிறப் பறவை, முதல்முதல் கனேரி என்னும் தீவினின்றும் பலவேறு தேசங்களுக்குக் கொண்டு போகப்பட்டமையின், இதற்கு 'கனேரிப் பறவை' என்பது காரணப் பெயராயிற்று. இப் பறவை தனித்தோமல் எக்காலத்தும் பல ஒன்றுகூடிக் குலவிக் களிப்படையும் இயல்புடையது. இஃது எந்தப் பருவத்திலும் இன்னிசையாகப் பாடி மானிடர்க்கு இன்பமூட்டும். இன்னும் இது, தன்னைக்காப்பாற்றுவோன் கற்றுக் கொடுக்கும் ஆடல் பாடல் முதலியவற்றை மிக்க ஊக்கத்தோடு கவனித்துக் கற்றுணர்ந்து, பிறகு, அவன் விரும்பிய வண்ணம் செய்து காட்டும் சிறந்த அறிவுடையது.

4. ஒரு சீமாட்டி கனேரிப் பறவை ஒன்றை இளமைப் பருவமுதல் வளர்த்துப் பாதுகாத்து வந்தாள்; சில சமயங்களில் அவள் அப் பறவையை நோக்கிச் சில இனிய சொற்களைச் சொல்ல, அஃது உடனே அவைகளை மிகவும் தெளிவாகத் திருப்பி உச்சரித்ததாம். மற்றும் இப் பறவையின் திறமையைப்பற்றி ஒருவர் தாம் கண்ட அதிசயத்தைக் கீழ் வருமாறு கூறுகின்றார்:

5. யான் ஒருகால் இங்கிலந்தில் ஒரு சத்திரத்தில் தங்கினேன். அங்கு வேறு சிலரும் வந்து தங்கியிருந்தனர். அப்போது ஒருவன் ஆண்டடைந்து, தான்

வைத்திருந்த களைரிப் பறவை செய்யும் அரிய செய்கைகளைக் கண்டு களிக்கும்படி அங்கிருந்த எங்களை வேண்டினன். அந்தச் சமயத்தில் பெய்த மழையின் மிகுதியால் நாங்கள் ஒருவரும் வெளியே போகக் கூடாமலிருந்தமையால், அவன் வேண்டுகோளுக்கு இசைய நேர்ந்தது.

6. 'உடனே, அவன் எங்கள் நடுவில் நின்று, அப் பறவையைத் தன் கரத்தில் லயமத்துக்கொண்டு, 'என் செல்வக் கிள்ளாய்! நீ இப்போது இச் சபையோர் களிக்க, நான் கூறும்வண்ணம் செவ்வனே செய்தல் வேண்டும்; சிறிதும் பிழைபடுதல் கூடாது' என்றனன். அவன் உரைப்பதை அஃது உற்றுக் கேட்டுணர்ந்து, அவன் பேசி முடிந்தவுடன், அவன் சொன்னதைத் தான் தெரிந்து கொண்டதுபோல, இருமுறை தன் தலையை அசைத்தது. அவன் அதுகண்டு, 'உன் சொல் உண்மையாயின், இங்குள்ளார் யாவரும் வியக்க ஒரு பாட்டுப் பாடு' என்று சொல்ல, உடனே அவ் வற்புதப் பறவை இன்னிசையாகப் பாடிற்று. பிறகு அவன், 'விரைவாகப் பாடு' என்றனன். அப்படியே அது விரைவாகப் பாடிற்று. 'மெதுவாக' என்றனன். உடனே அது நிறுத்தி மெதுவாகப் பாடிற்று. அதன் பின் அவன், நீ பாடும் பாட்டுக்குச் சரியாகத் தாளம் போட்டுக்கொண்டே பாடமாட்டாயோ?' என்று கேட்க, அந்தப் பகுதி தன் காலால் தாளம் போட்டுக்கொண்டு இசையோடு பாடியது. முடிவில் அவன், 'இப்போது இச் சபையிலுள்ளோர் அனைவரும், உன்னுடைய திறமையைப் பார்த்து மகிழ்ந்து, கரகோஷம் செய்தார்கள்; இவ்வாறு இவர்கள் உன்னைக் கொண்டாடினதற்காக நீ

இவர்களுக்கு வணங்கி வந்தனஞ்செய்' என்றான். உடனே அது அவர்களை அன்புடன் பார்த்து, வெகு மரியாதையோடு தலை வணங்கி வந்தனஞ் செய்தது.

7. 'பிறகு, அப்பறவையின் யஜமான் அதற்கென்று செய்து வைத்திருந்த ஒரு சிறு துப்பாக்கியை அதனிடங் கொடுக்க, அது அதிசமர்த்தனை போர்வீரனைப் போல, அவ்வாயுதத்தைக் கால்களால் பற்றிக் கையாடிற்று. துப்பாக்கி வெடித்த பிறகு, அவன், "சற்று நடனம் செய் பார்ப்போம்" என்று சொல்ல, அப்பறவை உடனே வெகு நிறமையாக நடித்தது. அது கண்டு, யாங்களனைவரும் மகிழ்ந்து கை கொட்டி நகைத்தோம். பின்பு, அவன் அந்தப் பறவையைச் சீராட்டி, "நான் கூறிய அனைத்தும் நீ தவறுமல் செய்தமையால் எனக்கு அதிக சந்தோஷம் உண்டாயிற்று; இனி நீ சற்று நேரம் நித்திரை செய்; அந்தச் சமயத்தில் நான் என் வேடிக்கைகளையும் இச் சபையாருக்குக் காட்டுகிறேன்" என்றான். உடனே அந்தப் பறவை படுத்துக்கொண்டது. பிறகு அந்த ஆட்டக்காரனும் தன்னுடைய அரிய வித்தைகளை எங்களுக்குக் காட்டினான்.'

8. ஆதலால், சகல பிராணிகளுக்கும் அதனதன் நிலைமைக்கு ஏற்றபடி போதுமான அறிவையும், ஆலோசனையையும் கடவுள் இயற்கையாகவே அளித்திருப்பதோடு, பழக்கினால் செயற்கை யறிவையும், அடையக் கூடிய நிறமையையும் அவற்றிற்கு அனுக்கிரகித்திருக்கிறார். ஆதலால், நாம், கடவுளாற் படைக்கப்பட்ட எந்தப் பொருளையும், இது அற்ப மென்று இகழ்ந்துவிடாமல், அதனிலுள்ள அதிசயங்களைக் கண்டறிந்து ஆநந்தமடைய வேண்டும்.

4. சுவேஸ் கால்வாய்

சற்றேறக் குறைய 2,000 வருஷங்களுக்கு முன் இத் தேசத்தின் விளைபொருள்களையும், செய்பொருள்களையும் ஒட்டகம் முதலிய மிருகங்களின்மேல் ஏற்றி, மனுஷர் செல்வதற்கரிய கீர்வளமில்லாப் பாலைவனங்களின் மார்க்கமாய்ச் சென்று, மத்தியதரைக் கடலின் துறைமுகங்களில் இறக்க, ஐரோப்பியக் கப்பல்கள் அப் பொருள்களை அங்கிருந்து ஏற்றிக்கொண்டு போய் வெவ்வேறிடங்களிற் சேர்ப்பது வழக்கம். இம் மார்க்கத்தால் பிராணபாயம், பொருட் சேதம், கால தாமதம் முதலிய தீமைகள் உண்டானதால், இத் தேசத்துக்கு பலமும், பொகவும் சுலபமான வழி யொன்றைக் கண்டு பிடிக்கும்படி ஐரோப்பியரில் பல ஜாதியார் எண்ணி, பற்பல திசையாய்ச் சென்று, முயல்வா ராயினர். முடிவில், 1497-ம் வருஷம் போர்த்துகீஸியர் கண்டு பிடித்த ஆபிரிக்கா வின் தென் முனையாகிய நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வரும் மார்க்கமே சிறந்த தென்று தெரிந்துகொண்டனர். இவ் வழியாய் இன்றும் வியாபாரக் கப்பல்கள் போக்கு வரவு செய்கின்றன. இதினால் காலதாமதம் சேரிட்டதனால் மத்தியதரைக் கடலுக்கும், செங்கடலுக்கும் இடையிலிருந்த சுவேஸ் பூசந்தியைக் கடந்து செல்லும் மார்க்கம் ஒன்று ஏற்பட்டது.

2. இவ் வழியாய் ஐரோப்பாவி லிருந்து இந்து தேசத்துக்குப் போக்குவரவு செய்வோர், முதலிலும் கடையிலும் ஜலமார்க்கமாயும், இடையில் பூமி மார்க்கமாயும் செல்லவேண்டி யிருந்தமையால், இந்தப்

பாதைக்குத் தரை மார்க்கம் என்னும் பெயர் எற்-பட்டது. இம் மார்க்கத்தில் பிரயாணிகளுக்குக் கஷ்ட முண்டாயிருந்ததுந் தவிர, ஒரு கடற்றுறையிலிருந்து அவரவர் துணிமணி முதலிய பொருள்களை மனிதர்-தலையிலோ, கால்நடை முதுகிலோ ஏற்றிக்கொண்டு மற்றொரு துறைமுகஞ் சேர்ந்து, கப்பல் விட்டுக் கப்பல் ஏறும் சங்கடமும் பட்டே தீரவேண்டி யிருந்தது. இந்தத் தர்மசங்கடத்தை நிவர்த்திக்கும்படி, இப்போது சுவேஸ் கால்வாய் வெட்டப்பட் டிருப்பதால், மரக்-கலங்கள் இங்கிலாந்தின் தெற்கிலிருக்கும் துறைமுகத்-திலிருந்து புறப்பட்டு மத்தியதரைக் கடலின் வழியாய்ச் சுவேஸ் கால்வாயிற் புகுந்து, செங்கடலைச் சேர்ந்து இத் தேசத்துக் கரையை யடைகின்றன. தரைமார்க்கம் என்னும் பெயரும் போய்விட, பெரிய கப்பல்கள், பிரயாணிகளையும் சரக்குகளையும் ஏற்றிக்கொண்டு, இந்த மார்க்கத்தில் போக்கு வரவு செய்கின்றன.

3. இந்தச் சுவேஸ் கால்வாய் தற்கால சில்பசாஸ்-திரிகளால் நிறைவேறின ஆச்சரியங்களுள் ஒன்று. ஆயினும், இது முற்றும் நவீனமான தொன்றென்று சொல்ல இடமில்லை. கிறிஸ்து பிறக்க 500 வருஷங்-களுக்குமுன் செங்கடலுக்கும் மத்தியதரைக் கடலுக்கும் இடையே ஒரு கால்வா யிருந்தது; அது செங்கட-லுக்கு வடபாரிசத்திலுள்ள சுவேஸ் பட்டணத்துக்கு வடக்கே ஒன்றரை மைல் தூரத்தினின்று வடமேற்குத் திசையாய்ச் சென்று இடையிடையே இயற்கையா யமைந்த பல நீர்நிலைகளைத் தழுவி நைல் நதியின் கிழக்கிலைமட்டும் எட்டியிருந்ததென நன்றாய்த் தெரிய-வருகிறது. இக் கால்வாய் பலமுறை தூர்ந்து போக,

அவ்வப்போது அந்த மணலை வாரி எடுத்து, அக்கால்-வாயைப் புதுப்பித்தும், கி. பி. 767-ஆம் ஆண்டில் அமைந்து இருந்த இடமும் தெரியாமற் போகும்படி-யாக்கிவிட்டது. அதுமுதல் 1000 வருஷம் சென்ற பின் மேலே சொன்ன இருகடலையும் சம்பந்தப்படுத்த-வேண்டுமென்ற எண்ணம் விவேகியாகிய பன்னேபார்ட் என்பவர் மனத்திற்பட்டும், அவருடைய எஞ்சினீர்மார் அவ்விரு கடலின் நீர்மட்டம் ஒன்றைவிட மற்றது முப்பது அடி அதிகமாயிருக்கிறதென்று தவறுபட அளந்து சொன்னபடியால், அவர் தமது எண்ணம் சித்திபெறுதென விட்டுவிட்டார்.

4. 1847-ஆம் வருஷத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ் அவுஸ்திரியா ராஜ்யத்தார் நில அளவையிற் தேர்ந்த சிலரைச் சேர்த்து, அவர்கள் மூலமாய் மேற்படி கடல்-களின் நீர்மட்டம் சமமாயிருக்கின்றதென நிச்சயித்-தனர். விடாமுயற்சியும் சூக்ஷமபுத்தியுமுள்ள பிரான்-சிய தேசத்தவராகிய படினண்ட் டி. லெஸ்லெப்ஸ் என்பவர், சுவேஸ் பூசந்திக்கு உடாக ஒரு கால்வாய் வெட்ட எகிப்து தேசத்து அதிபதியிடம் 1854-ஆம் வருஷம் உத்தரவு பெற்று, தம் கருத்தை நிறைவேற்றும் பொருட்டுத் தரணியசகாயம் செய்யும்படி 1858-ஆம் வருஷத்தில் ஜனங்களைக் கேட்டார். அதற்காக உடனே ஒரு வர்த்தக சபையார் கூடி அவ் வேலையை ஆரம்பித்-தனர். இந்த பாதனமும் அச்சரியமுமான வேலையை நடத்தும்பொழுது கெரிடும் இடையூறுகளை நீக்கும்படி-எற்ற யந்திரங்களைப் பிரான்ஸிய எஞ்சினீர்மார் நிர்-மாணித்துக் கொடுத்தனர். ஐரோப்பாவிலுள்ள பிர-ராஜ்யத்திலும் புகழ் படைத்த பெரியோர் ஆயிரக்-

கணக்கான பேர் கண்குளிரப் பார்த்து நிற்க, 1869-ஆம் வருஷம் நவம்பர்மீ 17-ந் தேதியில் இக் கால்வாயின் மூலமாய் வர்த்தகாரம்பஞ் செய்யப்பட்டது.

5. டாக்டர் கார்பெண்டர் என்பவர் எகிப்து தேசத்தை வர்ணிக்குமிடத்தில் சொல்வது : 'நாம் இக் கால்வாயின் வழியே போனபொழுது இருபக்கமும் உயர்ந்த கரைகளைப் பார்த்தோம். இவை கால்வாய் வெட்டின மண் கல் முதலியவற்றால் எற்பட்டனவை. இவற்றிற்கப்பால் எப்படி யிருக்குமோ என்றறிய விரும்பி, நாம் போன புகைக்கப்பலின் மேற்றளத்தில் ஏறிப் பார்த்தோம். எகிப்து தேசமிருக்கும் மேற்றிசையில் கண்ணுக்கெட்டாத தூரம் வியாபித்திருக்கும் பயிர் பச்சை யில்லாப் பாழ் நிலமானது ஜலத்தால் மூடப்பட்டிருந்தது. கீழ்த் திசையில் மணற்காடு பலஸ்தீனு வரைக்கும் எட்டியிருந்தது.

6. 'மறுபடியும் சற்றுத் தூரம் போனபின் கால்வாயின் ஒரு கரையிலிருந்து, மறுகரைக்குப் போக்கு வரவு செய்தற்கேற்ற ஸாதனமாகிய ஒரு வஸ்துவைக் கண்டோம் ; அதன பேர் 'மிதவைப்பாலம்.' இந்து இவ்விடத்தில் இருக்கவேண்டியதென்ன ? எகிப்துக்கும், சிரியா பலஸ்தீனுவுக்கும் போக்கு வரவு செய்த வர்த்தகர்களும் யாத்திரைக்காரர்களும் தொன்று தொட்டு வழங்கிவந்த மார்க்கம் சூவேஸ் கால்வாயினால் இவ்விடத்தில் தடைப்பட்டது. இம் மார்க்கமாகவே பூர்வத்தில் யாக்கோபின் சந்ததியார் தானியதவசம் வாங்கும்படி எகிப்து தேசத்துக்குப் போயிருக்கலாம். இவ்வாறு பழைமை பூண்ட இம்மார்க்கம், சூயஸ் கால்வாயினால் பயனற்றுப் போகாதபடி, தட்டையடி ஓடங்-

கரைச் சமைத்து அவற்றை வலிக்க நீராவியந்திரங்களை இருகையிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வேற்பாடு, புதுமை பழமையைத் தள்ளாது தழுவியதற்கு ஒரு சிறந்த திருஷ்டாந்தமாகும்.

7. 'அப்பால் நாம் பார்த்த விசேஷம் ஒன்று உண்டு; அதையுங் கேளுங்கள்; கால்வாயைக் காவல் செய்து, அதில் மரக்கலம் கரைதட்டுங்கால் சகாயம் புரிய ஏற்படுத்திய வேலையாட்களும் உத்தியோகஸ்தருமிருக்கும்படி கட்டிய வாசஸ்தலங்கள் கால்வாய் நடுகிலுமிருக்கின்றன. இவ்விருப்பிடங்களில் ஆகாரத்துக்குரிய பயிர்வகைகளும் கண்ணைக் கவரத்தக்க புஷ்பச் செடிகளும் வைத்து விருத்திபண்ணும் தோட்டங்களிருக்கின்றன. சுத்தஜலமென்ற பேருங் கிடையாத இம் மணல் வெளியில் சுந்தரவனங்களமைந்தது எவ்வாறு? இது மிகவும் ஆச்சரியமான காரியமே! சைட் துறைமுகந் தொடங்கி சுவேஸ்பட்டணம் வரைக்கும் எங்கே கிண்டினாலும் உவர் நீரொழிய உண்ணீர் மருந்துக்குங் கிடைக்காது. ஆகையால், நீல் நதிக்கரையில் உள்ள கைரோபட்டணம் முதல் இஸ்மேலியா நகரம் வரைக்கும் மேற்படி நதியினின்று தண்ணீர் போகும்படி ஒரு வாய்க்கால் வெட்டியிருக்கிறார்கள். பின்சொன்ன பட்டணம் பிரயாணிகர் தங்கிப் போவதற்கேற்றது. கைரோ தொடங்கி சுவேஸ்வரைக்கும் போடப்பட்டிருக்கிற புகைவண்டி வீதிக்கு வேண்டிய சுத்தஜலம் இஸ்மேலியாவினின்று குழாய் வழியாய் அனுப்பப்படுகின்றது. இவ்வாறு கால்வாயின் எப்பகுதிக்கும் வேண்டிய ஜலம் கொண்டு போகப்படுகின்றது. ஆகையால், எவ்வகைப் பயிரும் புஷ்பஜாதிகளும் வைத்-

தண்டாக்க அனுகூலம் ஏற்பட்டது. இல்மேலியாவில் சிரேஷ்ட எஞ்சினீர் ஒர் உத்தியோகம் அமைத்திருக்கிறார். அதில் மத்திம உஷ்ண தேசங்களுக்குரிய அநேக சிங்காரமான செடிகளும் கொடிகளும் ஓங்கித் தழைத்து வளர்கின்றன.'

8. 'தரைப்பாதை ஏற்படுத்துமுன் சுவெஸ் லக்ஷணமான கட்டடங்களில்லாத விகாரமான ஒரு சிறு பட்டணம். எகிப்து தேசத்திற்கும் கீழ்நாடுகளுக்கும் போக்கு வரவு செய்யும் மார்க்கத்தில் இருந்தபடியால் அதில் வியாபாரம் சிறிது நடக்க இட மிருந்தது. மேற்படி பாதை ஏற்பட்டபின் அப்பட்டணம் திருத்தமடைந்து அநேக வர்த்தகரும் காரியக்காரரும் தங்கி வசிப்பதற் கேற்றதாயிற்று. அதைச் சுற்றிலும் விசாலமான வெளி தவிர வேறொன்றும் இல்லை. போஜன பதார்த்தங்களும் தண்ணீரும் வெகு தூரத்திலிருந்து அங்கே கொண்டுவர வேண்டும்.

9. சுவெஸ் பட்டணத்தில் நாம் வேறொரு மாகலத்திலேறி அப்பேர்கொண்ட குடாக்கடலிற் சென்றோம். இக்குடா சமுத்திரத்தின் வடபாகத்திலிருக்கும் இரண்டு சாகைகளில் குடசாகை. இதன் நீளம் 190 மைல். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து தம் தேசத்துக்கு மீண்டு போனபொழுது செங்கடலில் நடந்து போனார்கள் என்று சொல்லியிருக்கிறதே, அவர்கள் தாண்டின இடம் இந்தச் சாகையின் வடபாகமென்று அநேகர் எண்ணுகிறார்கள். இந்தச் சாகையானது வடக்கிலிருந்து அநேக மைல்தூரம் தூர்ந்து தூர்ந்து வருகிறபடியால், மேற்படி ஜாதியார் போன-

விடம் இப்பொழுது மணலால் மூடுண்டு இருக்கலாம்-போலும்.'

10. சூயெஸ் கால்வாய் 72 மைல் நீளமும், 330 அடி அகலமும், 20 அல்லது 26 அடி ஆழமும் உள்ளது. இது தூர்ந்துபோகாமல் பாதுகாத்து வந்தால், இத் தேசத்திற்கும் சமைக்கும் உண்டாயிருக்கின்ற சம்பந்தமும் வர்த்தக வியாபாரங்களும் மேன்மேலும் ஓங்கி வளரும். இதனுண்டாகும் நன்மையை நாம் அளவிட்டுக் கூற முடியுமா?

5. திமிங்கிலம்

பிராணி வர்க்கத்தில் உருவிற் பெரியது திமிங்கிலமே. விலங்கினத்தில் பருத்த உருவமுள்ள வேழத்தைப் போலும், ஊர்வனவற்றில் பருத்த முதலையைப் போலும், பறவைகளில் பருத்த நெப்பறவையைப் போலும் திமிங்கிலத்திற்கு உருவத்தால் ஒப்பிட்டு உரைத்தல் ஒருகாலும் ஒவ்வாது.

2. பண்டைக் காலத்தில் திமிங்கிலத்தை மீனினத்திற் சேர்த்து, அதனைப் பருத்தமீன் மச்சமாகவே மதித்து வந்தனர். திமிங்கிலம், தோற்றத்தில், பெரும்பாலும் மிகப் பெரியதோர் மீனை ஒத்திருப்பினும், அது மீனினத்திற் சேர்ந்ததன்று.

3. திமிங்கிலம் விலங்கினத்திற் சேர்ந்ததன்று காம் சொல்லப் புகுவோமாயின், அதனைக் கேட்போர் பெரிதும் வியப்புத் தோன்றுமற் போகாது. ஆயினும், அதனை மச்சம் என்று காட்டுவதற்குக் காட்டக்கூடிய ஆதாரங்களை விட, விலங்கென்று விளக்குவதற்கு அமைந்துள்ள ஆதாரங்கள் மிகப் பலவாம். இதனை நிரூ-

பிக்க, மீனினத்திற்குரிய இயல்புகளில் திமிங்கிலத்தின் தன்மை எவ்வளவு மாறுபட்டிருக்கின்றது என்பதை இங்கு எடுத்துக் காட்டுவோம்:

4. திமிங்கிலம் குட்டி போடும்; மீனே முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கும். திமிங்கிலத்திற்கு உதிரம் உஷ்ணமாயிருக்க, மச்சத்திற்கு அது தண்ணென்று



இருக்கிறது. திமிங்கிலத்திற்குத் தேகமுழுதும் மிருதுவான சருமம் அமைந்திருக்க, மச்சத்திற்குச் செதில்களே நிறைந்திருக்கின்றன. திமிங்கிலம் நீர்ப்பாப்பிற்கு மேலே வந்து, இரத்தாசயத்தின் முயற்சியால் மூச்சு விடும்; மச்சமோ தண்ணீர்க்குள்ளேயே தங்கி மூச்சு விடும். திமிங்கிலத்தில் ஆணைக் கடா என்றும், பெண்ணைப் பிணை என்றும், குட்டியைக் கன்று என்றும் கூறுவது மரபு; மச்சத்திற் கிறு பிராயமுள்ளது மீன் குஞ்சு

னப்படுவதன்றி, ஆண் பெண் என்னும் பேதத்தை விளக்கப் பெயர் வகையால் பேதம் எதும் இல்லை.

5. திமிங்கிலத்தின் தோல் கரு நிறமாய்த் தடித்திருக்கும்; வயிற்றுப் புறத்தில் மட்டும் அது சிறிது வெளுத்துக் காணும். அதன் தோலை அடுத்துச் சுமார் பதினைந்து அங்குல கனமுள்ள கொழுப்படை உடலை முழுதும் படிந்திருக்கும். இதனால்தான் திமிங்கிலம் நீரின்மீது மிதக்கவும், தன் தேகத்தை எப்போதும் உஷ்ணமாக வைத்திருக்கவும் வல்லதாயிருக்கின்றது.

6. திமிங்கிலத்தின் தலை மிகப் பெரியது. அது அதன் உடலின் மூன்றிலொரு பகுதிக்குச் சமம் என்னலாம்படி யிருக்கின்றது. இத்தகைய பெரிய மிருகத்திற்குக் கண்ணும், காதும் மாத்திரம் சிறியனவாயமைந்திருப்பது வியப்பே. திமிங்கிலம் சுவாசத்தை உள்ளே இழுக்கையில் நாசித் துவாரத்தில் நீர் நிரம்பி நிற்குமாதலின், அதனை வெளிப்படுத்தும் காலத்தில் நீர் மொக்குளிக்கும். திமிங்கிலத்தின் வாய் பெருத்து அகன்றிருக்கும். வாயில் பற்களுக்குப் பதிலாகச் சிப்பு போன்ற ஒரு வகை எலும்பு மேலுதட்டினின்றும் நீண்டு தொங்கும். அந்த எலும்பு நெய்யரி போன்று இருக்கின்றது. திமிங்கிலம் தன் வாய் நிரம்பக் கடல் நீரை முகந்துகொண்டு, நெய்யரிபோன்ற அப் பற்களின் மூலமாய் நீரை மட்டும் வடித்துவிட்டு, அந் நீரோடு கலந்துள்ள ஜந்துக்களைத் தனக்கு உணவாகக் கொள்ளுகிறது.

7. திமிங்கிலத்தின் வாய் அகன்று மிகப் பெரிதாயிருப்பினும் அதன் தொண்டை, நீர் வாழ்வனவற்றில் சிறிய பிராணிகளை மட்டும் ஒன்றுசேர்த்து ஒரு கவள-

மாக விழுங்கத் தக்கவாறு மிகவும் குறுகியிருக்கின்றது. நிமிங்கிலத்தின் கண்களுக்கருகில் இரு மருங்கிலும் எறக்குறைய ஒன்பதடி நீளமும், நாலடி அகலமும் உள்ள குறுகிய கால்கள் உண்டு. நிமிங்கிலத்தின் வால் சுமார் இருபதடி நீண்டு மிக்க வலிமை யுடையதா யிருக்கின்றது. மீன் தன் வாலை மேலும், கீழும் அசைப்பதுபோல் நிமிங்கிலம் அதனை அவ்வாறு அசைக்க இயலாது.

8. நிமிங்கிலம் சாதாரணமாய் நீர் மட்டத்திற் கிடந்து நித்திரை செய்யும். அஃது அவ்வாறு துயிலும்போது, ஒரு கருங்கற் குன்று நீர்மட்டத்தில் நிலைத்திருப்பதுபோற் காணப்படும். அது, தன்னை யவரேனும் எதிர்த்தால், விரைந்து நீருக்குள் மூழ்கி, அங்கே சிறிது நேரம் தங்கி யிருந்து, முன்னிருந்த இடத்திற்குச் சற்று அப்பால் போய் மேலெழுந்து வந்து மூச்சுவிடும்.

9. நிமிங்கிலத்தை வேட்டையாடுவோர், அதற்கென்றே நிருமிக்கப்பட்டுள்ள மரக்கலங்களி லேறி, குளிர் மிகுந்துள்ள வடகடலை நாடிச் சென்று, எட்டு போன்ற பெரிய தூண்டில் முட்களை நிமிங்கிலத்தின் மீது எறிவார்கள். அன்றி, அம்முட்களைத் துப்பாக்கியின் வாயிலமைத்து, இலக்கு வைத்துச் சுட்டு, அதன் உடலிற் பாய்ச்சிக் கொல்வதும் உண்டு. அவ்வாறு எறியும் தூண்டில்களின் இறுதியில் உறுதியான கயிற்றை நிதானித்துக் கையிற் பற்றிக்கொண்டிருப்பார்களாதலால், நிமிங்கிலம் தப்பியோட முடியாது. அது மறுபடி மூச்சு விடுவதற்கு வெளிவருங்கால் மறும் எட்டிகளை எறிந்து அதைக் கொன்றுவிடுவது வழக்கம்.

10. திமிங்கிலத்தின் உடலில் தோலே அடுத்துப் படிந்துள்ள நிணம் மெழுக்குவார்த்தி செய்ய மிகவும் உபயோகமாகின்றது. அதன் எலும்பும் வாய் முள்ளும் அதிக விலையேறப் பெற்றவை. சுமார் அறுபதடி நீளமுள்ள திமிங்கிலம் ஒன்று ஆயிரத்திருநூறு ரூபாய் விலைமதிப்புள்ள பொருள்களாகக் கொடுக்குமென்றால் அவற்றைத் தேடி வேட்டையாடிப் பொருளிட்டுமாறு அநேகர் முற்படுகின்றனர் என்பது வியப்பாகுமா?

6. மனோ ராஜ்யம்

பாலுடரிற் சிலர் தம் நிலையையும், தாம் செய்து முடிக்க முயலும் காரியத்தின் வன்மையையும் சற்றும் ஆராய்ந்தறியாமல், தம் மனம்போனவாறே அக்காரியத்தை எளிமையாக எண்ணிக் காரியசித்தி அடைந்து விட்டவர்போல் களிப்படைவார்கள். இத்தகைய எண்ணத்திற்கே 'மனோ ராஜ்யம்' என்று பெயர். மனோ ராஜ்யம் செய்வது பெரும்பாலும் வறியருக்கே வழக்கமாயிருக்கின்றது. நாம் முயலும் காரியத்தைப்பற்றி எளிமையாக எண்ணுவது மடமையாகும். ஒரு சடங்கைச் சாங்கோபாங்கமாகச் செய்து முடிக்க முயலுவோன், தன்வலி, வினைவலி, மாற்றுன்வலி ஆகிய மூன்றையும் உணர்ந்து, முடிக்க முயலுதல் வேண்டும். அவ்வாறு செய்யாது தன் மனஞ்சென்ற வழியே மனோ ராஜ்யம் செய்து அழிந்துபட்ட அல்நாஷர் என்பவன் கதையை ஈண்டுக் கூறுவோம்:

2. அல்நாஷர் என்பவன் அரபி தேசத்திலிருந்த ஒரு வணிகன் மகன். அவன் இளமையில் உண்பதும் உடுப்பதுமே யன்றி, வேறொன்றுஞ் செய்தறியான்.

தந்தை யிட்டுத் தனத்தைக்கொண்டே தனபதியாக வாழலாம் என்பது அவனது உள்ளக்கருத்து. அவன் தந்தையும் அவனைத் தக்க வழியில் பயிற்றுமல், தனி மகனென்று சீராட்டி வளர்த்து வந்தான். அல்நாஷ-ருக்குச் சுமார் இருபது வயதாகும்போது அவன் தந்தை

இறந்துபட்டான். 'செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு' என்பது போல, தந்தையைச் சமாதி செய்த பின்னர், அவன் வரவு செலவுகளை வகையுளி செய்து பார்த்ததில், பிதுரார்ஜிதமாகத் தனக்கு நேரக்கூடிய

ரூபாய் ஒரு நூற்றுக்குமேல் ஒன்றும் இல்லை யென்பது கண்டான். கண்டதும், அல்நாஷர் மிகவும் மனம் உலைந்து, 'அந்தோ யாது செய்வோம்!

துள்ளித் திரிகின்ற காலத்தில் என்றன் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்தில னேதந்தை யாகிய பாதகனே'

என்று, தான் கல்லாத குற்றத்தை தன் தந்தையின்மீது எற்றி வருந்திக்கொண்டிருந்தான்.

3. பின்பு, அவன் ஒருவாறு தேறி, 'இனி என்ன செய்வது, உள்ளதைக்கொண்டே ஊராளவேண்டும், நூற்றுக்குமேல் ஊற்று என்பார்கள்; அதனால், இந்த நூறு ரூபாய்களைக் கொண்டே நாம் விருத்தி அடைய வேண்டும். அதற்குக் கண்ணாடி பாத்திரங்களைக் கொண்டு, வியாபாரஞ் செய்தலே ஏற்றது' எனக் கருதி, தன் கையிலுள்ள மூழுத் தொகைக்கும் கண்ணாடிக் கலங்கள் வாங்கி, அவற்றை அகன்றதொரு கூடையில் அடுக்கி, கடைவீதிக்குவந்து, அங்கோர் அறையை வாடகைக்குப் பேசி, அதில் தன் வியாபாரத்தைச் செவ்வனே செய்துவரச் சித்தை கொண்டான். பின்பு அவன், அந்த அறையில், கண்ணாடிக் கூடையைத் தன் கால்மாட்டில் வைத்துக்கொண்டு மேல்நோக்கி ஆலோசிக்கலானான்.

4. 'என்ன, இப்போது நம்மிடம் நூறு ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் உள்ளன; இவற்றில் ஒவ்வொன்றையும் கொள்விலைக்கு இரட்டிப்பாக விற்போமாயின் மொத்தம் இருநூறு ரூபாய்க்குப் பஞ்சம் இராது. பிறகு இருநூறு ரூபாய்க்குச் சாமான் வாங்கி, அவற்றையும் அவ்வாறே விற்போமானால், நானூறு ரூபாயாகும். மற்றும் இவ்வாறே நானூறு நாலாயிரமாகும்;

காலாயிரம் நாற்பதிறுபிடாகும். அக்காலத்தில் கண்ணுடி வியாபாரத்தை அறவே யொழித்து, இரத்தின வியாபாரத்தைக் கைக்கொள்ள வேண்டும். அதிலோ ஒன்றுக்குப் பத்தான லாபம் கிடைக்குமென்பதில் ஐயமில்லை. அப்பொழுது நாம் இரத்தின வியாபாரிபாகி, இறைவனிலும் ஏற்றமடைவோம். அப்போது மன்னர் பலர் நம்மை நாடிவந்து வர்த்தகம் புரிவர். மன்னர் மாத்திரமா, அவர்தம் மைந்தர் பலரும் வருவர்; அவரோடு மாதர் பலரும் வந்தடைவர். அவர்களுள் நமது மன்னன் புதல்வியே நம் செல்வப் பெருக்கைக்கண்டு நம்மை மணங்கொள்ள மனங்கொள்வாள். பின்பு அவள் தன் உள்ளக் கருத்தைத் தன் சேடியர் மூலமாக நமக்குத் தெரிவிப்பாள்: அக் காலத்து நாம் பெருமிதத்தோடு அதற்கு உடம்படுவதாக உத்தரம் அளிக்கலாம்.

5. எங்கள் இருவர் ஒருமைப்பாட்டைக் கண்ட காவலனும் உளங்களித்து கடிமணைக் கடிதின் முடிப்பான்; அரசிளங்கன்னி நம்வசத்தள் ஆவள். அவளைப் பெரிபதோர் அரண்மனையில் பலவகைய விநோதப் பொருள்களுடன் அமைத்து வைப்போம். அவள் வெளியில் தலை காட்டவும் விடலாகாது. பின்னர் வாரத்திற்கு இருமுறை சென்று அவளைக் கண்டு திரும்புவோம். அவள் நம் பெருமிதத்தைக் கண்டு பெரிதும் அஞ்சுவாள். தோழியர் பலர் நம்மைச் சூழ்ந்து வேண்டுவர். அவர்களை ஒரு பொருட்டாகக் கவனியாது திரும்பி வருவோம்; பின்னர், அரசனும், அவன் மனைவியும் தம் புத்திரியை அழைத்துக்கொண்டுவந்து நம்முன் விட்டு, அவளை அன்போடு அங்கீகரிக்குமாறு வேண்டுவர். நாம் அதனைக் கவனி-

யாது, அவன் மகளை நம் எதிரினின்றும் அகலுமாறு இப்படித்தான் எட்டி உதைப்போம்' என்று, தன் எதிரிலுள்ள கூடையை எண்ணமின்றி உதைத்தான். அந்தோ, எண்ணமெல்லாம் பாழாயின! கண்ணுடிக் கூடை காலுதைப்பட்டு உருண்டுபோக, உருக்க ளெல்லாம் பல துண்டுகளாக உடைந்துபோயின.

6. பார்த்தான் அல்நாஷர், 'ஆஹா! என்ன காரியஞ் செய்தோம், மஞ்ஞை ராஜ்யம் செய்துவிட்டோமே! முதலுக்கே மோசம் வந்ததே!' என்று முகத்தில் கைவைத்து அழுது, கண்ணீருங் கம்பலையுமாய் நின்றான். அதுகண்டு அயலிலிருந்த வியாபாரிகள், அவனது அறியாமைக்குப் பெரிதும் இரங்கி, தத்தமக்கு இயன்ற வாறு சிறிது பொருளுதவிசெய்து, அவனை நல்வழிப்படுத்தினர். அவனும், அதுமுதல் தன் வீண் எண்ணங்களை விட்டு, வர்த்தகத்தில் வந்தது கொண்டு வயிறு வளர்த்து, வாழ்ந்து வந்தான்.

7. வாய் மதத்தால் வந்த கேடு

அரபி தேயத்தின்கண் அரசுரிமை நடத்திய மகம்மதிய மன்னருள், மிக்க புகழ் வாய்ந்த ஹாரூன் அல்ராச்சிட் என்னும் அரசன் ஆண்டுவந்த காலத்தில், பாக்தாத் நகரில் ஆலிசாக்கல் என்னும் பெயர் பெற்ற அம்பட்டன் ஒருவன் இருந்தான். அவன் தன் கண்ணைக் கட்டிக்கொண்டே, பிறருக்குத் தீங்கு ஒரு சிறிதும் நேராமல், கௌளாஞ்செய்து, மீசை, தாடி முதலியவற்றையும் செவ்வனே ஒதுக்கவல்லவன் என்று லோகப் பிரசித்திபெற்றிருந்தான். இவ்வாறு அவன் கைவன்மையையும், திறமையையுங் கண்ட அந் நகர

மாந்தர் அனைவரும் அவனிடமே கைளரம் செய்து-கொள்ள ஆர்வமுற்றடைவர். அதனால், அவன் செல்-வத்திற் சிறந்த சீமானுயினுன். செல்வ மிகவே, நாவி-தனுக்குச் செருக்கு மிக்கது. எளியோரையும், மத்திய அந்தஸ்து உடையோரையும் தீண்டுதலும் கவுரவக்-குறைவென்று வெறுத்து, மேட்டுக்குடிகளுக்கே வேலை செய்வதென்னும் நியமத்தை மேற்கொண்டிருந்தான்.

2. அக் காலத்தில், பாக்தாத் நகரில் விறகு-கிடைப்பது அருமையாயிற்று. கிடைப்பினும், விலை அதிகம் கொடுத்துப் பெறவேண்டும். ஆலிசாக்கல் வீட்டுக்கு விறகு மிகுதியுஞ் செல்லுமாதலின், அண்-மையிலுள்ள காட்டகத்தில் கட்டை வெட்டி வயிறு வளர்க்கும் வறியோர், தம் சுமைகளை அம் மயிர் வினைஞ-னுக்கே விற்பனைசெய்யக் கொண்டுபோவது வழக்கம். அவனும், அச் சுமைகளைத் தட்டாமல் வாங்கிக்கொண்டு விலை கொடுத்து அனுப்புவான்.

3. ஒரு நாள், எளிய கட்டைவெட்டி யொருவன் நெடுந்தூரஞ் சென்று, மெய் வருந்தி, இரண்டு சுமைக்-கான நல்ல கட்டைகளை வெட்டி, தன் கழுதைமீது அமைத்துக்கொண்டு, அந்த நாவிதன் வீட்டை நாடிச் சென்றுன். அவ்வறியன் தன் தொழிலில் புதியோ-னதலால், ஆலிசாக்கலின் குணத்தை அறியானுயினுன். கழுதைமீதிருந்த விறகுச் சுமையைக் கண்டதும், அம்-பட்டன், 'இவற்றின் விலை யாது?' என்று வினவி, ஒருவாறு விலையை முடிவு செய்துகொண்டான்.

4. விறகுவெட்டியும், அந்த விலைக்கு உடன்பட்டு, கழுதைமீதிருந்த சுமைகளை இறக்கிய பின்னர், அவற்-

றின் விலையின் பொருட்டுக் கையேந்தினன். அது கண்ட நாவிதன், 'என்ன, நீ இன்னும் விறகு முற்றும் இறக்கவில்லையே, கழுதைமே லிருந்த கட்டை முழுதுக்கு மன்றே விலை தீர்த்தேன்; நமது தீர்மானப்படி கழுதைமீதுள்ள சேணமாகிய கட்டையும் எனக்குச் சேரவேண்டியதேயன்றே?' என்று கூறி, மரத்தாலாகிய கழுதைச் சேணத்தையும் பற்றி யிழுத்தான். விறகு-வெட்டி அந்த அடாத செயலைக் கண்டு, எக்கமும் ஆச்சரியமுங் கொண்டு, 'ஏதையா, நமக்குள் இத்தகைய உடம்படிக்கை நடந்திலையே, இதுகாறும் எங்கும் நடந்தறியாத விஷயத்தின் பொருட்டு வீண் வழக்குத் தொடுக்கின்றீரே!' என்று மறுத்தான்.

5. மறுத்தும், ஆலிசாக்கல், மிக்க ஆற்றலுள்ளோனுதலால், அவ் வேழைக் கூலியாளை நெட்டித் தள்ளி, கழுதைமீது இருந்த கட்டைச் சேணத்தைக் கவர்ந்துகொண்டு, வெருட்டி யனுப்பினன். என்னசெய்வான் அவ் வேழைமனிதன்! அவன் நேரே நியாயஸ்தலத்தை யணுகி, நடந்தவை யனைத்தும் நவின்று முறையிட்டான். அந்த நியாயாதிபதி அம் மயிர்விணஞனிடமே கையூளரம் செய்துகொள்பவனுதலால், கட்டைவெட்டியின் விண்ணப்பத்தை அசட்டைசெய்து தள்ளிவிட்டான். 'கட்டைவெட்டி, அதனினும் பெரிய நியாயஸ்தலத்தை நாடி முறையிட்டான். அங்குள்ளநியாயாதிபதியும், அந்த அம்பட்டனிடம் அன்புள்ளோனுதலால், விறகுவெட்டியின் விண்ணப்பத்தைச் சற்றுங் கவனியாதொழிந்தான். ஒழியினும், வறியோன் தன் முயற்சியிற் சிறிதுங் குன்றுமல், அதனினும் உன்னத ஸ்தானத்தில் மனுப் பண்ணிக்கொள்ள, அந்த நீதிபதி தீர யோசித்து,

ROJA PUBLICATIONS
47, HOUSE STREET
KOTTAPURAM - 106

கட்டைவெட்டியின் வழக்கு மிகக் கடினமானதாகக் காணப்பட்டமையின், அதனைத் தான் ஏற்று விசாரிக்க இயலாதென்று மறுத்துக் கூறி யனுப்பிவிட்டனன்.

6. அதனல் விறகுவெட்டி எக்கங்கொண்டும் ஊக்-கங் குன்றுமல், எவ்வாறுயினும் நியாயம் பெறவேண்டும் என்று நினைத்து, வல்லவன் ஒருவனைக்கொண்டு மனு-வொன்றெழுதி சுக்கிரவாரத்தன்று, அரசன், பள்ளிவா-யில் சென்று வணக்கம் முடித்துத் திரும்புங்காலத்தில், எதிர்நின்று முழங்காற்படியிட்டு, விண்ணப்பத்தை நீட்-டினன். அரசன் வறியோர் எழுதும் விண்ணப்பங்களைச் சிறிதும் விடாது வாசிக்கும் இயல்புடையவன். ஆதலின், விறகுவெட்டியை விளித்து, அவனது முறைப்பாட்டை வினவினன். அவ் வறிஞன், தனக்கும் மயிர் வினைஞ-னுக்கும் நேர்ந்தன யாவும் விவரமாகக் கூறினன்.

7. விறகுவெட்டியின் முறைப்பாட்டைக் கேட்ட வேந்தன், 'ஐயா, அம்பட்டன் பக்கத்தில் வார்த்தைபல மிருக்கின்றது ; உன் பக்கத்தில் நியாயபல மிருக்கின்றது. சட்டம் வார்த்தைபலத்தையே சாரும். உடம்படிக்கை-யும் உரையினல் கொள்ளவேண்டியதே, ஒழுங்கை எவ-ரும் தடுத்தலாகாது. அதனைத் தடுப்பதாயின் சட்டம் இருந்தும் பயனிலதாக முடியும். சட்டத்தின்படியே யாவரும் கட்டுப்பட்டு ஒழுகுதல்வேண்டும். அங்ஙனம் ஒழுகாவிடின் மக்களுக்குள் நம்பிக்கை யென்பது அற்-றுப்போகும். ஆதலின், ஆவிசாக்கல், தன் ஒப்பந்தப்-படி கட்டை யனைத்தும் அடையவேண்டியதே' என்று தீர்ப்புச் செய்து கட்டைவெட்டியைத் தன் அருகி லழைத்து, வேறொருவருக்குங் கேளாதபடி, ஏதோ சிற்சில விஷயங்களைச் சொல்லி அனுப்பிவிட்டான்.

8. கட்டைவெட்டி, மன்னனை வணங்கி, தன் வீட்டுக்குப் போய்விட்டான். பின்பு, சில நாள் கழித்துக் கட்டைவெட்டி, ஆலிசாக்கலை யடைந்து, தனக்கும், தன்னுடைய நண்பன் ஒருவனுக்கும் கௌளரம் செய்ய வேண்டுமென்று பேசி, கூலி முடிவுசெய்துகொண்டான். அம்பட்டனும் அதற்கு உடம்பட்டு முதலில் விறகுவெட்டியை யிருத்தி, நன்றாக கௌளரஞ் செய்த பின்பு, 'சிகேசன் எங்கே?' என்று வினவினன். வினவலும் விறகுவெட்டி, 'இதோ அருகில்தான் இருக்கின்றான்; தக்ஷணமே அழைத்து வருகின்றேன்' என்று சொல்லி, வெளியிலேகி தான் கட்டி வைத்திருந்த கழுதையை அவிழ்த்து நடத்தி வந்து, அம்பட்டன் முன்னர் விடுத்து, 'கௌளரஞ் செய்' என்று கூறினன்.

9. அது கண்ட அம்பட்டன் ஆச்சரியப்பட்டு, 'இதற்கா கௌளரஞ் செய்ய வேண்டும்! நன்று, நன்று! நான் உன்னைத் தொட்டு கௌளரஞ் செய்ததே தகாத காரியம். அதனால் எனக்கு நேர்ந்த அகௌரவத்திற்கோ அளவில்லை. மற்றும் இந்தக் கழுதைக்கும் கௌளரஞ் செய்ய வேண்டுமா! நீ இப்போதே ஓடித் தப்பினை லாயிற்று, இன்றேல், உன்னோடு உன் கழுதையையும் யமலோகத்திற்கு அனுப்புவேன்' என்று வெருட்டினன்.

10. விறகுவெட்டி, அவனோடு வேறொன்றும் கூறாது விரைந்து சென்று, வேந்தனை யடைந்து, அம்பட்டனுக்கும் தனக்கும் நடந்த உடம்படிக்கை முற்றும் விண்ணப்பம் செய்தான். அதுகேட்ட அரசன், காவலரை விளித்து, 'உடனே ஆலிசாக்கலை அழைத்து வாருங்கள்; அவனோடு அவனது ஆயுதங்களையும்

கொண்டு வரச் சொல்லுங்கள்' என, ஏவலர் விரைந்து சென்று அவனை அழைத்து வந்தார்கள்.

11. அரசன் அம்பட்டனைக் கண்டு, 'ஏன் இந்த மனிதனது நண்பனுக்கு கெடுளரஞ் செய்ய மறுத்தாய்? நிநேகனுக்குஞ் செய்வதாக உடன்பட்டா யன்றே?' என்றான். ஆலிசாக்கல், முழங்காற்படியிட்டு வணங்கி, 'ஆண்டவரே, உடன்படிக்கை உண்டென்பது உண்மையே; ஆயினும், இதுகாறும் கழுதையை நண்பனாகக் கொண்ட மனிதர் இவ் வுலகத்தில் ஒருவரும் இலரே' என்றான்.

12. அரசன் அதைக் கேட்டு, 'ஆமாம், நீ சொல்வது சரியே; ஆயினும், விறகுச் சுமைகளை மாத்திரம் யாவரும் விலை பேசி வாங்கிக்கொள்வார்களே யன்றி, அச் சுமைகளை யேற்றிவந்த கழுதையின் சேணத்தையும் சேர்த்து வாங்கிக்கொள்வது வழக்கமில்லையே; உன் வழக்கில் நீ மன்றாடியது போலவே, கட்டை வெட்டியும் தன் வழக்கில் தான் மன்றாடுகிறான். ஆதலால், உடனே கழுதைக்கும் கெடுளரஞ் செய்' என்று உறுத்துக் கூறினான்.

13. அம்பட்டன், தப்ப வழியில்லாமை கண்டு, அரசன் சமுகத்திலேயே கழுதையின் தேகத்தைச் சவுக்-காரத் தண்ணீரால் நனைத்து, பதமாகக் கத்தியினால் உடல் முழுதும் வழித்துவிட்டான். இதனைக் கண்டோ ரனைவரும் பெரிதும் நகைத்து, அம்பட்டனைப் பரிகசித்-தனர். அம்பட்டன், மானங் குலைந்து, தான் முன்பு கொண்டிருந்த இறுமாப்பனைத்தும் ஒழித்தான். குடி-களும் அரசனது நீதி நிலைக்கு வியந்து அவனிடம் அன்புசெய்து வாழ்ந்திருந்தனர்.

8. சூது விரும்பேல் — I

'தாமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தலையவிழப் — பூமடந்தை
தன்னுட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டும் நாடு'

எனப் புலவர்கள் புனைந்து கூறுஞ் சிறப்பினையுடையது நிடதநாடு. அந்த நாட்டின் தலைநகராய் விளங்கிய மாவிந்த நகரத்தை, நளனென்னும் நரேந்திரன் தனது அரசிருக்கையாகக் கொண்டு செங்கோல் செலுத்தி வந்-தான். அம் மன்னன் தன் குடிகளுக்கு நேரும் இன்ப துன்பங்களைத் தன்னுடையனவாகக் கொண்டு அரசு புரியும் அருங்குணமுள்ளவன்.

2. எவ்வகையினும் நாட்டிற்கு நன்மையே புரியும் நற்குணம் வாய்ந்த நளன், ஒரு நாள் காலைப் போக்கு நிமித்தம் தன் உய்யான வனத்தை யடைய உள்ளங் கொண்டான். அப்போது அமைச்சர் முதலாயினோரும் அரசனோடு போயினர். மன்னன் தன் மனமகிழ உபவ-னத்தில் உலவியபின்பு, ஒரு தடாகத்தை யடைந்தான்.

3. அக் காலத்தே, தாமரை மலரில் அரசவன்னம் ஒன்று அமர்ந்திருக்க நளன் கண்டான். அந்த ஓவியத்தின் வெள்ளிய சிறகும், செவ்விய தாளும் வேந்தன் மனத்தை முற்றுங் கவர்ந்துகொண்டன. எவலாளர், மன்னனது உள்ளக் குறிப்பை யுணர்ந்து சென்று, அவ் வன்னத்தைப் பற்றிக் கொணர்ந்து கொற்றவனிடம் கொடுத்தனர்.

4. பார்த்திபன் அந்த அன்னத்தைப் பரிந்து பற்றி முற்றும் பன்முறை நோக்கி, நோக்கி, 'ஆஹா! இப் பறவையின் சிறகு வெள்ளி பொலிந்து விளங்குகின்றது' எனப் பற்பலவாறு புகழ்ந்து உரைத்தான். அச்சமென்பதை யணுவளவு மறியாத அப் பறவை, மன்னன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, தன் சிறகில் போலியாகக் காணப்படும் வெண் பொன் காரணமாக அவன் தன்னைக் கொலை புரிவான் என்று கருதி ஏங்கி, 'மன்னர் மன்ன! செல்வத்திற் சிறந்த சீமானாகிய நினக்கு

'சிறையொளிர் பொன்னிறை செல்வ நல்குமோ
அறைகடல் பனியினுல் நிறைவ தாங்கொலோ
கரைகெழு வேவினுய் கருத்தி னுள்ளுற
நிறைதரு விழைவினை நீத்தல் வேண்டுமால்'

அன்றி, எதிர்த்தோரை வாட்டலே இறைவர் கடமை. அடைந்தோரை அடர்த்தல் அடாது. நீ இத் தருமமார்க்கத்தைத் தப்பி, என்னைக் கொலை புரிவாயேல், நம்பினோரை நாசஞ் செய்த பாவம் நின்னைச் சேரும். ஆதலால், நீ என்னை விட்டுவிடுவையேல், என்னுல் ஆவதோர் நன்றியை, மறவாமல் நினக்குப் புரிவேன். நின் நட்பையும் மறவேன்' என்று வேண்டிற்று.

5. அன்னத்தின் இரக்க மொழிகளைக் கேட்ட அரசன், அப் பறவையை உற்று நோக்கி, பரிந்து பகர்வான் ; 'நன்னயம் வாய்ந்த அன்னமே! நின் மெய்வனப்பை நோக்க, நின்னைப் பற்றினேனே யன்றி, கொலை புரியும் கொள்கையா லன்று. நீ மனம் வருந்தாதை ; நின்னை இன்னே விட்டுவிடுகின்றேன். நீ விரைந்து சென்று இன்புற்று வாழ்வையாக' என விட்டுவிட்டான். விடுபட்ட அன்னம் பறந்து சென்று தாமரையில் தங்கி, தன் அலகினால் சிறகுகளைக் கோதி, சிறக்க வமர்ந்து, வேந்தனை நோக்கி விளம்புகிறது. 'கருணை வள்ளால்! என்னை ஒரு பக்ஷியென்று இகழாமல், என் வேண்டுகோளுக் கிரங்கி, யான் விரும்பியவாறே விடுத்தனை. ஆதலால், நினக்கோர் நன்மை புரிய நாடுகின்றேன், அஃதென்னை யெனின், விதர்ப்பதேசத்தை நன்னெறி வழாமல் அரசு புரியும் வீமன் என்னும் வேந்தர் பெருமான், தவம் பல புரிந்து ஒரு தையலைப் பெற்றான். அவள் தமயந்தி என்னும் பெயரினள். அவளது நற்குண நற்செய்கைகளை எடுத்துக் கூறுதல் யார்க்கும் எளிதன்று.

'நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா — வேற்படையும்
வாளுமே கண்ணு வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு'

என, அவளது இயல்பினைத்தும் எடுத்துக் கூறிற்று.

6. இவையனைத்தும் கேட்ட நளன் தமயந்தியின் கூட்டுறவையே நாடி நின்றான். அப்போது அவ்வரசவன்னம் நளனை நோக்கி, 'மன்ன, நீ இதன் பொருட்டு மனம் வாடுதல் வேண்டா. இதனை யான் விரைவில்

முடிப்பேன் ; என் திறத்தை இதனிற் காணலாம்' என்று பறந்து விரைந்து சென்றது. அது சென்ற சிறிது பொழுதிற் கெல்லாம், நளன்,

'இவ்வளவிற் செல்லுங்கொல் இவ்வளவிற் காணுங்கொல்
இவ்வளவிற் காதல் இயம்புங்கொல் — இவ்வளவில்
மீளுங்கொல் என்றுரையா விம்மினன் மும்மதநின்
றாளுங்கொல் யானை யரசு'

7. அரசனை அகன்ற அன்னம் விதர்ப்ப நாட்டை யணுகிற்று. ஆண்டு தமயந்தி தன் பாங்கியரோடு பூங்காவிற் புகுந்து, மலர் கொய்வாளாய்த் தனித்துச் சென்றனள். அப்பொழுது, அன்னம் அவளை யணுகி. 'பெண்மணி, தமயந்தி! நினக்கு வனப்பும், அவ் வனப்புக்கேற்ற குணமும் நன்கமைந்துள்ளன. இவை நல்லாரெருமனைளனைக் கூடிய காலத்தன்றே விளக்கமுறும். இன்றேல், மதியில்லா வானமும், கண்ணில்லா முகமும், தாமரையில்லாத் தடமும்போலப் பொலிவழியும். ஆதலின், நின் நிறை குணங்களுக்கேற்ற நாயக னொருவனை நாடி அறிந்து வந்திருக்கின்றேன். அவனே,

[யர்கள்

'செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான் மங்கை
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான் — மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு'

என்று, அவனது குணங்களைச் சிறிதும் விடாது எடுத்துரைத்தது. அது கேட்ட தமயந்தி, நளனை மணப்பதற்கே பெரிதும் நாட்டமுடையவளாய், தன் மனத்தை அவ் வன்னத்திற்கு வெளியிட்டாள். அது கேட்ட அன்னம் மகிழ்வுற்று, நளனையணுகி, நடந்தன யாவும் அவற்கு நவின்றது.

8. இது இவ்வாறுக, அன்னம் உரைத்த மன்னனை உன்னி உன்னி வாட்டமுற்ற தமயந்தி, அரண்மனையை யணுகி, ஒரு புறம் விசனமுற்று வாளா இருந்தனள். தலைவியின் வாட்டத்தைக் கண்ட சேடியர், விரைந்து சென்று தம் வேந்தனுக்கு அறிவித்தனர். அவன் தன் புதல்விக்கு நேர்ந்த மனவாட்டம் மணத்தின்பொருட்டானதாகும் என்றுன்னி, எண்டிசையிலும் மண வோலை போக்கினன். அது கண்ட அரசிளங்குமரர் அனைவரும், விதர்ப்ப நாட்டின் தலை நகரத்திற்கு வந்து பல்வேறிடங்களிலும் நிறைந்து இருந்தனர். அப்பொழுது, நளனும் ஆடை யணிகளால் தன்னை யலங்கரித்துக் கொண்டு விரைந்து சென்று, அந் நகரத்தில் ஒரு புறத்தி விருந்தனன்.

9. இது நிற்க, பாங்கியர் தமயந்தியை, புண்ணிய தீர்த்தங்கொண்டு மங்கலஸ்நானம் செய்வித்து, அவளது அழகை முற்றும் மறைப்பதேபோல், ஆபரணங்கள் அணிவித்து, திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆண்டு அரசிளங்குமரர் அனைவரும் ஆடையாபரண அலங்கிருதம் புரிந்து அமர்ந்திருந்தனர். அக்காலத்தே சேடியர் தமயந்தியை அழைத்துச் சென்று, தனித்தனியே ஒவ்வோர் அரசிளங்குமரனையும் சுட்டி, அவனது நாடு, பெயர், முறை முதலியவற்றைக் கூறிக்கொண்டேவந்து, முடிவில் நளனை யணுகி, 'பூங்கொடிபோல்வாய்! இம் மன்னர்மன்னன் நிடதநாட்டு நிருபன்; நளன் என்னும் நாமமுடையோன்' என்றனர். அப்பொழுது தமயந்தி, தன் மனத்தில் புதியதோர் உவகை பூப்ப, அவனது அடலுறுந் தோள்களுக்கு மணமாலை சூட்டினள். அது கண்ட மற்றை அரசிளங்குமரர்

பகல் விளக்கென்னப் பொலிவழிந்து தத்தம் நாட்டை நாடிச் சென்றனர்.

10. பின்னர் வீமராஜன் தன் புத்திரிக்கும், நளனுக்கும் திருமணம் இனிது முடித்தான். பின்பு, நளன் தன் மனைவியை உடன்கொண்டு மாவிந்தநகரத்தை யடைந்து, அன்புற்று இன்புற்றிருந்தான். அப்போது அவர்கள் தவப்பயனாக இரண்டு குழந்தைகள் பிறந்தன. பெற்றோர், தம் மக்கள் மழலையாடி மடநடை பெயர்ந்து விளையாடுவது கண்டு, களிப்பென்னும் கடலுள் ஆழ்ந்திருந்தனர்.

9. கல்ல மனைவி

ஸ்ரீராமர் கானகஞ் செல்லத் தம் தாய்மாரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, அந்தப்புரத்தை அணுகத் திரும்பினர். அங்கு ஜானகியார், சிறிது போழ்தில் ஸ்ரீராமர் மணிமுடி தரித்து, மண்ணுலகனைத்தும் மாண்புற அரசாளுவர் என்னும் மங்கலமொழியைப் பாராட்டி, மன மகிழ்வெய்தி, தம் பாங்கியரோடு பரிந்து விளையாடிக்கொண் டிருந்தனர். அக்காலத்தே ஸ்ரீராமர் அங்கு வர அத் தேவியார் தம் மணாளர் முகத்தில் விசனக் குறியைக் கண்டனர். அரசுரிமை தம்மை அகன்றதென்னும் களிப்பு, இராமர் மனத்திற் பெருகிக் கிடந்தாயினும், மனைவியைப் பிரிந்து செல்ல வேண்டுமே யென்னும் மனவாட்டம் அவரது முகத்தில் தோன்றுமற் போகவில்லை.

'அடித்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்'

என்னும் மறைமொழி என்றும் மறைபடா தன்றே?

2. காயகன் முகத்தைக் கண்ட ஜானகியார், விரைந்தெழுந்து வணங்கி, 'என் ஆருயிர்த் தலைவ! இப்படித் தேவர் வாடிய முகத்தைக் காடியது என்னை

மெய்த்திரு வந்துற்றாலும் வைதேயர் வந்துற்றாலும் [யோ?
தத்திருக்கும உள்ளத் துறவோனே — சித்தம்

வருத்தியவா றாது? அருள வேண்டும்' என்று வேண்டி நின்றார்.

3. அப்பொழுது, ஸ்ரீராமர், தமது தலையைச் சிறிது சாய்த்து, பின்னும் விசனமுற்றிருந்தனர். அது கண்ட ஜானகியார், ஸ்ரீராமரது பொவாய்க்கட்டையைத் தம் கரத்தால் தாங்கி, 'என் இன்னுயிர்த் தலைவ! கடல் நீர் முழுவதும் வெப்பங் கொண்டால் அதனை எந்த நீர் கொண்டு ஆற்றுவது? இரவியை இருளடைந்தால், அதனை எதனால் விளக்குவது? அதுபோல, தேவரீர் திருமுகம் வாடினால், தம்மைத் தேற்றுவார் யாவர்?' என இரங்கிக் கூறினர்.

4. அது கேட்ட இராகவர், 'பெண்மணீ! வருந்தாதை, துன்பமொன்றுமில்லை, யாவும் இன்பமே, என் தந்தையார், கைகேசியாகிய எனது சிற்றன்னைக்குச் சிறிது காலத்திற்கு முன் இரண்டு வரங்கள் வழங்கியிருந்தனராம். அந்த வரங்களோ அருளுமாறு இப்பொழுது என் சிற்றன்னை கேட்டனராம். அதற்கு எந்தை உடன்பட்ட பின்பு, என் சிற்றன்னை, அவ்விரண்டு வரங்களில் ஒன்று, "பரதனுக்குப் பட்டங் கட்டுவது, மற்றொன்று, ஸ்ரீராமனைப் பதினைந்து வருஷம் காட்டிற்கு அனுப்புவது" என்றனராம். என் சிற்றன்னை கேட்ட வரங்களை எந்தை மறுத்தற்கு இயலாமல் மயங்கி, ஒருவாறு தேறி, அவ்விரண்டு வரங்களுக்கும உடன்பட்டு,

என்னை ஆரணியத்திற் கேக அனுமதி யளித்தனர். அதனால், நாம் இருவரும் சிறிதுகாலம் பிரிந்திருக்க நேரும்' என்றனர்.

ப. அவ் வன்மொழியைக் கேட்ட வைதேகியார் முகம் வாடி, நிலைகுத்து நின்று, 'என்னை! தேவீர் காணகஞ் சென்றால், அடியாள் என் பிரிந்திருக்க வேண்டும்? தேவீர், அன்று, மிதிலா நகரத்தில் என்னைத் திருமணஞ் செய்தபோது, என் கரத்தைப் பற்றி, "வாழ்விலும், தாழ்விலும், இன்பத்திலும், துன்பத்திலும் பிரியேன்" என்று வேள்வித் தீயின் முன், பெரியோர்கள், தேவர்கள் முதலாயினோர் சாக்ஷியாக வாக்களித்திரன்றே? அஃதேபோல் அடியாரும் தேவீருக்கு உரைத்தது என் மனத்தை விட்டுச் சற்றும் அகலவில்லை. எனது வாக்குப் பிழையாமல் யான் தேவீரை எக் காலத்தும், எவ் விடத்தும் பிரியாதிருக்க உறுதிகொண் டிருப்பதை அறிந்தும், தேவீர் மட்டும் அவ் வுறுதி மொழியைப் பிழைத்து நடக்கத் தலைப்படுதல் தகுமோ? இச் செய்கை கீழ்மக்களுக்கும் உடம்பாடாகா தெனின், சுத்த வீர க்ஷத்திரியராகிய தேவீருக்கு உடம்பாடாவது எங்ஙனம்? பிரிவு என்பது நம்மில் எவ்வாறு நேரும்? மலரினின்றும் மணம் பிரியுமோ? தண்ணீரினின்றும் தண்மை பிரியுமோ? சுடரினின்றும் ஒளி பிரியுமோ? தீயினின்றும் வெம்மை பிரியுமோ? இவை தனித் தனியே பிரிதலுண்டாயின் அடியாளும் தேவீரைப் பிரிதலாகும். மற்றும் அடியாள் தேகமும், தேவீர் உயிருமாக இருக்க, உயிர் பிரியின் உடல் எங்ஙனம் இயங்கும்! இது தாம் அறியாததன்றே?' என்றனர்.

6. இவ் வுறுதி மொழிக ளனைத்தையும் செவியி-லேற்ற ஸ்ரீ ராமர் சிறிது பொழுது வாய் வாளாமை மேற்கொண்டு, 'பெண்மணீ, சீதா! நீ உரைப்பன யாவும் உண்மையே; ஆயினும், வனவாசம் என்னும் சொற்-பொருளை நீ யறியாயோ! மானிடர் சிறிது துன்பம் நேரினும் இதென்ன, வனவாசமா யிருக்கிறதே, என்ப-தைக் கேட்டதில்லையோ! நீ எனைநாடு கடுஞ்சுரத்திற்கு வருதல் எவ்வாறு இயலும் என்பதனையே பெரிதும் சிந்திக்கின்றேன். வாடையால் உன் மேனி வாடுமே! பனியால் உன் முகம் பாழ்படுமே! கற்களால் உன் கால்கள் கன்றுமே! அன்றி, உண்டியின்றிக் காய் கனி கந்தமூலாதிகளை யுண்டு, அடவி நீரருந்தி, புழுதியிற் பொருந்தி, வசித்தல் வேண்டுமே! மற்றும், நள்ளிரவில் கோளரி முழங்குதலும், வேழம் பிளிறுதலும், காடுகள் உறைதலும், கரி ஊளையிடுதலும் ஆகிய பேரொலிகள், நின் நெஞ்சத்தை அச்சுறுத்துமே; வெயினங்கள், காற்-றின் மிகுதியால் கிர் என்னும் ஒலியோடு, ஒன்றை-டொன்று உரசி, ஊழித் தீப்போல் எரியாநிற்குமே' என்ன செய்வாய் என்று என் மனம் எங்குகின்றது' என்றனர்.

7. இவையனைத்தும் ஜானகியாரைச் சற்றும் அச்-சுறுத்தவில்லை. பிரிவு என்பது ஒன்றே பெரிதும் அச்-சுறுத்தியது. அதுகொண்டு, அப் பெருமாட்டி ஸ்ரீ ராம-ரைத் தழுவி, 'என் கண்மணியன்ன காதல! அடியாள் எவ்வாற்றானும் பிரிய எண்ணங் கொள்ளற்க. அடி-யாள் தம்மைப் பிரிந்து அரண்மனையினிருப்பினும் அது அரணியமே. தம்மோடு கலந்து அரணியத்திலிருப்-பினும், அது அரண்மனையே. நாயக னில்லா விடத்து

நங்கையர் தம்மை ஆடை யணிகளாற் சுற்றிப் புனைந்து-கொள்வது யாவர் காணவோ? அவலம், அவலம்! தேவரீரோடு அடியாளிருப்பின், எவ்வகைத் துன்பமும் தோன்றுவதற்கு இடமில்லை; அன்றி, ஆளனைப் பிரிந்திருத்தல் அரிவையர்க்கு அழகன்று. மணாளரைப் பிரிந்த மாதர் மண்ணுலகதே மாண்பாகும். தேவரீர் என்னை ஒழித்துவிடும் நிமித்தம் பல் வகையினும் பயமுறுத்தல் கூடாது. யான் எவ் வகையினும் பிரிந்திலேன்; பிரியின் ஒரு கணமும் உயிர் தரியேன். இது நிண்ணம், நிண்ணம், இதுவே என் னெண்ணம்' எனக் கேட்ட ஸ்ரீ ராமர், சீதையின் மன உறுதிக்கு மகிழ்வெய்தி, தம்மோடு அழைத்துச் செல்ல உடன்பட்டனர்.

8. பின்பு, ஸ்ரீ ராமர், சீதை, லக்ஷ்மணர் ஆகிய மூவரும் மரவுரி யுடுத்து, அரணியத்தை அடையப் புறப்பட்டு, கங்கைக் கரையை அண்மினர். ஆண்டு, குக னென்பவன் அம் மூவரையுங் கண்டு வழிபட்டு, அவர்களைத் தனது படகி லேற்றிக்கொண்டு உகைத்து அக் கரையிற் சேர்த்தனன். ஸ்ரீ ராமர் அக் குகன்பால் மிக்க அன்புடையராகி, அவனைத் தம் துணைவரில் ஒருவனாகக் கொண்டு, ஆசீர்வதித்துப் பிரிந்து பல மலைகளையும், யாறுகளையும் நடந்து கடந்து செல்வாராயினர்.

9. செல்லுங்கால், நடவையில், ஸ்ரீ ராமர் சீதையை நோக்க, நடையின் மிகுதியால் அத் தேவியாரது தேகம் மெலிவதுகண்டு, பெரிதும் மனமுளைந்தனர். ஆயினும், அவ் வருத்தத்தைப் புறத்தே காட்டாது, விநோதக் கூற்றுக்கள் பல விளம்பிச் சீதையைச் சிந்தை மகிழச் செய்வாராயினர்.

10. 'பெண்மணீ, சீதா! இதுகாண், இத் தடாகத்தி லுள்ள தாமரை மலர்கள், நின் கால் வனப்பிற்கு ஒப்புமையாக எண்ணி, ஒற்றைத் காலில் நீரில் நின்று தவஞ்செய்வதேபோல் காண்கின்றன. இக் கயல் மீன்கள் நின் கண்களேபோல் உகள்கின்றன. அதுகாண், அன்னமும் பிடியும் நின்னது நடையியலைக் கற்க நாடி நிற்கின்றன; இம் மாமரக் குயில் நின் இனிய குரலோசையை விரும்பிக் கற்குமாறு மோனமுற்று ஒளிவிருக்கின்றது. பசுங் கிள்ளையோ நின் சொல்லைக் கற்கக் காழுற்றுப் பலகாலும் பயின்று பார்க்கின்றது. அதுகாண், மலைச்சாரலில் மயிலினங்கள் நின் சாயலைக் கண்டு, தம் இனமெனக்கொண்டு அகவுகின்றன' எனக் கூறி மற்றும் பற்பல விநோதப் பொருள்களைத் தம் காதலிக்குக் காட்டிக்கொண்டே சித்திரகூடம் என்னும் சிகரியைச் சேர்ந்தனர்.

10. கடன் கோடல்

'கடனுண்டு வாழாமை காண்டலினிதே' என்னும் நீதி வாக்கியத்தை நம்மவரிற் பலரும் நன்கு அறிவர். ஆயினும், நமது நாட்டில் கடன் வாங்குதல் வறியவர்க்கே யன்றிச் செல்வர்க்கும் பெரு வழக்கமாக எற்பட்டிருக்கின்றது. கடன் கோடலுக்கு முக்கிய காரணம் வருவாய்க்கு மிக்குச் செலவுசெய்தலே. நம்மவர்களில் பெரும்பான்மையோர் விவாக முதலிய சுபகாரியங்களில் கௌரவம் அடையும் நிமித்தம், பலவகையிலும் முயன்று, கடன் வாங்குகின்றனர். அப்போது அவர்களை யறிந்த ஒருவன் தடுத்து உரைப்பினும், 'கடன்கொண்டும் செய்வன செய்தல் இனிதே' என்று தமக்

கானதோர் கட்டுரையைக் கழறுகின்றனர்; அதுவும் ஒருவாறு அமைவுடையதே. ஆயினும், வதுவை முதலிய காரியங்களில் தக்கவாறு விருந்தினரை உண்பித்து உபசரித்தல் இன்றியமையாமை யாகுமே யன்றி, ஆடல் பாடல் முதலிய விநோத வேடிக்கைகளைச் செய்விக்கச் செலவு செய்தல், இன்றியமையாமை யாகும் என்பது எவ்வகையினும் பொருந்தாது. அன்றி, ஒருவன் கடன்கொண்டு செலவு செய்தலால் அடையும் கௌரவத்தினும், அக்கடனைக் கொடுக்க இயலாத காலத்தில் அவன் அடையவரும் அவமானமே பதின்மடங்கு அதிகமாகும். ஆதலால், கடனுல் விளையுந் தீங்குகளை எண்டுக் கூறுவோம்:

2. வாங்கின கடனைக் கொடுக்க இயலாத நிலைமை கொண்ட ஒருவன், கடன்வாங்கக் கருதுவது பெருந்தவறு. சாதாரணமாக மானுடர் தம் வருவாய்க்கு மிக்க செலவு நேரும்போதும், வரலைக் கவனியாது மிகுதியாகச் செலவு செய்யவேண்டும் என்னும் விருப்பங் கொள்ளும்போதும் கடன் வாங்குகின்றனர். இஃது அவர்க்கு எந்நாளும் இன்னலையே விளைவிக்கும்.

3. வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்ய வேண்டுமென்று நமது மனத்திற்கே நன்கு புலப்படினும், அதற்கு மாறுகப் பலமுறையும் கடன் என்னும் கால்விலங்கில் அகப்படுகின்றோம். எதேனும் ஒருவகை வரும்படியைக் கருதிக் கடன் வாங்கும் ஒருவன், அவ்வரும்படி தட்டுப்படுதலால், வாங்கின கடனைக் கொடுக்க இயலாமல், துன்பப்படுவதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஆகையால், அவ்வாறு வாங்கின கடனைக் கொடுத்தற்கின்றி கடனுளி என்று பேரெடுப்பதினும்,

தன் வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்து வாழ்வதே சாலச் சிறப்பாகும்.

4. கடன் வாங்குவோன், தன் நண்பனிடம் சென்று தனக்குண்டாகும் இடுக்கண்களை யெடுத்து உரைத்துக் கடன்கேட்பான். அன்றி, வட்டிக்காகவே கடன் கொடுப்போரிடம் சென்று, பொருளின்மீதோ, பூமியின்மீதோ, வாக்கு நாணயத்தின்மீதோ கடன் வாங்குவதுண்டு. இந்த வகைகளில், நண்பனிடத்தில் வாங்குவது பெரும்பாலும் சொற்பவட்டியுள்ளதாக இருக்கும்; ஆயினும், கடன்கொடுக்கும் நண்பன், கொள்வோனிடத்து முன் கொண்டிருந்த நல்லெண்ணத்திற்கு நாசமுண்டாவதால், அதனை அறவே நீக்க முயலவேண்டும். கடன் கொடுப்பவன், கொள்பவனுகிய இருவர்க்கும் இடையே பலவகையினும் விரோதங்கள் நேருவதுண்டு. பல்லாண்டு மனமொத்துப் பழகிய நட்பினரும், கடன்கோடலால் பகைஞராகின்றனர். சிநேகிதர்களைக் கடன் கேட்பது மரியாதைக் குறைவு என்றும், கடனைக் கேட்பதைப் பார்க்கிலும் இலவசமாகக் கேட்பதே நலம் என்றும் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

5. கடன் கொடுத்தவன், கடனாளியினிடம் இருந்து இன்னதினத்தில் தன் பணம் தனக்கு வருமென்றறிந்து, தான் மற்றொருவனிடத்தில் கடன் வாங்கி, தன் காரியங்களை முடித்துக்கொள்ளுகிறான். ஆனால், அவனுக்குக் குறித்த தினத்தில் தன் பணம் வராவிட்டால், தானும் மற்றவனுக்குப் பணம் செலுத்தத் தவறிப் போகிறான். இங்ஙனம் தவறுவதனால் சில சமயங்களில் ஒருவருக்கொருவர் விரோதம் நேர, விவாதங்கள் உண்டாகின்றன.

6. தனக்குக் கடன் கொடுத்து உதவும் தோழனிடத்துக் கடன் வாங்குவோனுக்கு எவ்விதத்திலும் இன்னலே யுண்டாகும். ஏனெனில், இதுகாறும் கடன் வாங்காதவன் இப்போது தன் தோழனைக் கண்டு கேட்க நேருவதனால் ஒருவகைத் தலையிறக்கமுண்டாகி மானமழிந்து, துக்கசாகரத்தில் மூழ்கினவனாகின்றான். இக் காரணத்தாலும், வாங்கின கடனைக் கொடுக்கும் வகையற்றவனை யிருத்தலாலும், இவன் தன் தோழன்முன் போவதற்கும் அஞ்சுகின்றான். கடன் கேட்பதனால் தோழமைக்குக் கெடுதியைத் தேடிக்கொள்வதோடு தானும் மானபங்கப்படுகிறான். கடன் வாங்குவதில் கைதேர்ந்தவர்கள், சில சமயங்களில், பெண்களிடத்தும் கடன் வாங்குகின்றனர். இத்தகைய கடனாளிகளது தன்மையை அறியாத பெண்டிரும், தமக்கு ஆதனால் நேருங் கேட்டை அறியாமல், வட்டிக்கு தாங்கள் அரிதிற் சேர்த்த பணத்தைக் கடனாக ஆசைப்பட்டுக் கொடுத்து, பிறகு, வட்டியே யன்றி முதலும் இழந்துவிடுகின்றனர்.

7. பண்டைக்காலத்தில், கடனாளி, வாங்கின கடனைச் செலுத்தாவிட்டால், கடன் கொடுத்தவனுக்கு அடிமையாதலே பெருவழக்கமாம். இக் காலத்திலோ ஒருவன் கடனைச் செலுத்தாவிடின் அங்ஙனம் அடிமையாவதில்லை யாயினும், கடனை ஒழிக்கும் வரையில் சிறைச்சாலையிற் சேர்க்கப் படுகின்றான். இன்றேல், ஒரு கடனை யொழிக்க மற்றொரு கடன் வாங்கவேண்டியிருக்கும்; இரண்டாவது வாங்கின கடன், முதல் வாங்கின கடனைப்பார்க்கிலும் முதலிலும் வட்டியிலும் அதிகப்பட்டே யிருக்கும்; ஆகையால், இவன் தன்

வயிற்றை வளர்த்தற்காகச் சிறிது பணம் சேமித்துக் கொண்டு மிகுந்ததையெல்லாம் வட்டிக்கும், முதலுக்கும் கொடுத்துவிட்டுக் கஷ்டப்படுகின்றான். தனக்குச் சொந்தமான தொன்றும் இன்மையாலும், தான் உழைத்துச் சம்பாதிக்கும் பொருளையெல்லாம் தான் வாங்கின கடனுக்காகக் கொடுத்துவிட்டுக் கஷ்டப்படுதலாலும் இன்னும் ஒரு வகையில் அடிமையே யாகின்றான் என்று சொல்லலாம்.

8. கடன் கொண்டவனது நெஞ்சம் எக்காலத்தும் கலக்கத்தையே யடையும். அவன் தனக்குக் கடன் கொடுத்தவனைக் காணும்போதெல்லாம் காலனைக் கண்டாற்போற் கலங்குவான். இது நோக்கியே ;

'விடன்கொண்ட மீனைப் போலும்
வெந்தழல் மெழுகு போலும்
படங்கொண்ட பைந்தள் வாயிற்
பற்றிய தேரை போலும்
திடன் கொண்ட ராம பாணம்
செருக்களத் துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம் போலும்
கலங்கினன் இலங்கை வேந்தன்'

என்னும் ஒரு செய்யுளும் வழங்கி வருகின்றது.

11. பழியோரிடம் பாவமோரிடம்

விருப்பு வெறுப்பு அற்ற வித்தகர் வசிக்கும் திருப்பத்தூர் என்னும் பதியில் வேதியன் ஒருவனிருந்தான். அவன் மதுரைமா நகரத்திலுள்ள தன் மாமனார் வீட்டுக்குச் செல்ல விரும்பி, கைக்குழந்தையை எடுத்துக் கொண்டு தன் மனையாளோடும் நடப்பானானான்.

2. அவர்கள் கடந்து செல்லும் வழியில், மனைவிக்கு நீர் வேட்கை மிகுதலும், அவள் தன் காயகனை நோக்கி, 'காதல! தாகத்தால் காக்கு வறட்சி யடைகிறது; கொஞ்சம் தண்ணீர் தேடிக கொணர்ந்தால், அருந்திக் கலை தீர்வேன்' என்றனள். அது கேட்ட அந்தணன், தன் இல்லாளையும், இளந்தழுன்தலையையும் அங்கிருந்தோர் ஆலமர நிழலில் நிறுத்தி, தான் ஒரு பாத்திரத்தைக் கையில் கொண்டு, நீர் நிலையைத் தேடிச் சென்றான்.

3. சென்றவன் திரும்பி வருமுன், அந்த வடவிருக்ஷத்தில் சிக்குண்டு கிடந்த கூரிய அம்பொன்று காற்றில் அசைப்புண்டு விழுந்து பார்ப்பனியின் வயிற்றில் தைத்து ஊடுருவியது. அம்பு தைத்த வழியே உதிரம் பெருக, அவள் மண்ணிற் சாய்ந்து உயிர் துறந்தாள். பால்மண மறுத வாயையுடைய குழந்தை இறந்த வெள்ளத்தில் புரண்டு, அலறி அழுதுகொண்டிருந்தது. நீர் நிலையைத் தேடிச்சென்ற அந்தணன் பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு, விரைந்து வந்து, விருக்ஷத்தை யடைந்தான்.

4. ஆண்டு, வேடனது அம்பிற்கு இலக்காகி, இறந்து கிடக்கும் மயிலை போல், தன் மனைவி, அம்பு பாய்ந்து, விழுந்து கிடத்தல் கண்டு, ஓவென் றலறி, அருகிற் சென்று, 'என் உயிர் போல்வாய்! இக்கொடும் பழியை எனக்கு இழைத்தவர் யாவர்? மாவோ? புள்ளோ? அன்றி மனிதரோ? யாதும் அறியேனே!" என்று கண்ணீர் விட்டுக் கதறி நின்றான். பின்பு, குழந்தையை எடுத்து ஒரு புறம் விடுத்து, அந்தணன் அழுவான், விழுவான், அரற்றுவான், முகத்தில் அறைந்துகொள்-

வான். 'ஆ, தெய்வமே! என்ன செய்வேன்' என்பான். பின்னும் மந்தாற் கடைபட்ட தயிர்போல் பதை-முனைந்து வாடினான்.

6. பின்பு, அந்த அந்தணன் ஒருவாறு தேறி, இந்தப் பெண்பழியைச் செய்யத் துணிந்தவன் யாவன் என அறியுமாறு, அம்மரத்தை நாற்புறமும் சுற்றிப் பார்த்தான். கெடுந்தூரம் பரந்து வளர்ந்த அம்மரத்தின் ஒரு பக்கத்தில், வேடனொருவன் கையில் வில்லும் அம்புங்கொண்டு தியானபோதந் தங்கியிருந்தான். அவனை அந்தணன் கண்டு, 'ஆகா, இந்தப் பாவியே நம் பத்தினியைக் கொன்றிருக்க வேண்டும்; கொலை புரிவதற்கேற்ற கருவிகளைக் கையிற் கொண்டு இருக்கின்றான்' என்று உன்னி, அவனை யண்மி, 'எடா, வேடா! வீணே என் மனைவியைக் கொன்று பழி பூண்டாய்! இது தகுமோ? அரசனுக்கு அறியாயோ?' என்றான். அதைக்கேட்ட வேடுவன் திடுக்கிட்டு 'ஐயோ, யானென்றும் அறியேனே' என்றான். எனினும், மறையவன் அவனுடன் வாதாடி, அவனை அழைத்துக்கொண்டு மதுரையம்பதியிலுள்ள மன்னவன் ஆண்மனையை அடைந்தான்.

7. ஆண்டு, அவ் வேதியன், இறந்துபட்ட தன் மனைவியைத் தரையிற் கிடத்தி, 'கையோச்சி, 'ஆறலைகடவாத ஆண்டகையே! இது நீதியோ? இது தருமமோ? நின் ஆட்சியில் இத்தகைய பழியுண்டாதல் எற்றோ?' என்று கதறிக் கத்தினான். மறையவனிட்ட கூக்குரல் மன்னவன் செவியில் தாழ்தலும் வேந்தன் திடுக்கிட்டு வெளியே வந்து நோக்குமளவில், நிலத்திற் கிடத்திய பிணத்தோடு மகனைக் கையிற்கொண்டு அம்மறையவன் முறையிடுவதும், அவன் புலத்தே வேடுவன்

வைகட்டி வாய்பொத்தி நிற்பதும் கண்டான். கண்டு, வெகுளியினை கொக்கி, 'ஐய! உமக்கு என்னுற்றது?' என்ன, மற்றவன் மன்னனை கொக்கி, 'ஆகை! இன்று என மனைவியை உடன்கொண்டு, மதுரைமாநகரை கொக்கி வருகையில் என் மனைவி சீர் வேட்கையால் வருந்தக் கண்டு, அவளைத் தன் குழந்தையோடும் ஓர் ஆலமரதினை நிழலினிருத்தி, கணவர் கொண்டுவரச் சென்றேன். யான் மீள்வதற்குள் இவ் வேடுவன் என் மனைவியை அம்பெய்து, விணை கொன்று புறத்தே நின்றிருந்தான்: பின்பு, அவளைப் பற்றியிழுத்துக்கொண்டிந்த வந்தான்: என்ன செய்வேன்!' என்று கதறி அழுது நின்றான்.

7. வேந்தன் வேடுவனை கொக்கி, 'நீ சொல்வது யாது?' எனலும், 'ஆண்டவனே! இவ்வினைவு யான் ஒன்று மறியேன்: ஐய, இன்று அடியேன் வேட்டையாடி வயிறு வளர்க்க, காலை முழுதும் அலைந்து திரிந்து. களைப்படைந்து, அம்மரத்தின் ஒருபுறத்தில் தங்கினேன்: இம்மட்டே யானறிவேன்' என்றான். அதுகேட்ட அமைச்சர் முதலாயினர், 'எது, எது, வேடன் வாயிலும் உண்மை புண்டோ? இவனைத் தக்கவாறு ஒறுத்தலல்லது உள்ளது வெளியாகாது' என்றனர். அரசனது எவலால், எவலர் மறவனைச் சிறையிலிட்டுப் புடைத்தனர். என்ன செய்வான் வேடுவன்! ஆ! தா, பாவம், பாவம்! எவ்வாறு புடைப்பினும், அவன் முற்கூறிய மொழியில் ஒரு சிறிதும் பிழையாமல், உள்ளதையே உரைத்தான்.

8. பின்பு, அரசன் வெகுடலை கொக்கி, 'இறந்துபட்ட நின் மனைவியை அடக்கஞ்செய்து வருக' என்-

றான். அந்தணனும் அவ்வாறே ஈமக் கடன்களை முடித்து வந்தனன். பிறகு வேந்தன் அவ்வேந்தியனை அழைத்துக்கொண்டு ஆலயத்தை யடைந்து,

'மன்றுடு மணியே இம் மறவன்முன் பார்ப்பனியைக்
கொன்றுனை பிறர்பிறிதாற் கொன்றதோ ஓஃது அறநூல்
ஒன்றுலும் அளப்பரிதாக் கிடத்தலால் உன்னருளால்
என்றுழ்வு கெடத்தேற்றுய் என்றிரந்தான் அவ்வேலை.'

ஆகாயத்தில் அசரீரியாய், 'மன்ன! இன்று வணிக வீதியில் மண மொன்று நடக்கிறது. அவ்விடத்திற்கு நீ அம் மறையவனோடும் வருகவேபல், உன் உள்ளம் அறியா உண்மைகளை இனிது விளக்குவோம்' என ஒரு தெய்வத் திருவாக்கு எழுந்தது.

9. எழுதலும், அரசன் அகமகிழ்ந்து, அந்தணனோடும் அரண்மனையை யடைந்து, தன்னை அரசன் என்று ஒருவரும் அறியாவண்ணம் வேற்றுருக்கொண்டு, வணிக வீதியில் நடக்கும் திருமண வீட்டை அடைந்து, அங்கு ஒரு புறத்தில் அந்தணனோடு அமர்ந்திருந்தனன்.

10. அப்போது, மண மகனுக்கு ஆயுள் முடிந்தமையால், கால தூதர் வந்து அவனைப் பற்றிக்கொண்டு போகச் சமயம் பார்த்திருந்தனர். அவர்களில் ஒருவன் மற்றவனை நோக்கி, 'என்னை, நம் இறைவன் இம் மணமகன் உயிரைத் தருக என்றான்; இவனுக்கோ உடம்பில் ஒரு பிணியும் இல்லை; மற்றொரு காரணமுங் காணேம்' என்றான். அதைக் கேட்ட மற்றவன், 'என்ன, நீ கூறுவது புதுமையா யிருக்கிறது! நமக்கு இஃதோ தார் அரிய காரியமோ! அன்று ஆல மரத் தடியில் ஒரு பிணியும் இன்றி நின்றிருந்த பார்ப்பனியின்மேல், அம்மரத்தில் சுக்குண்டு கிடந்த அம்பை வீழ்த்தி, அவளது உயிரைக் கவர்ந்து, அப் பழியை அருகிலிருந்த ஒரு வேடன்மீது

வைத்தோமன்றே? அஃதேபோல் இதோ இத் தாழ்வாரத்தில் கட்டப்பட்டுள்ள பசுவை வெருட்டி முட்டச் செய்து, இவ ளுவியைக் கொண் டேகலாம்' என்றான். அவர்கள் பேசுவது அனைத்தும் கடவுளருளால் மன்னன் மறையவன் ஆகிய இருவர் செவிகளில்மட்டும் பட்டது.

11. அது கேட்ட அரசன் அந்தணனை நோக்கி, 'ஐயா! இம் மொழி யனைத்தும் கேட்டீரோ?' என, அவன், 'ஆம் ஆம், இம் மணமகன், இப்போது இவர்கள் கூறியவாறே இறந்துபட்டால், என் மனைவியும் அவ்வாறே உயிர் துறந்திருப்பாள் என உளங் கொள்வேன்; இதைக் காண்போம்' என்றனன். பின்னர், சிறிது பொழுதில் மங்கலவினை முடிக்கும் தருணத்தில், வாத்தியங்கள் ஒருங்கே முழங்க, அவ்விடத்துக் கட்டப்பட் டிருந்த பசு ஒன்று, அவ் வொலியைக் கேட்டு வெருவி, தாம்பை அறுத்துக்கொண்டு ஓடி, மணமகனை முட்டியது; அதனால், அவனது ஆவியும் முடிந்துவிட்டது. அப்போது,

மணமகனே பிணமகளுய் மணப்பறையே பிணப்பறையாய் (யக்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலி யாய்க்கழி

கண்ட மன்னன், விரைந்து அரண்மனையை யணுகி, அமைச்சர் முதலாயினர்க்கும் இதனை விளங்கக் கூறி, தெய்வத் திருவருளைச் சிந்தித்திருந்தனன். பின்பு, மறையவனுக்கு வேண்டுந் திரவியமீந்து, 'மற்றும் ஒரு மணம் முடித்துக் கொள்க' என்று அனுப்பிவிட்டு, சிறைக் கோட்டத்தை யடைந்து, மறவனை நோக்கி, 'ஐய! தெளியாமல் நாங்கள் உனக்கிழைத்த தீத்தண்டத்தைப் பொறுக்க' எனக் கூறி, அவனது வருத்தத்தோடு வறுமையும் நீங்கச் சிறிது பொருள் கொடுத்து

அனுப்பினன். அதுகண்ட குடிமக்கள், தம் மன்னனிடத்து மிகவும் அன்புகொண்டு வாழ்ந்திருந்தனர். அரசனும் எல்லாம்வல்ல இறைவன் தன்பால் வைத்த திருவருளை உன்னி மகிழ்ந்திருந்தனன்.

2. மாணவர்காள்! நீங்கள் இந்த சரிதத்தை வாசிப்பதனால் பல நீதிகளை அறிவீர்களாகும். மனைவி-போடும் மாமனார் வீட்டை நாடிச் சென்ற அந்தணன், வழியில் தன் இல்லாளை இழந்தமையின், 'ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட டொன்றுகும்' என்னும் நீதியும், கொலை செய்தவனைபோல் காணப்பட்ட வேடன் குற்றமற்றவன் ஆயினமையால் ஒரு விஷயத்-தைப் பலகாலும் ஆராயாது நிர்மானித்தல் கூடாதென்-பதும் அறிகின்றீர். மனந்தடுமாறிய மன்னனுக்குக் கடவுளை முன்னின்று உண்மை நிலையை உணர்த்தியதனால், சுவான் அடியவர்களுக்கு எளியன் என்பது வெளியாகும். பணமகன் பிணமகனைத எண்ணில், மரணம் நிலையென்று வருமென்பது விளங்கும். அரசன் மூடனில் மறையவனிடத்தும் வேடனிடத்தும் ஒரே வகையான அன்பு காட்டினமையால், அக் காலத்திய அரசது செங்கோன்மை இப்படிப்பட்டது என்பது நன்கு விளங்குகிறது.

12. அறிவின் பெருமையும் கல்விச் செருக்கும்

கடவுள் இவ்வுலகத்தைப் படைக்கும்போதே அதனுடன் அளவற்ற பொருள்களையும் படைத்திருக்கின்றனர். அவ்வளவு பொருள்களும் ஆன்மாக்களின் சுவுக்கியத்திற்காகப் படைக்கப்பட்டனவே யன்றி வேறன்று. ஒவ்வொரு பொருளிலும் ஒவ்வொரு புதுமையுண்டு.

நாம் நமது வாழ்நாளில் எத்தனையோ பொருள்களைக் காண்கிறோம். ஒன்றையும் கருத்து ஊன்றிப் பார்க்காமல் உபேக்ஷையாய்ப் போவதனால் பொருள்களின் பெருமை நமக்கு நன்கு புலப்படுவதில்லை. ஆதலால், நாம் எந்தப் பொருளையும் அவ்வப்போது ஊன்றிப் பார்த்து, அந்தந்தப் பொருளிலுள்ள புதுமைகளை நம்மால் கூடியவரையில் ஆராய்ந்தறிய வேண்டும். அவ்வாறு அறிவதனால் ஆனந்தமும் உற்சாகமும் மற்றதனாலும் எற்படும்.

2. தனக்குத் தெரியாத விஷயங்களைப் புதுப் புதிதாய் ஓயாமல் அறிந்துகொண்டிருப்பவனே எப்போதும் ஆனந்தமுடையவனாவான். மானிடராய்ப் பிறந்தார் எவர்க்கும் இயற்கையின் அருமையை அறிய முயல்வது இன்றியமையாக் கடமையாகும். அதாவது, ஒன்றை அறிந்துகொண்டவளவில், நமக்கு இவையெல்லாம் தெரிந்தனவே என்று அகங்களித்து நிற்பதென்று நினைக்கிறீர்களோ? அன்று; நமக்கு ஒரு விஷயம் தெரியுமென்பது சிறிதுந் தோன்றாமல், 'நமக்கு அது தெரியவில்லையே, இது தெரியவில்லையே' என்று எப்பொழுதும் தன் அறியாமையையே நினைத்து, கற்றது கைம்மண்ணளவு என்று எண்ணும் அடக்கமும், தெரியாதனவைகளைத் தெரிந்துகொள்ளவேண்டும் என்னும் அவலும் அடையும் அறிவே நன்றாய் பயக்கும். ஒரு விஷயம் நமக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டால், பிறகு அது, நமது நடத்தைகளுக்கு வழிகாட்டவும், பிறர்க்கு நன்மை பயக்கவும், அதை ஆதாரமாகக்கொண்டு நாம் இன்னும் வேறு பொருள்களைக் கண்டுபிடிக்கவும் உபயோகப்படுவதாயினும், அதனால் நமக்கு ஆனந்தம் உண்-

டாகுமென்பதில்லை. ஒன்று நமக்கு நன்றாய்த் தெரிந்து-விட்டால் உடனே அஃது அருமையற்ற தாகிவிடும். ஒன்றைப் புதிதாய்க் கண்டறியும்போது உண்டாகிற அதிசயமும், ஆனந்தமும் அதை நன்கு அறிந்தவுடனே போய்விடுகின்றன. நாம் ஒருதாம் படித்தான புத்தகங்களை மறுபடியும் படிக்க வெறுப்பா யிருப்பதும், மேன்மேலும் புதிய புத்தகங்களைப் பார்க்க ஆவலுண்டாவதுமே இதற்குப் போதுமான திருஷ்டாந்தமாம்.

3. சிறு பிராயத்தில் அதிக சந்தோஷமும், கபடமின்மையும், விஷயங்களை அறிகிற திறமையும் அதிகமாதலால், அக் காலத்தைவிட வாழ்நாளில் சவுக்கியமானது வேறொன்று மில்லை. புத்திக் கூர்மையுடைய ஒருவன் மற்றவர்களைவிடப் பதினாயிரம் மடங்கு சிறந்தவன் என்று சொல்லலாம். அவன் எப்போதும் எதையும் அதிசயமாகவே பார்த்துக்கொண்டு, ஒன்றும் அறியாத பாலகன் போலவே இருப்பான். தனக்கு இருக்கும் அறியாமையும், தெரிந்த பின் பாமாநந்தத்-தைத் தாவல்ல எண்ணிறந்த பொருள்களைப் பற்றிய விஷயங்கள் தனக்குத் தெரியாமலிருப்பதும் அவனுக்குத் தோன்றுமே யன்றி, தான் அறிந்துகொண்டது ஒருபோதுந் தோன்றாது.

4. வேறு வேலையில்லாமல் இப்படிக் கண்ட கண்ட பொருள்களைப்பற்றிக் கண்டறிவதனால் பயன் என்ன-வென்று பலர் ஆக்ஷேபிக்கலாம். அதற்கு ஆத்மாநந்தமே பெரும் பயனாயிருப்பதன்றி, வேறு பயன்களும் அநேக முண்டு. அவை தற்காலத்தில் பயன்படாவிடினும் பத்து வருஷங் கழித்தாகிலும் பயன்படும். நாம் கற்கிற விஷயம் எப்படிப்பட்டதாயினும் எதாவது ஒரு சமயத்திற்கு அஃது உதவாமற் போகாது. இதற்-

குத் திருஷ்டாந்தமாய் ஒரு கதை சொல்வதுண்டு. அஃது என்னவெனில் :

5. முற்காலத்தில் பூச்சி, புழு முதலிய சிறு ஜந்துக்களின் இயற்கையையும், குணங்களையும் கண்டறிவதே காரியமாய், தன் வாழ்நாளைக் கழித்துக்கொண்டிருந்த ஒருவன், ஒரு ராஜ ஸம்ஸ்தானத்தில் மந்திரிப் பட்டம் பெற்று, மிக மேன்மையாக வாழ்ந்துகொண்டிருந்தான். அப்படியிருக்கையில், ஒருகால் அவனுக்குப் பிராணாந்தமான அபாயம் ஒன்று சம்பவித்தது. அத்தருணத்தில் அவன் உயிரைப் பாதுகாத்தது அவன் சிறு வயதிற் கண்டறிந்த ஒரு சிறு வண்டின் இயற்கையறிவேயாம். எப்படியெனில் :

6. அவன் அமைச்சுத் தொழில் நடத்துகையில், அரசனுக்கு விரோதமாய் ஏதோ ஒரு காரியஞ்செய்து குற்றவாளியானான். மரண தண்டனை விதிக்கத்தக்க குற்றம் அவன்மேல் சுமத்தப்பட்டது. ஆயினும், அம் மரண தண்டனையை நிறைவேற்றும் நாள் வரும் வரையில், அவனை மிகவும் உயர்ந்த ஒரு கோபுரத்தின் மேல்நிலையில் சிறையாய் அடைத்து வைத்தார்கள்.

7. அப்படியிருக்கையில், அவன் மனையாள், தன் கணவனுக்கு நேர்ந்த அவ் விபத்தைக் கேட்டு அதிக விசனமடைந்து, ஒரு நாள் இரவு தன் காதலனைச் சிறைசெய்திருந்த கோபுரத்தின் கீழ்ப் புறத்தில் வந்து, உட்காந்து புலம்பத் தொடங்கினாள். அந்த அழுகைக் குரலைக் கேட்டு, அந்த மந்திரி, கோபுரநிலை வாயிலின் வழியாய்க் குனிந்து பார்த்து, அவள் தன் மனையாள் என்பதை யுணர்ந்து ஒரு கடிதமெழுதி அவளிருக்குமிடத்தில் எறிந்தான். அந்தக் கடிதத்தில், 'பெண்ணே!

கீ வருந்தவேண்டா. இதிற் குறித்த பொருள்களைமாத்திரம் தாமதமின்றிச் சித்தப்படுத்திக்கொண்டு இங்கேவா; உயிரோடுள்ள கருவண்டு ஒன்று, வெண்ணெய் ஒரு துளி, மெல்லிய நூலுருண்டை ஒன்று, உரத்த நூலுருண்டை ஒன்று, நல்ல கயிற்றுச்சுருள் ஒன்று, மிகவும் பெருத்த தாம்புவடம் ஒன்று; இவைகளை உடனே கொண்டுவருக' என்று எழுதியிருந்தது.

8. அவள் அந்தச் சீட்டைப்பார்த்துச் சந்தோஷமடைந்து, உடனே வீட்டுக்குப்போய் அதில் எழுதியவாறே எல்லாப் பொருள்களையும் சேகரஞ் செய்துகொண்டு மறுநாள் இரவு அவ்விடம் வந்து சேர்ந்தாள். அதுகண்டு, அந்த மந்திரி, வண்டின் தலையில் வெண்ணெயைத் தடவி, மெல்லிய நூலின் ஒரு நுனியை அதன் உடலில் கட்டித் தானிருக்குமிடத்திற்கு நேர்முகமாய் அதைத் திருப்பி, கோபுரத்தின் சுவரில் விடும்படி கூறினான். அவளும் அவ்வாறே செய்து அவ் வண்டைச் சுவரில் விட்டாள்.

9. பிறகு நடந்த வரலாறு என்னவெனில், எந்தப் பக்கமாய் வாசனை வருகிறதோ அந்தப் பக்கமாகவே அந்த ஜாதி வண்டுகள் ஊர்ந்து போவது வழக்கமாதலால், அந்த வண்டு தன் தலைமேலிருந்த வெண்ணெயின் வாசனையைப் பற்றிக்கொண்டு மேல்முகமாய் ஊர்ந்துபோய், மந்திரி அடைபட்டிருக்கும் பலகணிவாயிலண்டை சேர்ந்தது. சேர்ந்தவுடனே, அவன் அதைப் பிடித்துக்கொண்டு அதன்மேல் சுற்றியிருந்த நூலின் நுனியைப் பற்றிக்கொண்டான்.

10. பின்பு அந்த மந்திரி, அந்த நூலின் மற்றொரு நுனியில் உரத்தநூலை முடியும்படி மனைவிக்குக் கூற

அவள் அதையும் அப்படியே செய்தாள். அவன் தன் கையிலிருந்த மெல்லிய நூலைப் பிடித்திழுத்து, அதன் மறுமுனையில் தொடுக்கப்பட்ட உரத்த நூலைப் பற்றிக்-கொண்டான். இவ்வாறே அந்த நூலின் உதவியைக்-கொண்டு பருத்த கயிற்றைப் பற்றி, அத னுதவியினால் தடித்த தாம்பையும் இழுத்துக்கொண்டு, அதை அந்தப் பலகணியில் உறுதியாய்க் கட்டிவிட்டு, அந்தக் கயிற்-றைத் தனக்கு ஆதாரமாய்ப் பற்றிக்கொண்டு சுவர் வழியாய்க் கீழே யிறங்கிக் குதித்து ஓடிப்போனான். அவன் சிறுவயதில் அற்பமான ஒரு சிறு வண்டின் வழக்கத்தைக் கண்டறிந்திருந்ததனால், பிராணாந்தமான அபாயம் நேர்ந்த காலத்தில் தப்பித்துக்கொண்டு ஓடிப்-போக அது உதவியாயிற்று. ஆதலால் "கற்றதும் பெற்றதும் வீண்போகாது" என்று பெரியோர் சொல்-வது ஒருபோதும் பொய்யாகாதன்றே?

11. அகங்காரத்தை ஒழித்துச் சாந்த குணத்-தையே உறுதியாகக்கொண்ட உத்தமரை இவ்வுலகத்-தில் காண்பது அரிது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்தில் அகங்காரமுற் றிருக்கிறார்கள். ஆழ்ந்து பார்க்குமளவில் ஒருவரும் அகங்காரப்படுவதற்கு எது எதுமில்லை. ஒருவன் விசேஷமாய்க் கல்வி கற்றிருப்பா-னையின் அவன் ஒருவாறு மனவெழுச்சி கொள்ள எது உண்டு. அந்தக் கல்வியும், தன் சொந்த முயற்சியாலே வருந்திப் பரிசோதித்துக் கற்றறிந் திருந்தாலல்லது, அவன் கர்வங் கொள்வதற்குக் காரணம் இல்லை. வேறொருவன் வருந்திக் கற்றறிந்த கல்வியில் ஒரு சிறிது நாம் பெற்றுக்கொள்வதனால் அகங்காரமடைவதற்கு எதுவுண்டோ? ஒருவனிடத்தில் ஒரு காசு பெற்றுக்

கொள்வதற்கும் எள்ளளவு அறிவு பெற்றுக்கொள்வதற்கும் வேற்றுமை என்ன? பிச்சை எவ்வளவு அதிகமாகக் கிடைத்தாலும், பிச்சைக்காரன் கல்விகொள்ளல் ஆகுமோ? கல்வியும் அத்தகையதே. ஒருவன் தானே முதலில் வருந்திப் பொன் சம்பாதித்து, பிறகு அதைச் செவ்விதாகச் சுத்திசெய்து, தானே காணயமாக்கிக் கைக்கொண்டால், அவன் ஒரு சிறிது கர்வங்கொள்ளக் காரணமுண்டு. அவ்வாறு ஒன்றுஞ் செய்யாமலிருக்க, வழிப்போக்கன் ஒருவன், தன் கையிலிருந்த பொருளை நமக்குப் பிச்சை கொடுத்துப் போவானானால், அதைப் பற்றி நாம் கர்வங் கொள்ளலாமோ? ஒருவன் இவ்வகையாய்ப் பிச்சை யெடுத்துக் கோடி பொன் குவித்தாலும், அவன், அற்பமாயினும் தன் உழைப்பினாலேயே சம்பாதித்துக் கொள்பவனுக்குச் சிறிதும் ஒப்பாகான். சூரியன் பூமியையிடப் பெரிதன்று ஒரு மனிதன் போதித்தால், அதை அறிந்துகொண்டதற்காக, நாம் என்ன காரணத்தைக்கொண்டு கர்வப்படுகிறது? அப்படியே பல பண்டிதர்கள் தாம் கற்றறிந்த பற்பல விஷயங்களையும் நமக்குக் கற்பித்துக் கொடுப்பார்களானால், நமது இவ்வளவு தெரிந்து விட்டதே என்று அவைகளைப்பற்றி தான் நாம் கர்வம் கொள்வதற்குக் காரணம் என்ன? இக்காலத்தில் நமக்குத் தெரியும் என்று நாம் அகங்காரப் படுவதற்குக் காரணமான கல்விகளெல்லாம் இத்தன்மையான வான்முறை வழியால் வந்தனவேயாம். மூன்று நாலோ ஒரு புலவன் வருந்திப் பரிசோதித்து தாபித்திருக்கிற விஷயங்களை வேறொருவர் நமக்குப் பலவந்தமாகவும், நாம் கண்மை தினைகளைக்கூடத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றிருந்த நமது இளமைப்பருவத்தில் அடித்தும் புடைத்தும்

போதிக்கப்பட்டிருக்க, அந்த விஷயங்களைத் தெரிந்து-கொண்டு நாம் கர்வப்படுவானேன்.

12. உண்மையாய்ப் பார்க்கு மளவில் நாமே பாடு-பட்டுத் தேடிக் கற்றறிந்தவை தவிர வேறென்றும் நாம் மனவெழுச்சி கொள்வதற்கு ஏதுவாகாது. ஒரு மனிதன் ஒரு பாலைவனத்தில் ஓர் இடம் ஏற்படுத்தி, அங்குச் சிறியதோர் குடிசை போட்டுக்கொண்டு குடியிருப்ப-தற்கு வேண்டிய பல பொருள்களையும் வருந்தித் தேடிக்கொள்வானாயின், அவன் தனக்கு ஒரு சிறு வீடு கட்டிக்கொண்டதற்காகத் தன்னைப் போற்றிக்கொள்ளக் காரணமுண்டு. வெகு நேர்த்தியாக நிர்மித்துச் சகல-வித சாமான்களும், ஒன்றுலொன்று குறைவில்லாமல் சேகரிக்கப்பெற்ற திவ்விய மாளிகையொன்று ஒருவ-னுக்கு இலவசமாகக் கிடைக்குமாயின், அவன் முன்ன-வனிடப் பத்துக்கோடி பங்காகச் சுகங்கள் அனுப-விக்க ஏதுவுண்டாயிருப்பினும், அவன் அதனால் எள்-ளளவேனும் அகங்காரங் கொள்வதற்கு ஏது யாதிருக்-கின்றது! அம்மாளிகையை நிருமித்தவன் திறமைக்-காகவோ இவன் கர்வங் கொள்ளுவது! பிறர் தேடிய தந்தகட்டிலிற் படுப்பவனுக்கு உண்டாகும் ஆனந்தம், தான் தேடிய கோரைப்பாயிற் படுப்பவனுக்கு உண்டா-கும் ஆனந்தத்தில் பதினாயிரத்திலொரு பங்குக்கும் ஈடாகாது. குறைகுடங் கூத்தாடுவதுபோல், நன்றாய்க் கற்றறிய வல்லமையில்லாமல், அரைவாய் கால்வாயா யிருப்பவர்கள்தாம் இவ்வாறு வீண் அகங்காரங்கொண்டு திரிவர். ஆழ்ந்த வெள்ளம் ஓசை கொள்ளாமல் கம்-பீரமாய் ஓடுவதுபோல், விஷயங்களை நன்றாய் ஆழ்ந்-தறிந்த பெரியோர் எப்போதும் அடங்கியே இருப்பர்.

13. சூது விரும்பேல் — II

நளன் தன் மனைவி மக்களோடு நிடதநாட்டில் நல்வாழ்வை டைந்திருந்தனன். அந்நாளில் நிடதநாட்டின் அயலில் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் புட்கரன் என்னும் பெயரினன்; கவறுடலில் கைதேர்ந்தவன். அவன் ஒருநாள் நிடதநாட்டில் நளனது அரண்மனையை அணுகினன். நளன் அவன் வருகையை நல்வரவாகக்கொண்டு நன்கு உபசரித்தான். இருவரும் அறு சுவையுண்டி அமர்ந்துண்ட பின்பு, புட்கரன் நளனை நோக்கி, 'ஐய! நாம் இருவரும் சிறிது நேரம் சொக்கட்டான் ஆடிக் காலங் கழிக்கலாமே?' என்றான். நளன், சூது முதலிய ஆடல்களைக் கனவிலும் கருதாதவனாயினும், தீவினை வசத்தால் அவனுடன் கவறுடச் சம்மதித்தனன். 'கேடு வரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே' என்பது உறுதி உரையே யன்றே?

2. புட்கரன் கவறுடலில் கைவன்மையுடையவன் என்பது உலகறிந்த விஷயமாதலால், அவனோடு சூதாட உடன்பட்ட நளனை நோக்கி அமைச்சர் முதலாயினர் தடுத்துக் கூறுவாராயினர்:

'காதல் கவறுடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய் — போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி'

'அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும் — மறத்தையே
பூண்டுவிடோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ என்றுர் தெரிந்து'

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR — 33 106

3. அதுகேட்ட நளன், 'இவையனைத்தும் யான் நன்கு உணர்வேன்; என் ஆடலுக்கு இடையூறு ஒன்றும் இழைத்தல் வேண்டா; காலப் போக்காகச் சிறிது விளையாடி வருகின்றேன்' என்று அவருரையை மறுத்துக் கூறினன். அதனால், அமைச்சர் முதலாயினர் எதுங் கூறுதற்கின்றி, மனவாட்டமுற்றுத் தமக்குள்ளே பலவாறு பேசுவாராயினர்.

4. அரண்மனை முற்றும் விசனமுறக் கண்ட தமயந்தி, உற்றதுணர்ந்து, தானே தன் சேடியரை யனுப்பி, நளனை அந்தப்புரத்திற்கு அழைத்தனள். அஃது ஒன்றையும் மன்னன் தன் செவியில் ஏற்றிலன். இதனை நகரமாந்தரும் உணர்ந்து, 'அந்தோ, நம் நாட்டிற்கே தீங்கு வந்ததோ! இன்றேல் இதுகாறும் தீச்செய்கை என்பதைக் கனவிலும் கருதாத நம் காவலன், இன்று சூதாட இசைவனே! யாதோ அறியோம்' என்றனர். இவையனைத்தும் கொற்றவன் குறிப்பாற் கண்டுணர்ந்தும், கவறுடலில் வைத்த தன் எண்ணத்தைச் சிறிதும் மாற்றினனில்லை.

5. புட்கரன் நளனுக்குச் சூதாட்டத்தில் சுவையுண்டாக்கவே, நளன் தன் நற்செய்கை யனைத்தும் விட்டு, இந்தச் தீச் செய்கையிலேயே நாட்டமுற்று ஆடினன். புட்கரனும் இதுவே ஏற்ற சமயமென்று மேலும் மேலும் சூதாடத் தொடங்கினன். நளன் அதற்குப் பணயமாகப் பொன்னும் மணியும் பூண்களும் மாளிகைகளும், கரி பரி தேர் காலாள் முதலிய சேனைகளும் வைத்துத் தோல்வி யடைந்த பின்னர், தன் நாடு நகரங்களையும் தோற்றனன். இவ்வாறு கவறாடி நளனது பொருளனைத்தையும் கவர்ந்து-

கொண்ட புட்கரன், அவனை நோக்கி, 'ஐய! முடிவாக மற்றோர் ஆட்டம் ஆடுவோம்; அதற்குப் பணயமாக உமது மனைவியை வையும், நான் உம்மிடத்தில் பெற்ற நாடு முதலிய அனைத்தும் ஒருங்கே வைக்கின்றேன்; இம்முறை உமக்கே வெற்றி யுண்டாகும். அஞ்சாது ஆடுக' என்றான். மனையாளைப் பணயமாக வைக்குமாறு வற்புறுத்திய வன்சொல் தன் மனத்தை வருத்துதலும், நளன் மனங் கசிந்து, உடனே தன் இல்லாளோடு மக்களையும் அழைத்துக்கொண்டு நாட்டைவிட்டுப் புறப்பட்டுக் காட்டை அடையச் சென்றனன்.

6. செல்லுங்கால், அந் நகரமாந்தர் அனைவரும் ஒருங்கு திரண்டு தம் மன்னனை வணங்கிக் கூக்குரலிட்டு,

'ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே — பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணில்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று'

அது கேட்ட நளன் அவர்களைத் தனித்தனியே அன்புடன் நோக்கி, தக்கவாறு விடைகூறித் தேற்றினான். இவையனைத்தும் கண்ட புட்கரன், குடிகள்மீது மிக்க சீற்றங்கொண்டு, 'இந்நகரமாந்தரில் எவரேனும் நளனை யணுகி நல்வார்த்தைகூறினும், தகுதணமே தண்டிக்கப்படுவர்' எனப் பறையறைவித்தனன். இதனால் புட்கரன்பால் குடிகள் கொண்டிருந்த விரோதம் மேன்மேலும் முதிர்வதாயிற்று.

7. இங்ஙனம் இவ்வாறாக, நளன், மனைவி மக்களோடு, தன் நாட்டையகன்று காட்டை யடைந்தனன். சுமந்திரன் என்னும் அமைச்சன் மாத்திரம் அவர்களை அகன்றானில்லை. அப்போது, மன்னன் தன் மக்களை-

யும் மனைவியையும் நோக்கி, தான் எண்ணுதிழைத்த தீங்கை உன்னி யுன்னிக் கண்ணீர் உகுப்பானுனன். தமயந்தி தன் நாயகனது முகவாட்டத்தைக் கண்டு, 'என் ஆருயிர்த் தலைவ! மனம் வாடல் எதற்கு, விதி வலிது, வருவது வந்தே தீரும்; அதன் பொருட்டுத் தாம் வருந்துவது அழகன்று' எனப் பற்பல அறவுரை கூறித் தேற்றினள்.

8. பின்னர், நளன் தன் மனைவியை நோக்கி, 'அன்னம் போலும் மென்னடைப் பாவாய்! இன்னும் நீ என்னோடு வருதல் ஏற்காது; கல்லும் முள்ளும் நின் காலில் உறுத்தும். ஆதலால், நீ நம் மக்களை அழைத்துக்கொண்டு, உன் தந்தை இல்லத்திற்கு ஏகி, ஆண்டு யான் வருமளவும் இருப்பாய்' என்றனன். அம் மொழி, புண்ணில் கோலிட்டதேபோல், தமயந்தியின் செவியில் நுழைதலும், வேடன் வலையில்பட்ட மானென உளந்துடித்து, 'என் இன்னுயிர்த் தலைவ! தாமும் உடன் வந்தாலன்றி, யான் தனித்துத் தாய்வீடு செல்வது தகுமோ? அரிவையர் ஆளனைப் பிரிந்து தனித்திருத்தல் அடுக்குமோ? பெண்பாலார் இளமையில் தம் பெற்றோரிடத்தும், மணத்தின் பின்னர் மணாளரிடத்தும், மணாளருக்குப் பின்னர் உயிர் வாழ்ந்திருப்பரேல் மைந்தரிடத்தும் அமைந்திருத்தல் மரபன்றே! தேவரீர் இதனை அறியீரோ! அடியாளைச் சோதிக்குமாறு இத்தகைய கடுமொழி யுரைத்தீர்போலும்; யான் ஒரு கணமும் தேவரீரை அகன்று இரேன். கற்புடைய மடந்தையர்க்குக் கணவனே கடவுள், அக் கணவற்கு இயற்றும் குற்றேவலே தவம்; காந்தன் உண்ணுமளவும் உண்ணுதிருத்தலே நோன்பு; கொழுநன் உரையைக்

கேட்டு மகிழ்தலே வேதசிரவணம்; அவனோடு அமைந்து வாழ்தலே நித்தியாநந்தம்; அதுவே முத்திவீடு; அவனை அகன்று இருக்குமிடம் அரண்மனையாயினும் அது முதுகாடே. ஆதலால், என் கண்மணியன்ன காதல்! அடியாளை எவ்வாற்றாலும் கைவிட்டுச் செல்லக் கருத வேண்டா' என்று வேண்டினாள்.

9. தமயந்தியின் இரக்க மொழிகளைக் கேட்ட இறைவன் மனமுளைந்து, 'பெண்ணரணங்கே! நின்னைப் பிரிய நினைத்தேன் அல்லேன்; பூங்கொடியை யொத்த நினது மேனி புலருமே என்று அஞ்சுகின்றேன். ஆயினும், நின் துயரைக் கண்டும் நின்னைவிட்டுச் செல்ல இனித் துணியேன். எனினும், நம் மக்களையும் நம்முடன் கொண்டு ஏகுதல் ஏற்றதன்று. ஆதலின், இவர்களை நம் சுமந்திரரோடுங் கூட்டி நின் தந்தை இல்லத்திற்கு அனுப்பிவிடுவோம்' என்றான். தமயந்தி அதற்கு உடம்பட்டாளாயினும்,

'அஞ்சனந்தோய் கண்ணில் அருவிநீர் பாய்ந்து
மஞ்சனநீ ராக வழிந்தோட — நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து'

மற்றும் தம் தீவினையை யுன்னிச் செய்வ தறியாது, தம் இருவர் உயிரையும் பற்றி ஒருவனிடத்துக் கொடுப்பதேபோல், மக்களிருவரையும் சுமந்திரன் வசத்தே ஒப்பித்து, அவனை வீமன் நகர்க்கு விடை கொடுத் தனுப்பிவிட்டனர்.

10. பின்னர், நளன் தன் நாயகியோடு காட்டிற் புகுந்தனன். அங்கு அன்னப் பறவைகள் தடாகத்தில் அமர்ந்து விளையாடுவது கண்டு தமயந்திக்கு அவற்றில்

ஒன்றைப் பற்றித்தரின் அவளது மனவாட்டம் ஒருவாறு நீங்குமென்றுன்னிய நளன், தன் உடையை யவிழ்த்து ஓர் ஓநிமத்தின்மீது வீசினன். அப் பறவை அதனைத் தன் அலகினாற் பற்றிக்கொண்டு பறந்தோடிப் போயிற்று. அதுகண்ட மன்னன் தன் தேவினையை யுன்னி அரையில் ஆடையுமின்றிச் செல்வானனன். இறைவன்படும் இன்னலைக் காணப் பொறுதவன்போல, இரவியும் மேற்கடலுள் ஆழ்ந்தான். அக் காலத்தே பேரிருள் கவிந்துகொண்டது. மன்னன் மனந்திடுக்கிட்டு, அங்குள்ள விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் அஞ்சி, ஆண்டிருந்ததோர் பாழ் மண்டபத்தில் தன் மனையாளோடுந் தங்கினன்.

11. தமயந்தி வழிநடந்த மெலிவினாலும், மக்களைப்பிரிந்த வருத்தத்தினாலும் சோர்வுற்றுத் தரையிற் படுத்தனள். அங்கு, புழுதியே அவளுக்குப் பூவணையாயிற்று. அவள் தன் தலையைத் தலைவனது தொடையின்மீது வைத்து,

'வைய முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகோதுகின் சில்பாடல் — இவ்விரவில்
கேட்டவா வென்றழதாள் கெண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து'

மன்னன் தன் மனைவியின் மன வருத்தத்தைக் கண்டு ஆறுத் துயர்கொண்டு, 'என்னை! நம் விதி யிருந்தவாறு! இதனுக்கு யாம் யாது செய்வது' என்று எண்ணி வாளா இருந்தனன். தமயந்தியும் உடல் மறந்து உறக்கங்கொண்டனள்.

12. அப்போது நளன், 'இவ்வளவு சிறுவழிக்கே இவள் ஆற்றாது இவ்வாறு வருந்துகின்றனளே,

மற்றும் எவ்வாறு நம்முடனிருந்து நாள் கழிக்கப் போகின்றாள்! இவள் நம்முடனிருந்தால் இன்னலுக்கே இடமாகும். ஆதலின் இவளை இவ்விடத்திலேயே விட்டகன்றால், துயிலுணர்ந்த பின்னர், இவ்வழியே செல்வாரோடும் சேர்ந்து, தன் தந்தை யில்லத்தைச் சார்வாள்; இதுவே நேரிய வழியாம்' என்றெண்ணி, அவளது உடையில் ஒரு பகுதியை அவளறியாவண்ணம் கிழித்துக் கொண்டு, ஆண்டிருந்ததோர் கல்லை எடுத்து அவள் தலைக்கு அணையாக அமைத்துவிட்டுச் செல்வானானன். செல்லுவான், அவள் தனிமையாயிருத்தலைக் கண்டு, நாம் பிரிந்து சென்றால் இவள்கதி என்னுவது எனத் தனக்குள்ளே சொல்லுவானாய்,

'தீக்கான கத்துறையும் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின் — நீங்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போல் போகின்றேன் யான்'

எனக் கூறிக்கொண்டே சென்றனன்.

13. இஃது இவ்வாறாக, தமயந்தி துயிலுணர்ந்து பார்க்க, தன் நாயகனைக் காணாது நெஞ்சந் துடித்து, எழுந்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தாள்; கண்டிலள், அதனால் நாயகர் தன்னை விட்டுப் பிரிந்தனர் என்று உணர்ந்து, உணர்வின்றி மண்ணில் வீழ்ந்தாள், துன்பத்துள் ஆழ்ந்தாள், பின்னர் ஒருவாறு தேறி எழுந்து 'அம்மவோ' என்று அரற்றினாள்; 'பாவியேன் என் செய்வேன்' என்று பதறினாள்; ஓவென்றலறிக் கதறினாள்; தன்னைத் தேற்றுவாரற்று அடியற்றமரமேபோல் படியில் வீழ்ந்தனள், 'என் ஆருயிர்த்தலைவ! உமக்கு யான் யாது குற்றம் இழைத்தேன்? நிக்கற்ற தேவியை இவ்வாறு கைவிடுதல் காதலற்கு அழகோ! என்

செய்வேன்! என் செய்வேன்! என் நாயகர் என்னை அகன்றுமே! இனி எங்குச் செல்வேன்! எவ்வாறு உய்வேன்!" என்று கூக்குரலிட்டாள். பின்னும்,

'மலையே மானே மயிலே குயிலே
கலையே பிணையே களிறே பிடியே
நிலையா உயிரே நிலதே றினர்போய்
உலையா வலியா முழைநீர் உரையீர்'

எனத் தமயந்தி இவ்வாறு தனிமையாக அரற்றியும் அவளது குரலொலியே மலையினின்றும் எதிரொலியாக மீண்டதே யன்றி, அவளை ஆற்றித் தேற்றுவார் அங்கு வேறு ஒருவரும் இலராயினர்.

14. தமயந்தி இவ்வண்ணம் தனியே நின்று புலம்பும்போது, அரவமொன்று தன்னை வளைந்தது கண்டு அஞ்சி அரற்றினாள். அப்போது வேடன் ஒருவன் ஓடிவந்து அதனைக் கொன்று அம் மாதரசியை விடுவித்தான். ஆயினும், அவன் துஷ்டனாகத் தோன்றினமையின், தமயந்தி அவ்விடத்தை யகன்று, அவ்வழியே சென்ற வணிகக் கூட்டத்திற் கூடிச் சென்றாள். அவர்கள் தமயந்தியினிடத்து மிக்க அன்புடையராய், அவளுக்கு உணவு முதலிய அளித்து, தம்முடன் அழைத்துச் சென்றனர். ஆயினும் அவ் வர்த்தகர்க்கு வழியில் கள்வர் முதலியோரால் இடையூறு பல நேர்ந்தமையின், அவ் விளைவனைத்தும் தமயந்தி தம்மைத் தொடர்ந்ததனால் உண்டாயிருக்கலாம் என்று ஐயமுற்று, அவர்களும் அவளை அகற்றிவிட்டனர். 'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்,' என்பது பழுதுபடுமோ?

15. பின்னர் தமயந்தி தன் விதியை வெறுப்பாளாய், சேதி நகர்க்கு வழி கேட்டுத் தெளிந்து

சென்று, ஆண்டு அரசன் அரண்மனையை யணுகினாள். அந்நகரத்து அரசியாகிய இவள்தன் சிற்றன்னைக்கும் அவளை இன்னாளென்று அறிவது அரிதாயிற்று. ஆகவே, தமயந்தி ஆண்டு ஒரு தாதியாக இருந்து காலங் கழித்துவந்தாள்.

16. இது நிற்க, சுமந்திரனோடு மக்களிருவரும் வீமராஜன் அரண்மனையை யடைய, அவர்கள் மூலமாக நளதமயந்தியர் காட்டை யடைந்தனர் என்று கேள்வியுற்று, வீமன் நாற்றிசையினும் அவர்களைத் துருவிக் காணுமாறு தன் தூதுவரைப் போக்கினன். அவர்கள் பல திசையிலும் சென்று தேடி, முடிவில் சேதி நகரை யடைந்து, ஆண்டிருந்த தோழியை தமயந்தி என்று ஒருவாறு தெளிந்து, அவளை அழைத்துக்கொண்டு போய் வீமனை அடைந்தனர். ஆண்டு, அவளது தாய் தந்தையர், தம் புதல்வியின் வேற்றுருவங் கண்டு வியந்து, மனம்வாடி, 'தெய்வத் திருவருள் இதுவாயின், யாம் என் செய்வோம்' என்று தம் தனயைக்குத் தேறுதல் கூறி, அவளை ஆண்டே இருத்திக்கொண்டனர். தமயந்தி தன் மணாளனது பிரிவை எண்ணி வருந்தியும், மக்களது கூட்டுறவையெண்ணி மகிழ்ந்தும் அங்குத் தங்கி இருந்தனள்.

14. சகோதர ஒற்றுமை

ஒரே தாய் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் சகோதரர் எனப்படுவர். பிறப்பினால் ஒற்றுமை யடைந்தது போலவே மனத்தினாலும் ஒற்றுமை யடைந்திருத்தல் சகோதரர்களுக்கு அழகாம். ஒரே வயிற்றிற் பிறந்து ஒரே வகையில் உண்டு உடுத்து வளர்ந்து வந்த சகோதரர், மனம் வேறுபட்டுப் பகைகொள்வது எவ்வளவு பேதமை!

சகோதரர்கள் சச்சரவு படாத குடும்பத்தைப் பார்ப்பது மிகவும் அரிதென்றே சொல்லலாம். 'துணையுடையான் படைக் கஞ்சான்,' 'உடன் பிறப்பால் தோள்வலிபோம்' முதலிய உறுதியுரைகள் சகோதர ஒற்றுமையைக் குறிப்பனவாகும். தன் நேசனிடத்து ஒற்றுமையுடையவனாகி, தன் பொருளை அவனும், அவன் பொருளைத் தானும் வேற்றுமையின்றி வழங்க உடன்படும் ஒருவன், தன் சகோதரன் தனது பொருள்களில் ஒன்றைத் தொடவும் பொறுதிருத்தல் எவ்வளவு அறியாமை! சில குடும்பங்களிலுள்ள சகோதரர், ஒருவன் நின்ற விடத்து மற்றவன் நில்லாமலும், ஒருவன் முகத்தை மற்றவன் பார்க்க மனங் கொள்ளாமலும் பகைத்து நிற்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். சகோதரரிடத்து ஐக்யபாகம் இன்மையால் விளையுந் தீங்குகள் சொற்பமல்ல. பதினாயிரம் ரூபாய் ஆஸ்தியுள்ள ஒருவனுக்கு ஐந்து குமாரர்கள் இருந்தால், அப்பொருளைக்கொண்டு ஐவரும் ஒரு தொழிலைச் செவ்வையுறச் செய்வாராயின், தக்க ஊதியத்தைத் தட்டாமற் பெறுவர். அவ்வாறின்றி, அவர்கள் சச்சரவுபட்டு நின்றால் ஒவ்வொருவன் இரண்டாயிரம் ரூபாயே அடைய நேரும். அச் சிறு தொகையைக் கொண்டு தக்கவாறு தொழில் செய்வது அசாத்தியமேயாகும். பதினாயிரத்தில் இரண்டாயிரம் ஐந்திலொரு பாகமாயினும், அந்தப் பதினாயிரத்தை முதற்றொகையாக வைத்துத் தொழில் புரிவதால், வரும் லாபத்தில் ஐந்திலொரு பங்கு, இரண்டாயிரத்தை முதலாகவைத்த தொழிலில் எதிர்பார்த்தல் கூடாத காரியமாம். இத்தகைய கேடுகள் இன்னும் பலவே ஆகையால், ஈண்டுச் சகோதர ஒற்றுமையைக்காட்டுஞ் சரிதம் ஒன்றைக் கூறுவோம்.

2. 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்னும் தருமவாக்கியத்தைக் கடைப்பிடித்து ஒழுக, ஸ்ரீராமன், சீதையோடும் இலக்குமணனோடும் கானகஞ் சென்றனன். அதுகண்ட நகரமாந்தர் அனைவரும், தத்தம் மக்களே காடு சென்றது போலக் கலங்கி நின்றனர். ஸ்ரீராமன் வனஞ் சென்றான் எனச் செவியுற்ற தசரதர், 'ஸ்ரீராமா! ஸ்ரீராமா! என் கண்மணீ! நாடாண்டு நன்மை புரிவாய் என்று இறுமாந் திருந்தேனே! என் மகிழ்ச்சியனைத்தும் மண்ணுகுமாறு காட்டிற்கா சென்றனை! அடா என் அருமைக் கண்ணே! என்னை வறிதே விட்டுச் சென்றனையே!' என்று பலமுறை கதறி அழுது உயிர் துறந்தார்.

3. தன் தாயின் தாய்வீடு சென்றிருந்த பரதன், ஸ்ரீராமரது பட்டாபிஷேகத்தைக் கண்டு களிக்கப் பரிந்து வந்தனன். வந்து, அயோத்தி நகரத்தின் எல்லையிற் புகுதலும், நகர முழுதும் அரவமடங்கி யிருந்தது. எதிர்ப்பட்டார் முகத்தில் துயர்க்குறியே தோன்றிற்று. பட்டாபிஷேக நகரம் பாழ்பட்ட நகரமாகக் காணப்பட்டது. அப்போது பரதன், 'என்னே! யாவுந் தீக்குறியாகத் தோன்றுகின்றன. அரசற்கு என்னுற்றதோ! அன்றி, அன்னையரில் எவர்க்கேனும் துன்பம் நேர்ந்ததோ! யாது நேரினும் என்ன? நமது அண்ணல் இருக்கின்றானன்றே? அவனுள்ள இடத்தில் துன்பமும் அணுகுமோ? அணுகாது அணுகாது. ஈண்டுப் பலவாறு எண்ணுவதில் பயன் என்னை; யாவும் சென்று ஆராய்ந்தறிவோம்' என்று தன் தேரை விரைந்து செலுத்தி, அரண்மனையை யணுகினன். ஆண்டு, அமைச்சன்மார் கண்ணீர் விட்டுக் கலங்கி ஒருபுறத் திருக்கவும், பாங்கி-

மார் பதறி யழுது படுதுயர் கூறவும் பரதன் கண்டு, அரண்மனையைச் சுற்றிப் பார்த்தான். தன் சோதரரில் ஒருவரையும் ஆண்டுக் கண்டிலன்; அன்றி, தந்தை-யாரையும் கண்டிலன். தாய்மாரில் ஒருவரும் தன் கண்ணிற் பட்டாரில்லை. உற்றது கூறுவார் ஒருவரும் இன்மையால் தன் அன்னையின் மாளிகையிற் புகுந்து அந்தப்புரத்தை யடைந்தனன்.

4. அங்கே தன் அன்னைமாத்திரம் முகமலர்ச்சி கொண்டு இருக்கக் கண்டு, 'அன்னாய்! என்னை இந் நகர முழுதும் துக்கங்கொண் டிருப்ப, நீ மாத்திரம் மகிழ்ந் திருக்கின்றனை! யாது காரணம்?' என்றான். உடனே கைகேயி எழுந்து, தன் மைந்தனைக் கட்டி-யணைத்து முத்தமிட்டு, 'என் கண்ணே பரத! பட்டம் நினக்கே சூட்டுமாறு சூழ்ச்சி செய்திருக்கின்றேன்' என்று கூறி வாயை மூடுமுன், பரதன், 'ஐயோ, பட்டம் எனக்கா? என் உயிர்போலும் தமையனுருக்கு என்-னுற்றது?' என்று கலங்கிக் கூறினன். அது கேட்ட கைகேயி, 'அடா பரத! பதறுதே நடந்ததைக் கேள்; அவசரப்பட்டால் யாது நடக்கும்?' என்று மற்றுங் கூறுவாளானாள்:

5. 'என் செல்வச் சிறுவ! நேற்று உன் தந்தை, ஸ்ரீராமனுக்குப் பட்டஞ் சூட்ட முடிவுசெய்த பின்பு, இங்கு வந்து எனக்குத் தெரிவித்தனர். அப்போது, சில நாட்களுக்கு முன்பு, அவர் எனக்கு வழங்கியிருந்த இரண்டு வரங்களையும் அருளுமாறு கேட்டேன். அவரும் அதனை யருள உடம்பட்டார். அதுவே தக்க தருணமென்று ஓர்ந்து, "இரண்டில் ஒன்று, என் மைந்தன் பரதனுக்குப் பட்டங் கட்டுவது, மற்றொன்று

ஸ்ரீராமனைப் பதினைன்கு வருஷம் காட்டிற்கு அனுப்-புவது" என்றேன். கொடுத்த வரங்களை மறுத்தற்-கின்றி, அறிவு சோர்ந்து மண்ணிற் சாய்ந்தார். பின்பு, ஸ்ரீராமனை யழைத்து நடந்தவை அனைத்தும் கவின்றேன். அவனும் உடனே மாவுரி யுடுத்து, சீதையோடும் லக்ஷ்மணனோடுங் காட்டிற்குச் சென்-றான். ஸ்ரீராமன் சென்றதை உன்னி யுன்னி, அன்ன-பானங்களை வெறுத்து, உன் தந்தை துறக்கம் புகுந்-தார். இவ்வாறு நான் அரிதிற் பெற்ற ஆசை நீ மூடி சூட்டிக்கொண்டு, என் கண்கள் கண்டுகளிக்க அரசு புரிவாய்' என்றனள்.

6. அக் கடுமொழிகளைக் கேட்ட பரதன், இடி விழுந்த நெடும் பனையேபோல் படியிற் சாய்ந்து, உணர்வற்றுக் கிடந்தான். மன்னனேபோல் மைந்தனும் மாணமடைந்தானே என்று மனம் பதைத்த கைகேயி, பரதனை வாரியெடுத்து பற்பல உபசாரங்கள் பரிந்து, புரிந்தாள். பரதன் ஒருவாறு தெளிந்து, தன் தாயைப் பார்த்துச் சீறி, 'பாதகி! குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே! எனக்குப் பட்டங் கட்டவோ இத் திங்குகளை இழைத்தனை? ஆஹா, என் அன்பிற்கினிய அண்ணலே! ரகுகுலதிலகனே; என்னை இங்கே விட்டுக் காட்டுக்கோ சென்றனை! வஞ்சகி! உலகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்டு அருள் புரிய வல்ல தயாநிதியைக் காட்டிற்கோ ஓட்டினை! என் அண்ணல் போகமும் யாரை அரசு புரிவது! ஆனை மதப்பட்டால் அலங்கார-மாகும், நாய்தானும் மதப்பட்டால் என்னுகும்! சிங்க மிருக்கு மிடத்தே பூனையை எற்ற எண்ணுவது எவ்-வளவு பேதைமை! உன்னை இனி என் அன்னை என்று

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P.O.

அணுவளவும் பாரேன்; இவ் வாளுக்கு இன்னே உன்னுயிரை இரையிடுவேன்: பெண்பழி சூழுமென்று பின்னிடுகின்றேன். தாயா யிருந்தும் எனக்கு இத் தகைமையில் நீங்காப் பழியை நிலைநிறுத்தினையே: ஐயோ, என் தமையனார் யாண்டுச் சென்றனரோ! அன்றி, பூவின்மீதும் நடக்கப்பொறுதன என் மதனியார் எவ்வாறு முட்செறிவுள்ள அக் கானகத்தில் நடப்பர்? அந்தோ நான் அறவும் பாவியானேனே! என் அண்ணலார் மகுடாபிஷேகத்தைக் கண்குளிரக் காணும் தவமில்லாது ஒழிந்தேனே! அன்றி, சந்திர சூரியர் உள்ளளவும் நீங்காப் பெரும்பழிக்குப் பாத்திரனானேனே!' என்று அரற்றி, மற்றும் கைகேயியை நோக்கி, 'அடி. பெண் பேயே! நான் வரும்போது முகமலர்ச்சிகொண்டு இருந்தனையே! ஸ்ரீராமரைத்தான் மாற்றவள் மைந்தனென்று வனத்திற் போக்க மனந்துணிந்தனை; நின் மணாளன் இறந்துபட்டது உணர்ந்தும் எவ்வாறு மகிழ்ந்திருந்தனை! நீ பெண்ணே, பேயோ, அன்றி, அரக்கியோ! அறியேன். கற்புடைய மாதர் கணவர் இறந்துபட்ட பின்பு, கணமேனும் உயிர் வாழ்வரோ! உன் மனம் பதைக்கவில்லையா! அதென்ன கல்லோ, இரும்போ! இன்னும் நீ உயிர் வாழ்ந்திருப்பின் பின்னும் எத்தனை உயிர்க்கு உலை வைப்பையோ! சண்டாளி, உன் முகத்தில் விழிப்பினும் நாகம் சித்திக்கும்' என்று கூறித் திரும்பிச் சென்று, தன் தந்தை பிணமேயாகிக் கிடப்பதைக் கண்டான்.

7. கண்ட பரதன் பதை பதைத்து விழுந்து, ஓலமிட்டு அரற்றி, 'எந்தாய், எந்தாய்! சிறியேன் என் செய்வேன்! இவ்வாசபாரத்தை என் தலையில் இட்டனையே! மண்ணாசை யெனக்காக்கி, விண்ணாசை நீ

காக்கச் சென்றனையோ?' என்று பலவாறு புலம்பி, ஆண்டுள்ளோர் தேற்றத் தேறினன். பின்னர், பரதன் வசிட்டர் முதலிய முனிவர்களை நோக்கி, 'ஐயன்மீர்! அடியேன் இளவரசு பாரத்தைத் தாங்குதற்குத் தக்கவன் அல்லேன். மூத்தோன் இருக்கவும் இளையோன் முறை செய்வது முறையே யன்று. என் தந்தையின் ஈமக் கடன்களை முடித்துவிட்டு, காட்டை யடைந்து, என் தமையனரைப் பணிந்து அழைத்து வந்து, அரசு புரியச் செய்வேன்' என்று உறுதி கூறினன்.

8. பின்பு பரதன் தவக்கோலம் பூண்டு, கண்ணீரும் கம்பலையுமாக, படைகள் புடை சூழ்ந்து வரப் புறப்பட்டு, கங்கைக் கரையை யடைந்து, குகன் என்பவனுல் ஸ்ரீ ராமரது இருப்பிடத்தை யுணர்ந்து, அக் குக னுதவி கொண்டே கங்கையைக் கடந்து செல்வானயினன். பரதன் நெருங்கி வருதலும், சித்திரகூடத்திலிருந்த இலக்குமணன் கண்டு, ஸ்ரீ ராமரை நோக்கி, 'அண்ணை! அதோ பரதன் வருகின்றன்; படையோடு வருகின்றன்; தேவரீரை அரசிழக்கச் செய்ததுமன்றி, காட்டினின்று ஓட்டுதற்கும் பகைமைகொண்டு வருகின்றன் போலும்' என்றன். அது கேட்ட ஸ்ரீ ராமர், 'இலக்குமண! பரதனை அவ்வாறு எண்ணுவது ஆடாது; அவன் என்மாட்டு அந்தரங்க பக்தி யுடையவன்; அவன் நம்மை அயோத்திக்கு அழைத்துக்கொண்டு போகும் எண்ணத்தோடு வருகின்றன்' என்றார்.

9. அதற்குள் பரதனும் நெருங்கி வந்து, ஸ்ரீ ராமரை யண்மி, ஆவினைக் கண்ட இளங் கன்றெனப் பரிந்தோடி, பாதத்தில்வீழ்ந்து, பலமுறை பணிந்தபின், தன் மாதனியையும் வணங்கி, கண்ணீர்விட்டுக் கதறி

நின்றான். ஸ்ரீ ராமர் பரதனது பரிவையும், கலக்கத்தையுங் கண்டு, மனம் பதறி, அவனைக் கட்டிக்கொண்டு, மார்போடணைத்து, முகத்தைத் துடைத்து, 'அப்பா பரதா! என் விசனமுறுகின்றாய்? நம் தந்தையும், தாயரும் சுகமோ?' என்றனர். அதுகேட்டலும், பரதன் ஓவென்று வாய்விட்டாற்றி, 'என் அண்ணலே! தந்தையார் வானுலகடைந்தார்; அதற்குத் தேவரீரது பிரிவே காரணம்' என்று பின்னும் கதறினான். தந்தையார் இறந்துபட்டார் எனக் கேட்ட ஸ்ரீ ராமரும், இலக்ஷ்மணனும் உயிர் துடித்து மண்ணிற் சாய்ந்தனர். சீதையும் அவ்வாறுயினள். பின்பு, அனைவரும் ஒருவாறு தேறி எழுந்தனர்.

10. பிறகு, பரதன் ஸ்ரீ ராமர் பாதத்தைப் பற்றிக்கொண்டு, 'அண்ணலே! அடியேன் விண்ணப்பம் ஒன்று; அதனைத் தேவரீர் மறுக்காமல் ஏற்க உடம்படவேண்டும்; அஃது என்னவெனின், தந்தையார் இறந்துபட்டார்; தேவரீரைப் பிரிந்த நகரம், தாமரை இல்லாத தடாகமும், மதி யில்லாத வானமும், அறிவுரில்லாத அவையும், குழந்தை யில்லாத குடியும் போல் பொலிவற்றிருக்கிறது. ஆகையால், தேவரீர் உளங்கொண்டு அயோத்தியை யடைந்து, முடி சூடி அரசாளுதல் வேண்டும்' என்று வேண்டினான்.

11. ஸ்ரீ ராமர் பரதன் பரிவினைக் கண்டு அகமகிழ்ந்து, அவனை மார்போடு அணைத்துக்கொண்டு, 'பரத! யான் அயோத்திக்கு வருவது அடாது; தந்தை கூறிய வாக்கைத் தட்டி நடப்பவன் தநயனாகான்; சத்துருவே யாவான். ஆகையால், நீ சென்று மகுடஞ்சூடி அரசுரிமை செய்; யான் பதினான்கு வருஷங்-

களையும் பதினைந்து நாட்களாகக் கழித்து வருகின்றேன்' என்றார். அதற்குப் பரதன் சற்றும் உடம்படாது, 'முன்னேன் இருக்கவும் பின்னேன் முறை செய்வது முறையோ? அடியேனை இவ்வாறு பழிக்குப் பாத்திரனாக்குவது, கருணைக் கடலாகிய தமக்குத் தகுமோ? அடியேன் தமது சகோதரன் அல்லனோ? அடியேனுக்கு வரும் பழி தமக்கும் ஆகாதோ? என் மதனியார் இப்போதே வாடிவிட்டனரே; அவரது மெல்லிய பாதம் கல்லிலும், முள்ளிலும் எவ்வாறு நடக்கும்! என் மாதாவை இவ்வாறும் வருத்தலாகுமோ! தந்தைக்குப் பின் தமையனரன்றோ தந்தை! தேவரீர் இவ்வாறு என்னைப் புறக்கணிப்பது என்னே! அந்தோ, அண்ணா! அயோத்திக்கு வாரும்; இன்றேல் அடியேனும் தேவரீருடனிருந்து காலங்கழிக்க விடை தாரும். லக்ஷ்மணன் செய்த தவம், அடியேன் செய்தேனில்லையோ?' என்று பற்பல துயர வார்த்தைகள் கூறி அரற்றினன்.

12. பரதனது நிலையைக் கண்ட ஸ்ரீ ராமர் பெரிதும் வாடி, 'என்னுயிரினுஞ் சிறந்த செல்வா, பரதா! யான் மனவேறுபாட்டாற் கூறுகின்றேன் என்று எள்ளளவும் எண்ணாதே; சொன்ன சொல்லைக் காத்தலே தூயோர் கடமை; ஆதலால், பதினைந்து வருஷமுங் கழிந்த மறுதினமே அயோத்தியிலிருப்பேன்' என்று உறுதி உரைத்தனர். அதுகேட்ட பரதன் ஒருவாறு துணிந்து, ஸ்ரீ ராமரது பாதுகையை இரந்து பெற்றுக்கொண்டு, அயோத்தியை யடைந்து, அதைச் சிங்காதனத்தில் வைத்து, அதனுக்கே முடிசூட்டி, அதனை நாடோறும் பூசித்து, தான் ஸ்ரீ ராமருக்காகப் பதினைந்து வருடமும் பிரதிநிதியாக இருந்து நீதி புரிந்து வந்தான். ஸ்ரீ ராமர்

தம் தந்தை கூறியவண்ணம், பதினைந்து ஆண்டையும், வனத்தில் வசித்துக் கழித்த பின்பு, அயோத்தியை யடைந்து, முடி சூடி யரசு புரிந்து, குடிகள் அனைவர்க்கும் இன்பமூட்டி இனிது வாழ்ந்திருந்தனர். அதுகண்ட பரதன், 'வறியனுக்குப் பொற் குவியல் கிடைத்தது போல்' பெருமகிழ்வுற்று வாழ்ந்திருந்தனன்.

13. மானவர்காள்! இவ் வுலகில் இறைவனை இருந்து அரசு புரிவதிலும் மற்றமான பதவி எதும் இல்லை. பரதன் வேற்றுத் தாய்வயிற்றிற் பிறந்தவனாயிருந்தும் அத்தகைய உயர் பதவியைத் தன் சகோதரன் பொருட்டு வெறுத்துநின்ற அவனது பண்பை என்னவென்று இயம்பலாம்! சகோதர ஒற்றுமையின் சிறப்பு இத்தன்மை யுடையதாம். ஆகையால், நீங்கள் உங்கள் சகோதரரிடத்து ஒருமனப்பட்டு நல்வாழ்வை நலக்க அடைவீர்களாக.

15. துரு விரும்பேல் — III

சமயந்தனைக் காலைத்துப் பாழ் மண்டபத்தில், போயும் கண்ணுறங்கும் நடுபாகத்தில், விட்டுப்பிரிந்த நளன், கண்ணுறவிட்டு அகலும் பசுவைபோல் வருந்தி, ஒருவாறு துணிந்து செல்வானனன். வழியில் மூங்கில்கள் ஒன்றோடொன்று உரசித் தீப்பற்றி யெரிய, அதன் நடுவில் பாம்பொன்று இக்குண்டு, வெம்மைக்கு ஆற்றாது வருந்துவதை நளன் கண்டு, மனமிரங்கி அருகிற்சென்று, அதனை மெல்ல எடுத்து அப்புறம் விட்டான். விடுதலும், அந்நாகம் நளன் காலில் தீண்டிற்று. உடனே, அவனது உடற்பொலிவு முற்றும், முகிலில் மறைபட்ட முழுநிலவேபோல் மங்கிற்று.

2. நன்மை புரிந்த நளனுக்குத் தீமை புரிந்த காகத்தின் செய்கை கொடியதே யாயினும், அச் செய்கை நளனுக்கு ஒருவாறு நன்மையாகவே முடிந்தது. நளன் எவரையேனும் காடி யடைந்து, குற்றேவல் புரியும் கொள்கையை உள்ளத்திற்கொண்டிருந்தான். அவன் மெய் வனப்பு, அவனது எண்ணத்திற்கு இடையூறாகின்றது. விதர்ப்பிண்டிய பின்பு உரு மாறியதனால், மன்னன் தன் எண்ணத்தை முட்டின்றி முடிக்க வல்லவனானான். இதனால் பெரியோர் தமக்குப் பிறர் புரியுந் தீங்கினையும் நன்மையாகவே கொள்வர் என்பது விளங்குகின்றதன்றோ?

3. நளன், தான் உருமாறியதை நோக்கி, இதுவே போர் நன்மைக்கே யாகுமென் றெண்ணி, நடந்து சென்று, கடற்கரையை நண்ணினான். அண்டு, கரையின்கண் உலவுகின்ற நண்டுகள், மன்னனைக் கண்டு அஞ்சி, ஓடி யொளித்தன. அது கண்ட நளன்,

'காதலியைக் காரிருளில் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றே — நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னே வுரை'

என்று கூறிக்கொண்டே போகும் வழியில் பகிப்பிணி தன்னை வருத்த, பையநடந்து அயோத்திமா நகரிற் புகுந்து, இருதுபன்னன் என்னும் மன்னன் சமூகத்தை யடைந்தான்.

4. பின்பு, நளன் சபயம் பார்த்து அரசனை யணுகி வணங்கி நின்றான். அம் மன்னன் நளனை நோக்கி 'நீ யாவன்? நின் செய்தியில்லை?' என்றான். நளன்,

'மன்னர் மன்ன! அடியேன் வாகுகன் என்னும் பெயரினன்: அசுவ லகூதனம் நன்கு அறிவேன்; தேர் நடத்துந் திறமுடையேன்' எனலும் அவ் வேந்தன் உள மகிழ்ந்து அவனை அத் தொழிலாளர்க்குத் தலைவனாக அமைத்தருளினன். நளன் வாகுகன் என்னும் பெயர் பூண்டு, தன் தொழில்களை மன்னவன் மகிழுமாறு செவ்வனே புரிந்து காலங்கழித்து வந்தான். ஆயினும், தன் காதலியைக் கைவிட்டு வந்த கொடுமை, அவனது நெஞ்சத்தைத் துன்புறுத்தா திருந்ததில்லை.

5. இங்ஙனம் இவ்வாறாக, தாய்வீடு சேர்ந்த தமயந்தி உண்டியுடைகளில் குறையின்றி அமர்ந்திருப்பினும், மணாளனைப் பிரிந்த மனக் கலக்கத்தைக் கணமேனும் கொள்ளாதிருந்ததில்லை. அவள் முகவாட்டத்தை அவளது பெற்றோர் காணுந்தோறும் மனமுளைந்து, தம் தனயையை ஒருவாறு தேற்றுவர். இவ்வாறு நாள் பல செல்ல, ஒரு நாள் தமயந்தி தன் தாயை நோக்கி, 'அம்ம! மணாளனைப் பிரிந்த மங்கையர் வையகத்தில் வாழ்ந்திருப்பது மாண்பன்று; ஆதலின், கற்றுய்ந்த புரோகிதரை நாற்புறமும் போக்கி, மலை, வனம், சோலை, நாடு முதலிய பல்வேறிடங்களிலும் என் நாயகரை நாடித் தேடுமாறு அனுப்புதல் வேண்டும்' என்று வேண்டினள்.

6. அவ்வாறே வீமன் பல்வேறிடங்களிலும் பல முறை தேடுமாறு பல புரோகிதரைப் போக்கினன். அப்போது, அம்மாது சிரோமணி, தன் நாயகனை நாடிச் செல்லும் அப் புரோகிதரை யழைப்பித்து, 'ஐயன்மீர்! நீங்கள் செல்லும் இடந்தோறும்,

"கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ ?"

எனக் கூறுங்கள் ; அது கேட்டலும் எதிர்வந்து பதிலுரைப்பவரை நன்கறிந்து வாருங்கள்' என்றுள். அப்புரோகிதரும் தாம் தேடிச்சென்ற பல்வேறிடங்களிலும் தம் அரசியார் கட்டளையிட்ட வண்ணமே வினவினர். ஆயினும், அதற்கு விடை கூறுவார் ஒருவரும் நேர்ந்திலர். முடிவில் அவர்கள் அயோத்தி நகரை யடைந்து, அரசன் அரண்மனையை யண்மி,

'கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ ?'

என்றனர். அது கேட்ட வாகுகன் வாட்டமுற்று, புரோகிதர் முன் போந்து,

'ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததவும்
பண்டை விதியின் பயனேகாண்'

என்று விடை கூறி யகன்றான்.

7. அம் மறுமொழி பெற்ற அந்தணர் மகிழ்ந்து விரைந்து சென்று, வீமன் அவையை யடைந்து, அயோத்தியில் நேர்ந்தவை யனைத்தும் வெளியிட்டனர். புரோகிதர் கூற்றை ஓன்றியிருந்து கேட்டறிந்த தமயந்தி புதியதோர் உவகைபூத்து, இழந்த கண்களையெய்தப் பெற்ற அந்தகனேபோல் அகமகிழ்ந்தாள். அதுமுதல் அவள் தனது நாயகன் வரவையே பெரிதும் நாடி நின்றாள்.

8. பின்பு வீமன், அமைச்சரது சூழ்ச்சியால், புரோகிதரை அயோத்தி நகருக்கு ஏவி, தமயந்திக்கு இரண்டாம் முறை சுயம்வரம் என இருதுபன்னனுக்கு அறிவித்தனன். அது கேட்ட அம் மன்னன் களிப்-

பென்னும் கடலுள் மூழ்கி, 'ஓகோ, தமயந்தி அன்று நமக்கே மாலையிட நயந்தனள்; அது தவறி நளன் கழுத்தில் விழுந்துவிட்டது. இனி இரண்டாம் முறை சுயம்வரம் எற்பட்டது நம்பொருட்டேயாகும்; இதில் என்னையும் ஐயமில்லை' என்று கருதிப் பின்னும் மகிழ்ந்தான். பிறகு, மன்னன் வாகுகனைக் கூப்பிட்டு, இனிய மொழிகள் இயம்பி, 'வாகுக! நாளை மூற்பகலில் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என விதர்ப்பராஜன் தூதனுப்பினான்; ஆதலின், காற்றினுங் கடிது செல்லும் கலிமாக்களை இனிது ஆராய்ந்து, இரதத்தில் பூட்டுக' என்றான். வாகுகன், அக் கடுமொழி கேட்டு, கலக்கமடைந்து, 'என்னே, நம் காதலி இவ்வாறும் கருதுவளோ! "பாம்பறியும் பாம்பின் கால்," அதுபோல், நம் மனைவி மனத்தை நாம் நன்கறிவோம். இச் சூழ்ச்சி நம்மைக் கண்டறிவதற்கே யன்றி மற்றன்று' எனத் துணிந்தனன். துணிந்தும், 'யாதோ, நாம் எவ்வாறு துணிவது! பெண்மதி பேதைமைத்து, ஆதலின், நம்மை நெடுங்காலம் காணாதொழிந்ததே யன்றி, நாம் அவளைக் காரிருளில் கானகத்தில் கைவிட்டு வந்த திச்செயலையும் உன்னியுன்னி, நம்மை அறவும் வெறுத்தனளோ, யாதோ அறியோம். ஆயினும், யாமும் இவணேடு செல்ல தேர்ந்தமையின், விரைந்து சென்று உண்மையைக் கண்டறிவோம்' எனத் துணிந்தான்.

9. இவ்வாறு, 'இருதலைக் கொள்ளி எறும்பு போல்' இன்னலுற்று வருந்தும் நளன், அசுவசாலையிற் புகுந்து, நல்லியல் வாய்ந்த பரிமாக்களைப் பற்றிக் கொணர்ந்து தேரிற் பூட்டினன். இறைவனும் ஆடையணிகளால் தன்னைப் புனைந்துகொண்டு புறம்போந்து,

இரதத்தில் ஏறினான். வாகுகன் தன் வண்மை தோன்-றத் தேரை நடத்தினான். கலிமாக்கள் விரைந்து செல்-லுங் காலத்து, கண்டோரனைவரும், 'இஃதென்ன! இப் புரவிகளுக்கு முன்னங் கால்கள் முகத்தில் முளைத்-துள்ளனவோ!' எனக் கருதி, வியப்புறுவதற்கு இடமுண்டாயிருந்தது.

10. இவ்வாறு மதி வேகமும் பின்னிடுமாறு இரதத்தை நடத்தி விதர்ப்ப நாட்டை யடைந்தனர். அப்போது, இரவியும் மேற்கடலில் குளித்தான். தம-யந்தி தன் நாயகன் தேர் நடத்துந் திறத்தை நன்கு அறிவாளாதலால், அயோத்தியினின்றும் வரும் இர-தத்தின் மேலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தாள். இரதம் விதர்ப்ப நாட்டையடைதலும், தமயந்தி, மேல் நிலையி லிருந்து, தேர்ப்பாகனது செய்கைகளை உற்று நோக்கிய வண்ணமாகவே யிருந்தாள். வாகுகனெனிய நளன், தன் உருவில் வேறுபட்டிருப்பினும், செய்கை, குணம் முதலியவற்றில் சிறிதும் மாறுபட்டானில்லை. ஆதலால், தமயந்திக்குத் தன் நாயகன் இவனே என்-பதைக் கண்டறிவது எளிமையாக இருந்தது. உடனே, தமயந்தி, தன் பாங்கியரில் கூர்ந்த மதியுள்ளாள் ஒருத்-தியைச் சாரதியிடம் அனுப்பி, அவனைப்பற்றி ஆராயு-மாறு கூறினள்; அவள் பாகனை யண்மி, 'ஐய! நீர் யார்? உமது பெயர் யாது? உமது ஊர் எது? இங்குப் போந்த காரணம் யாது?' என்றனள். அது கேட்ட நளன், 'அம்மா! நான் இருதுபன்ன மன்னற்குத் தேர்ப்-பாகன்; வாகுகன் என்னும் பெயரினன்; எம்மூர் அயோத்தி நகர். இன்று தமயந்திக்கு இரண்டாம் சுயம்-வரம் எனக் கேள்வியுற்று இங்கு வந்தோம்' என்றான்.

11. வாகுகனது வரப்போகும் கேட்ட பாங்கி, பரிந்து சென்று, தான் கேட்டவாறு தமயந்திக்கு அறிவித்தாள். தமயந்தி மற்றும் அத் தேர்ப் பாகனது செய்கைகளை முற்றும் கண்டு வருமாறு அவளை ஆவலுடனும், அவள் சென்று வாகுகனது செய்கைகளை முற்றும் உற்றுக் கவனிப்பாளாயினள். அப்போது அப் பாகன், பரிகளைத் தேரினின்றும் விடுத்து, செம்மையுறத் தேய்த்து அசைசாலையிற் கட்டிய பின்பு, பாகசாலையிற் சென்று, சமையல் செய்ய ஆரம்பித்தனன். அக் காலத்து, அப் பாங்கி வாகுகனை நோக்கி, 'ஐய! புரோகிதர் அபோத்தியை படைத்து,

''கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதுவும் வேந்தற்குப் போதுமோ?''

என்ற வினாவிற்கு விடை கூறினவர் நீர்தாமோ?' என்றனள். அதற்கு நளன் 'ஆமாம்' என்றனன். பின்பு, அப் பாங்கி தன் தலைவியை படைத்து நளன் கூறிய விடையும், அவன் அட்டிற்றொழிலில் புகுந்தமையும் அறிவித்தனள். அது கேட்ட தமயந்தி, 'ஆகா! நன்று நன்று, நீ திரும்பவுஞ் சென்று, அப் பாகன் பாகஞ் செய்த பதார்த்தத்திற் சிறிதுபாகம் பெற்றுவருக' என்று எவினள். மற்றும் தன் மக்களையும் அவ் வாகுகன்பால் அழைத்தேக அவனுக்கு அனுமதியளித்தனள்: தோழியும் அம் மக்களை அழைத்தேகி, வாகுக னிருந்த மாடப்பள்ளியில் விட, அவர்களை நளன் கண்டு உளம் பதைத்து, கண்ணீர் சொரிந்து, 'மக்காள்! நீங்கள் என் மக்களைபோல் காணுகிறீர்கள்; நீவிர் யார் மக்கள்?' என்றனன். வாகுகன் வினாவைக் கேட்டு அச் சிறுவரும், சிறுமியும், 'ஐய! யாங்கள்

டைதகாட்டு நிருபாது மக்கள், அம் மன்னர் மன்னன் மைமையும் எம் அன்னையையும் கைவிட்டுக் காளகம் சென்றமையின் எண்டைடைந்து தங்கியிருக்கின்றோம்' என்றனர். அவர்கள் சொல்லம்பு வாகுகன் மனத்தில் வாரிருளிச் சென்று வைதத்தது. அதனால், அவன் கண்ணீர்சோரக் கலங்கி நின்றனன். இவ்விரவு அரசத்துய் கண்ட தோழி, அவன் சுவையுறச் சமைத்த பதார்த்தத்திற் சிறிது பெற்றுக்கொண்டு போய்த் தமயந்திக்குக் கொடுத்தாள். வாகுகனது செய்கைகள் அனைத்தும் அறிந்ததன்றி, அவன் இனிமையுறச் சமைத்த பதார்த்தத்தை இன்புடன் உண்டு, உருசியைக் கண்டு, ஐய முற்றும் விண்டு, இனி நமக்கு நற்கால முண்டு என்று தேர்ந்து, தன் தாயை யண்மி, 'அன்னை! அயோத்தியினின்றும் வந்த வாகுகனை எனது மணவாளன்; பாகனை எனது பதி; சூதனாக வந்த சூதனை என் சுயம்வரன்; தன்னை மறைத்து வந்த வலவனை எனது வல்லபன்; அடிதற்றொழில் புரியும் ஆளனை எனது அன்பன்' எனப் பன்னிப் பன்னிக் கண்ணீர் உகுத்தாள். பின்பு அவள் தன் தந்தையின் அநுமதி பெற்று வாகுகனை வரவழைத்து நன்கு நோக்குதலும், நளனை எனக் கண்டு, அன்புறத் தழுவிக்கொண்டு, வாய் விட்டுக் கதறினாள். 'என் இன்னுயிர்த் தலைவ! உமது காதலியைக் கானகத்தே காரிருளில் பாழ்மண்டபத்தில் உறக்கத்திற் கைவிட்டுச் செல்ல உமது மனம் கல்லோ! இருப்போ! மற்றியாதோ! அறியேன்' என்ற தாபவார்த்தைகள் பலபடப் பகர்ந்தாள்.

12. அம் மொழிகள் கூரிய வாள்போல் நின்று அசைத்து மனத்தை வர்தலும், அம் மன்னன் நின்றுந்

தோன்றுது நிகைத்து நின்று ஒருவாறு தேறி, 'என் கண்மணிபோல்வாய்! இத்தகைய தீங்குகளை உனக்கு யான் எண்ணி யிழைத்தே னல்லேன்; விதிவழி மதி சென்றது; மற்றொன்றும் யானறியேன்' என்று புகன்றான். நளனது வெளிப்பாடு கண்ட மாந்தரும் வேந்தரும் மகிழ்ச்சி யடைந்தார்கள். அயோத்தி மன்னனும் அதிசயித்தான். அன்று அந்நகரம் திருமண நகரேபோல் சிறந்து விளங்கிற்று. பின்பு, வீமராஜனும் வேறு சில வேந்தரும் மந்திராலோசனை மண்டபத்தை யடைந்து, நளன் மறுபடியும் தன் நகரத்தைப் பெறுமாறு யாதெனச் சூழ்ந்து, சூதாட்டத்தில் தோல்வி யடைந்த பொருளைச் சூதாட்டத்தானே பெறவேண்டும் என்று கருதி, நளனை ஆண்டே யிருத்திக்கொண்டு, சூதாட்டத்தில் வல்லவனுமாறு நன்கு பயிற்றினர். நளன் கவறுடலில் கைதேர்ந்தவனாகி, நால்வகைப் படையும் புடைசூழ நிடத நாட்டை யடைந்து, ஆண்டுக் கொடுங்கோல் புரிந்துகொண்டிருந்த புட்கரனைக் கவறுடலில் புறங்கண்டு, அவனது நாடு, நகரங்களையும் பெற்று வெற்றி கொண்டு களிப் பெய்தினன். பழமையேபோல் நளனுக்கு மெய்வனப்புத் தோற்றியது. ஆயினும், நளன் புட்கரனது நாட்டை அவனுக்கே தானமாகக் கொடுத்து அனுப்பிய பின்பு, தன் மனைவி மக்களை விதர்ப்ப தேசத்திலிருந்து வரவழைத்துக்கொண்டு செங்கோல் செலுத்தி, எல்லாம் வல்ல இறைவனை நாளும் மனமொழி மெய்களால் வணங்கி வாழ்த்தி, அன்புற்று இன்புற்று, இனிது வாழ்ந்திருந்தனன்.

16. வாலிபச் சாரணர் இயக்கம்

இப்போது உலகமுழுதும் வியாபித்திருக்கும் வாலிபச் சாரணர் இயக்கம் 1908 ஆம் வருஷத்தில் ஸர் ராபர்ட் பேடன் பவல் என்னும் ஓர் ஆங்கில தளகர்த்தரால் முதலில் இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்டது. இஃது ஆங்கிலத்தில் 'பாய் ஸ்கௌட் மூவ்மென்ட்' என்று வழங்கிவருகிறது. இதில் பதினைந்து வயதிற்கு மேல், பதினெட்டு வயதிற்கு உட்பட்ட வாலிபர்கள் சேரலாம். எழு வயதிற்குமேல் பன்னிரண்டு வயதிற் குட்பட்ட சிறுவர்கள் சேருவதற்கு இதில் ஒரு கிளை இயக்கம் உண்டு. அதற்கு ஆங்கிலத்தில் 'உல்ப் கப் மூவ்மென்ட்' என்று பெயர். 'உல்ப் கப்' என்றால் ஓநாய்க் குட்டி என்று அர்த்தம். பன்னிரண்டு வயதானதும் இச் சிறுவர் வாலிபச் சாரணர் ஆவர்.

2. வட அமெரிக்காவில் வசிக்கும் செவ்விந்தியர் இறந்த சாரணராவர். அவர்கள் பாஷையில், 'ஸ்கௌட்' என்னும் பதத்திற்கு ஓநாய் என்று பொருள். அதையால்தான் வாலிபச் சாரணருக்கு ஓநாய்கள் என்றும், அவரைக் காட்டிலும் இளைஞரான சாரணச் சிறுவருக்கு ஓநாய்க் குட்டிகள் என்றும் பெயர் வந்தது.

3. இவ்வியக்கத்தின் நோக்கம் பள்ளிகளைப் பிற்காலத்தில் உபயோகமுள்ள நல்ல பிரஜைகளாகப் பழக்குவித்தல். சாரணரது மூலவாக்கியமும், வாக்குத் தத்தமும், சட்டமும், தினசரி வேலைகளில் செய்யும் மனத்திற்கினிய தொழில்களும், அவர்கள் தேறவேண்டிய பரீட்சைகளும் ஆகிய இவையனைத்தும், நல்ல பிரஜைகளுக்குரிய தன்னடக்கம், பரோபகாரம், தேசாபிமானம், சமயோசிதபுத்தி, தேகபலம், மனோதிடம் முதலிய அரிய பெரிய குணங்களை அவ் வாலிபச் சாரணர் களிடையில் அடைந்து வளர்ப்பதற்கு அநுகூலமாயிருக்கின்றன.

4. தயாராயிரு என்பது வாலிபச் சாரணர் இயக்கத்தின் மூலலோக்கியம். பிறர்க்கும், தங்கள் தேசத்திற்கும் தங்களால் இயன்ற மட்டும் உதவி புரிய வாலிபச் சாரணர் எப்போதும் தயாராயிருக்க வேண்டும் என்பது இதன் கருத்து. அவ்வாறு தயாராயிருப்பதற்குத் தேக பலமும், மனோதிடமும் அவசியம். அதையால் தேகம், மனம் இரண்டையும் பயிற்சி செய்து சரியான நிலையில் வைத்திருப்பது இவர்கள் கடமையாகும். பிறர்க்கு உதவி செய்ய வேண்டும் என்பதை உத்தேசித்தே, வாலிபச் சாரணர் காயப்பட்டவர்களுக்கு, வைத்தியர் வருமுன், முதல் உதவி புரியவும், எரிகிற

ரிட்டினின்றும் ஜனங்களை விலக்கிக் காப்பாற்றவும், நெருப்பு அவிக்கும்யந்திரத்தை உபயோகப்படுத்தவும், தண்ணீரில் மூழ்கி மூச்சற்றுக் கிடப்பவரை உயிர்ப்பிக்கவும் கற்பிக்கப்படுகின்றனர். ஆரம்ப சிகிச்சை செய்த பிறகு படுகாயம் பட்டவர்களையும் எலும்பு முறிந்தவர்களையும் வைத்தியசாலைக்குக் கொண்டுபோக வேண்டிய முறையையும், அருகிருக்கு மிடத்தையும், வழி தப்பினவர்களுக்கு வழிகாட்டுவதற்கு ஓர் ஊரின் எவ்வொரு தெருவையும் அவர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும். பிறருக்கு உதவி செய்வதற்கென்றே வாலிபச் சாரணர் தச்சுவேலை, கருமார வேலை முதலிய தொழில்களைச் செய்து, பொருள் ஈட்டி, அதைத் தபால் ஆபீஸ் நிதியில் பத்திரப் படுத்திவைப்பர். தேசத்தைக் காக்கும்பொருட்டுத் துப்பாக்கி சுடவும், யுத்தகளத்தில் வாசஞ் செய்யும் விதத்தை அறிந்துகொள்ள வெளியூர்களில் கூடாரங்கள் அடித்துத் தங்களுக்கு வேண்டிய ஆகாரம், படுக்கை முதலிய சௌகரியங்களைத் தாங்களே தேடிக்கொள்ளவும் கற்பிக்கப் படுகிறபடியால், வாலிபச் சாரணருக்கு நாளடைவில் தேசாபிமானம், யுக்தி, சமயோசித புத்தி, தற்சார்பு முதலிய குணங்கள் விருத்தியாகும்.

5. வாலிபச் சாரணரில் இளம்பாதர் அல்லது மூன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, முதல் வகுப்பு, ஆசருடைய சாரணர் என்ற நான்கு பிரிவுகளுண்டு.

6. மூன்றாம் வகுப்புச் சாரணர் ஆவதற்குப் பின்னுண்ட பரீட்சைகளில் தேறின பிறகு சாரண வாக்குத்தத்தம் செய்யவேண்டும்.

(1) சாரணர் சட்டங்கள், அடையாளங்கள், சலாம் செய்யும் விதங்கள்.

(2) வரலாறு 'யூனியன் ஜாக்' என்னும் ஐக்கியக் கொடி என்ற பிரிடிஷ்கொடி எற்பட்டதன் வரலாறும் அதைச் சரிவரப் பறக்கச்செய்யும் விதமும்.

(3) வாழ் நாளில் பிரயோசனப்படத்தக்க நீண்ட கயிற்றை அறுக்காமல் வேண்டியஅளவு குறுக்குவதற்காகப் போடும் 'இடையர் முடிச்சு,' பலவித பருமனுடைய கயிறுகளை ஒன்றுய்ச் சேர்க்கப் போடும் 'செம்படவர் முடிச்சு' முதலிய பலவித முடிச்சுகள் போடுதல்.

7. இவற்றில் இங்குக் கவனிக்கத் தக்கவை சாரணர் வாக்குத்தத்தமும் சட்டங்களுமே.

வாக்குத்தத்தம் :

(1) என்னல் இயன்ற அளவு கடவுளுக்கும் அரசனுக்கும் என்னுடைய கடமையைச் செய்யவும்,

(2) எப்போதும் பிறருக்கு உதவிபுரியவும்,

(3) சாரணர் சட்டத்திற்கு அடங்கிநடக்கவும்

என்னுடைய கௌரவமே சாட்சியாக நான் வாக்குத்தத்தம் செய்கிறேன் என்பதாம். இந்த வாக்குத்தத்தத்தின் அறிகுறியாகத்தான் சாரண வாலிபன் தன் கைச் சிறுவிரலின்மீது கட்டைவிரலை வைத்து அழுத்தி, மற்ற மூன்று விரல்களினல் சலாம் செய்கிறன்.

சாரணர் சட்டங்கள் :

(1) சாரண வாலிபனுடைய கௌரவம் நம்பப்பட வேண்டும்.

(2) சாரண வாலிபன் ராஜபக்தி யுடையவன்.

(3) சாரண வாலிபன் கடமை பிறருக்கு உதவி புரிந்து உபயோகமுள்ளவனாக இருப்பதே

(4) சாரண வாலிபன் எல்லோருக்கும் சிநேகிதன். வாலிபச் சாரணரில் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி, வேழை, பணக்காரர் என்ற வித்தியாசமே யில்லை. எக் குடியிற் பிறப்பினும் எச் சாதியை யிருப்பினும் ஒரு சாரண வாலிபன் மற்றொருவனுக்குச் சகோதரனே.

(5) சாரணவாலிபன்எல்லோரிடத்தும் மரியாதை-யுள்ளவனாக இருப்பான்.

(6) சாரண வாலிபன் பிராணிகளுக் கெல்லாம் சிநேகிதன்.

(7) சாரண வாலிபன் தன் பெற்றோர், தலைவர் அல்லது சாரண அதிகாரி இட்ட கட்டளையை மறுக்-காமல் அதற்குக் கீழ்படிந்து நடப்பான்.

(8) சாரண வாலிபன் எவ்விதக் கஷ்டங்கள் வந்-தாலும் சற்றும் வருந்தாமல் சிரித்தமுக அடித்துக்-கொண்டு புன்சிரிப்புடையவனா யிருப்பான்.

(9) சாரண வாலிபன் பொருளை வீண் செலவு செய்யாமல், சிக்கனமாக இருப்பான்.

(10) சாரண வாலிபன் சிரகாணசுத்தியுடையவன்.

8. ஒரு மாதம் இளம்பாகனா யிருந்து, பிறகு ஆப-த்தில் முதல் உதவி செய்தல், கொடிகளால் குறிப்புக்

காட்டுதல், 12 நிமிஷங்களில் ஓட்டமும் நடையுமாக ஓருமைல் போதல் முதலிய பரீட்சைகளில் தேறினால், இரண்டாம் வகுப்புச் சாரண வாலிபன் ஆகலாம்.

முதல் வகுப்புச் சாரண வாலிபனவதற்குப் பின்கண்ட பரீட்சைகளில் தேறவேண்டும்:

(1) ஐம்பது கஜம் நீந்துதல், (2) தபால் ஆபீஸ் நிதியில் ஒரு ரூபா சேமித்தல், (3) குறி காட்டிச் சீக்கிரத்தில் ஒரு சமாசாரத்தை அனுப்புதல்.

9. முதல் வகுப்புச் சாரண வாலிபன் பின்கண்டவைகளில் எதாவது மூன்றில் தேறினால் அவன் அரசனுடைய சாரண வாலிபன் ஆகலாம்: (1) ஆபத்தில் முதல் உதவி; (2) நெருப்பு அணைக்கும் யந்திரத்தை உபயோகித்தல்; (3) துவிசக்கரவண்டி ஊர்ந்து போதல்; (4) தானே வழி கண்டு பிடித்த ஓரிடத்திற்குச் செல்லுதல்; (5) துப்பாக்கியால் குறிபார்த்துச் சுடுதல்; (6) எரிகிற வீட்டினின்றும் ஜனங்களை விலக்கிக் காப்பாற்றுதல்.

10. இனி, வாலிபச்சாரணர் இயக்கத்தின் அமைப்பைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம். இவ்வியக்கத்தின் தலைவரும் ஸர் ராபர்ட் பேடன்பவல் என்பவரே. இவரே முக்கிய சாரணர். இவருக்கு உதவிசெய்ய நிர்வாக சபையோடுகூடிய பெரிய சபை ஒன்றுண்டு. இதற்கு அடுத்தபடி உள்ளவர்கள் கமிஷனர்கள். இவர்களில் தேசகமிஷனர், மாகாண கமிஷனர், ஜில்லா கமிஷனர் எனப் பல வகுப்பினர் உளர். ஒவ்வொரு ஜில்லா கமிஷனரும், சபையாரும் அநேக சாரணப் படைகளைப் பரிபாலிப்பர். ஒவ்வொரு படையிலும், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அணிகளுண்டு. ஒவ்வொரு

படைக்கும் ஒரு சாரண ஆசிரியரும், ஒரு உதவிச்சாரண ஆசிரியரும் இருப்பர். ஒவ்வொரு அணிக்கும் ஒரு தலைவனும் ஓர் உதவித் தலைவனும் உண்டு. அணியிலுள்ள ஒவ்வொரு சாரண வாலிபனும் தலைமுதல் கடைவரையில் முறையே 1,2,3,4,5,6 என்று அழைக்கப்படுவான். ஓர் ஊரிலுள்ள சாரணப்படைக்கு அந்த ஊர் பெயரையே இடுவது வழக்கம். ஒரு படையிலுள்ள ஒவ்வொரு அணிக்கும் ஒரு விலங்கு அல்லது ஒரு பறவையின் பெயரை இடுவதுண்டு. உதாரணமாக, 9ஆம் சென்னைப் படையில் புலி, பூனை, கழுகு, ஆந்தை என நான்கு அணிகளுண்டு. சாரண ஆசிரியர் கூப்பிடும்போது ஒவ்வொரு அணியும் அதற்குரிய பிராணியைப்போல் கூவிக்கொண்டு வரும்.

11. இந்த இயக்கத்தில் சேருவதால் நமது சிறுவர் அடையும் நன்மைகள் பலவற்றை முன்பே சொன்னேம்; இன்னும் சிலவற்றை இப்போது சொல்லுவோம்; ஜாதி வித்தியாசத்தால் நமது தேசத்தில் ஜனங்கள் வேற்றுமைப்பட்டுச் சண்டை யிடுகின்றனர் நாட்டிற்கும், நகரத்திற்கும், எம் மதத்தினர்க்கும், எச்சாதியாருக்கும் எற்ற இவ்வியக்கம் நமது நாட்டில் பரவிப் பலப்படுமாஞல் மேற்சொன்ன சண்டை சச்சரவுகள் அடியோடு அற்றுப்போம். எக்குடியிற் பிறப்பினும் எச்சாதியஞ யிருப்பினும் வாலிபச் சாரணர் ஒருவரை யொருவர் சகோதராகப் பாவிப்பதால், தேசத்தில் வேற்றுமை நீங்கி ஒற்றுமை பலப்படும். தலைமை வகிக்கும் யோக்கியதையும் தலைவர்களுடன் ஒத்து உழைக்கும் குணமும் உண்டாகும். இத்தகைய குணங்கள் நமது தேசம் முன்னேற்றம் அடைவதற்கு இன்றியமையாதவை. ஆகையால் இந்த இயக்கத்தை

நம் நாட்டிற்கு ஒரு பெரும் பாக்கிய மென்றே சொல்ல-வேண்டும். இதன் கர்த்தராகிய ஸர் ராபர்ட் பேடன் பவலும், இதை ஆதரிப்பவராகிய மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், உவேல்ஸ் இளவரசரும் நீடூழி வாழக் கடவுள் கருணை புரிவாராக.

17. சிறுவர்க்குரிய முதற் கடமை

தம் மக்களுக்கு வேண்டிய பொருள்களைச் சம்பாதித்-துக் கொடுத்து, அவர்களைப் பாதுகாத்து, அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பல விஷயங்களையும் நன்-றாய்க் கற்பித்துக்கொடுப்பது பெற்றோர்களுக்கு உற்ற கடமையாம். அதற்குப் பிரதியாக அம் மக்கள் செய்ய-வேண்டிய கடமைகளும் அநேகம் உண்டு. ஆயினும், பிறந்த மாத்திரத்திலேயே பிள்ளைகளுக்கு நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்ளும் திறமை உண்டாகா-தாகையால், இவ்வுலகில் நன்றாய்ப் பழகி, அனுபவத்-தில் முதிர்ந்த மூத்தோர்களுடைய நற்புத்தியை ஆதார-மாகக்கொண்டு, தமக்கு நல்ல விவேகமும் நன்மை தீமைகளை ஆராயும் திறமையும் உண்டாகும் வரையில், அவர்களுடைய சொற்படி நடந்துவருவது மிகவும் உத்தமமானது.

2. சிறுவர்க் குரிய முதற் கடமை கீழ்ப்படிதல்-லாம். கீழ்படிதலாவது பெரியோர் சொன்ன காரி-யத்தைத் தடையின்றி உவப்புடன் உடனே செய்வதாம். உண்பது உறங்குவது வீண்பொழுது போக்குவது முதலான தமக்கு இஷ்டமான காரியங்களைச் செய்யச் சொன்னால் சிறுவர்கள் உடனே உடன்படுகிறார்க-ளல்லவா? அவ் வண்ணமே தமக்குச் சம்மதமில்லாத

காரியங்களானாலும், தம்மைப் பார்க்கிலும் அறிவில் மூத்தார் எந்த வேலையைச் செய்யச் சொன்னாலும் சிறுவர்கள் அதனைத் தடையின்றி உடனே செய்ய உடன்பட வேண்டும்.

3. 'நான் என் படிக்கக் கற்கவேண்டும்? புத்தகங்களை யெடுத்துப் படிக்க எனக்கு இஷ்டமில்லை. விளையாட்டுக் கருவிகளை வைத்துக்கொண்டு விநோதமாய் விளையாடுவதிலேயே எனக்கு விருப்பம் அதிகம்' என்று சிறுவர்கள் தற்காலத்தில் சொன்னாலும் சொல்லுவார்கள். எனினில், சிலவருஷங்களுக்குப் பிறகு இவ் விளையாட்டுக் கருவிகள் தமக்கு விநோத முண்டாக்க மாட்டா என்றும், இவ் விளையாட்டுக் கருவிகளை யெல்லாம் தள்ளிவிட்டுப் புத்தகங்களில் சொல்லிய புதுமையான அரிய கருவிகளைக் கைக்கொண்டு விநோதமாய்ப் பொழுது போக்கத் தக்ககாலம் சீக்கிரமே வந்துவிடும் என்றும் தற்காலத்தில் அவர்களுக்குத் தெரியாது.

4. 'எனக்கு எழுத இஷ்டமில்லை; கீழும் மேலும் சிளமும் கோணலுமாய்க் கோடுகளிழுத்து எழுதுவது மீண் வருத்தமான வேலை' என்றும் சில பிள்ளைகள் சொல்லுவதுண்டு. அந்தக் கோடுகளில் அடங்கியுள்ள ஐசுவரியம் இப்படிப்பட்ட தென்பது அவர்களுக்கு இப்போது தெரியா தாகையால் அவர்கள் அப்படிச் சொல்லுவார்கள். அதன் பெருமை எப்படிப்பட்ட தென்பீர்களோ? இந்த வித்தையைப் பல்லாயிரம் வருஷம் பலகோடி அறிஞர்கள் வெகுவாய்ப் பிரயாசைப்பட்டு இப்போது நமக்கு இவ்வளவு எளிதாகச் செய்திருக்கிறார்கள். நாம் காண்பது, செய்வது, சிந்திப்பது முதலான பல விஷயங்களையும் கடிதத்தில்

குறித்த சில புள்ளிகளின் மூலமாய் அவ் வித்தை வெளியிட வல்லது. இதை ஒருவன் கற்றுக்கொள்வானால் அப்போது படிப்பதும், எழுதுவதும் எவ்வளவு கடினமான வேலை! அதில் மிகவும் அலுப்பு உண்டாகின்றது என்று சொல்வதற்குப் பதிலாக, இந்த அற்புதமான வித்தையை நான் எவ்வளவு சுலபமாய்க் கற்றுக்கொள்ளும்படி செய்திருக்கிறார்கள். இதன் மூலமாய் நான் சிந்திப்பது, செய்வது முதலான பல விஷயங்களையும் அதிக காததூரத்துக்கு அப்பாலிருந்தாலும், அப்படிப்பட்டவர்களுக்கும் ஒரு துண்டுக் கடிதத்தைத் தபாலில் அனுப்பித் தெரிவிக்கக் கூடும். அவ் வண்ணமே தபால் வழியாய்வந்த துண்டுக் கடிதத்தைப் பார்த்து, நெடுந் தூரத்துக்கு அப்பால் இருப்பவர்களுடைய கருத்தையும் நான் எளிதில் அறிந்துகொள்ளக்கூடும் என்று சொல்லிச் சந்தோஷிக்கும்படி ஏற்படும்.

5. ஒருவர் கண்ணுக்கும் தெரியாமலும், ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பெயர்த் தெடுத்துக் கொண்டு போகக் கூடாமலும் இருக்கின்ற அரியபொருளாக ஒருகால் நமக்குத் தோன்றிய அபிப்பிராயங்களைக் கண்ணுக்குத் தெரியக் கூடிய பொருளாக்கி, அப்படி ஒருதாம் தோன்றிய அபிப்பிராயங்களை வேண்டும்போ தெல்லாம் பார்த்து நினைத்துக்கொள்ளவும், பிறகு பல வருஷங்கள் கழிந்த பின் பிறப்பவர்களும் அம் முன்னோர்களுடைய அரிய கருத்தைத் தெரிந்து கொள்ளவும் புத்தகங்களாகச் சேர்த்து வைக்கக் கூடிய வழியைக் கண்டுபிடித்தது எவ்வளவு அற்புதமானது! இவ் வண்ணமாக இக் காலத்தவர்கள் பூர்விகர்களுடைய கொள்கைகளையும்

கற்பனைகளையும் நன்முய்ப் பார்த்துத் தெரிந்துகொண்-டிருக்கிறார்கள். இவைமாத்திரமே யல்ல, இப் பூமியில் ஓரிடத்தில் தோன்றியவர்களுடைய கொள்கைகளும் கற்பனைகளும் புத்தகங்களின் மூலமாய் இப் பூமண்டலம் முழுதும் பரவுகின்றன. இப்போது நாமும், எழுத்துக்-களையும் சொற்களையும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு, இப் பூமண்டலத்தில் முற்காலத்திலிருந்த மிகச் சிறந்த வித்வான்களெல்லாம் வெகு சிரமப்பட்டுக் கற்றறிந்த விஷயங்களை யெல்லாம் எளிதில கற்றுக்கொள்ள வல்ல-வர்களா யிருக்கிறோம்.

6. எழுதப் படிக்கத் தெரியாத ஒருவனுடைய மனமானது எப்புறத்திலும் எள்ளளவும் துவாரமில்-லாத இருண்டதோர் சிறு பெட்டிக்குள் அடைத்து வைக்கப்பட்ட பொருள்போன்றதாம். பற்பல சித்திர விசித்திரங்களடங்கிய இந்தப் பிரம்மாண்டத்தில் பல பண்டிதர் அநேக வருஷகாலம் ஆராய்ச்சி செய்து ஏற்-படுத்திய விஷயங்களெல்லாம் சிறுவர்கள் எளிதில் அறிந்துகொள்ளத்தக்க சிற்சில கதைகளாக மாற்றப்-பட்டு, அவர்களுடைய பாட புத்தகங்களில் சேர்க்கப்-பட்டிருக்கின்றன. பிள்ளைகள் தம்முடைய இளமைப் பருவத்தில் அவ் விஷயங்களாகிய மிகவும் இனிப்பான உணவுகளை மனத்துக்கு ஊட்டுவார்களாயின், அம்மனம் வாவா உறுதிப்பட்டு, முற்றமுற்றப் பின்னும் சாரமான உணவுகளை உண்டு களிப்படைய வல்லமை யுடைய தாதும். ஆகையால் சிறுவர்கள் வயிற்றிற்கு வேண்டிய உணவுகளை உண்ணுமல் ஒதுக்குவது எவ்வளவு மூடத்-தனமோ, மனதுக்கு இனிய இவ்வுணவுகளை ஏற்றுக் கொள்ளாம லிருப்பதும் அவ்வளவு மூடத்தனமானதே.

7. இவ்வாறு கல்வி கற்பதிலுள்ள நன்மை இப்படிப்பட்டதென்று எண்ணக்கூடாததா யிருந்தாலும், சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பது எளிய காரியம் அன்று. தம் மக்களுக்குக் கல்வி கற்பித்து நன்மை செய்விப்பதில் எவர்க்கும் அதிக சந்தோஷம் உண்டு; ஆனாலும், படிக்க விருப்பங்கொண்டு, சொன்னபடி கேட்டுக் கீழ்ப்படியும் தன்மையுள்ள குழந்தைகளானாலும் நாள்முழுதும் அப்பிள்ளைகளண்டையில் உட்கார்ந்து அவர்களோடு போராடித் துளித்துளியாய் அவர்களுக்கு அறிவு புகட்டிக்கொண்டிருப்பது உபாத்தியாயர்களுக்கு மிகவும் வெறுப்பு உண்டாக்கத்தக்க காரியமாம்; அப்படி யிருக்க, பிள்ளைகள் சோம்பேறிகளாயும் படிக்க மனமில்லாதவர்களாயும் அடங்காதவர்களாயும் இருப்பார்களானால் சொல்லவேண்டுவதென்ன? அவ்விதமான பிள்ளைகளுக்கு உபாத்தியாயர் தாம் நெடுநாள் முன்னமே தெரிந்துகொண்ட விஷயங்களையெல்லாம் திருப்பித் திருப்பிப் பலதரம் சொல்லிக்கொண்டு, காலைமுதல் மாலைவரையில் எவ்வளவு பொறுமையாய் உட்கார்ந்திருக்கிறார்! அப்படிப்பட்ட உபாத்தியாயர்களுக்கு மானாக்கர் என்ன பிரதியுபகாரம் செய்தால் தீரும். உபாத்தியாயர்களிடத்தில் பிள்ளைகள் அடக்கமும் அன்பும் உடையவர்களாகி, அவர் சொற்படி கேட்டுப் படித்துத் தேற விரும்புவார்களானால் அதுவே அவ்வுபாத்தியாயர்களுக்குச் சிறுவர் கொஞ்சும் சந்தோஷம் உண்டாக்கத்தக்க வழியாகும்.

8. சிறுவர் பாடம் படிக்கிற காலங்களில் மாத்திரமே யன்று; அவர்கள் என்றும் தீயவழியிற் புகாமலிருக்கக் கண்காணித்துக்கொண்டே வரவேண்டும்.

அழுக்கில்லாதவாய் நெருப்பண்டை போய் கொள்ளிக்-கட்டை முதலியவைகளை எடுத்து விளையாடித் துணியைக் கொளுத்திக்கொண்டு எத்தனைப் பிள்ளைகள் இறந்துபோயிருக்கின்றனர்; கிணற்றங்கரையில் விளையாடிக்கொண்டிருந்து எத்தனைக் குழந்தைகள் தண்ணீரில் விழுந்து அமிழ்ந்துபோயிருக்கின்றன; எத்தனைக் குழந்தைகள் தெருவில் ஓடிவண்டியின் கீழ் அகப்பட்டு இறந்திருக்கின்றன; எத்தனைக் குழந்தைகள் விஷத்தன்மையுள்ள வஸ்துக்களைத் தின்று வருத்தப்பட்டிருக்கின்றன; எத்தனைக் குழந்தைகள் ஒன்மறையான்று அடித்துக்கொண்டும், வேறுவிதமான தீங்குகளைச் செய்துகொண்டும் தொந்தரைபட்டிருக்கின்றன; இப்படிப்பட்ட பொல்லாங்குகளுக்கெல்லாம் காரணம் என்ன? தனக்கு நன்மை தீமைகள் இவையெனத் தெரியாதிருப்பதேயன்றோ? ஆகையால் குழந்தைகள் இப்படிப்பட்ட தீமைகளுக்கு ஆளாகாதபடி பெரியோர் அவைகள்மேல் கண்ணை யிருந்து அவர்களைப் பத்திரமாய்க் காத்து வருகின்றனர்.

9. ஆதலால், தம்மை என்ன காரியம் செய்யும்படி பெரியோர் நியமித்தாலும் சிறுவர்கள் அதைத் தட்டாமல் உடனே செய்ய முயலக்கடவர். அப்படி அவர்கள் செய்யச் சொன்னதற்குக் காரணம் இன்னதென்று ஒருவேளை அச் சிறுவர்களுக்கே தெரிந்தாலும் தெரியலாம்; தெரிந்துகொள்ளக் கூடாமல் இருந்தாலுமிருக்கலாம்; எப்படியிருந்தாலும், நம்மைப் பார்க்கிலும் வயதிலும், அறிவிலும் முதிர்ந்தவர்களான அறிஞர்கள் நமக்குச் சொல்வது மிகவும் நன்மையாகவே யிருக்குமென்று

நம்பி, சிறுவர் எப்போதும் அவர்கட்குக் கீழ்ப்படிந்து அவர்கள் சொன்ன வண்ணம் செய்துவரக் கடவர்.

10. எப்படிப்பட்ட ஆபத்திலும் மூத்தோர் சொல்லை மறுக்காதிருந்ததனால் பிள்ளைகள் நன்மை அடைந்ததற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு. பிரஷியாதேசத்து இருப்புப்பாதையொன்றில் வண்டிக்குக் குறி காட்டுவோனுடைய குழந்தை வண்டி வருகிற வழியே தற்செயலாய் ஓடும்போது திடீரென்று வண்டி வந்துவிட்டதுகண்டு, அவ் வேலைக்காரன் தன் வேலையை விட்டுப் போய்க் குழந்தையை எடுக்கக் கூடாமையால் அச்சங்கொண்டு, வண்டி ஓடும் இரண்டு கம்பிகளுக்கு இடையில் கவிழ்ந்து படுத்துக்கொள்ளும்படி குழந்தைக்குக் கட்டளைபிட, அந்தக் குழந்தை அப்படியே படுத்திருந்து பிழைத்ததென்று ஒரு கதை வாசித்திருக்கிறோமன்றோ?

11. ஆதலால் நமக்கு இன்பமில்லாத காரியத்தைச் செய்யும்படி பெரியோர்கள் நிட்டம் செய்தாலும், நமதுடைய பெற்றோர் முதலிய பெரியோர் தங்நலத்தைச் சிறிதும் எதிர்பாராமல் நமக்காகவே உதவிசெய்து வருகிறார்கள் என்பதையும், நாம் ஒன்றும் அறியாத கைக்குழந்தையாயிருக்கும்போது இரவும் பகலும் பாடுபட்டு நம்மை எவ்வளவு பக்ஷமாய்ப் பாதுகாத்து வந்தனர் என்பதையும், அவர்கள் தங்களுடைய வேலைகளையெல்லாம் விட்டுத் தேகசவுக்கியத்தையும் பாராமல் எப்படியாவது குழந்தைகள் சவுக்கியப்பட்டாற் போதுமென்று எவ்வளவு வருத்தப்பட்டு நமக்குக் கல்வி கற்பிப்பது முதலிய பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள் என்பதையும் நினைத்து அவர்கள் சொல்லுக்கு அடங்கி நடக்கக்கடவோம்.

12. சிறுவர்கள் தம் பெற்றோர் சொன்னபடி செய்வது மாத்திரமேயன்றி, தம்முடைய குடும்ப சவுக்கியத்திற்காகவும் சமூகமத்திற்காகவும் அவர்கள் ஏற்படுத்திய விதிகளுக்கும் உட்பட்டு நடக்கவேண்டும். பிள்ளைகளெல்லாம் அவனவன் இஷ்டப்படி நடக்கவிட்டிருப்பவர்களுடைய வீடு என்றைக்காவது சச்சரவில்லாதிருக்குமா? சில குழந்தைகள் இரவு பதினைந்து நாழிகை வரையில் தூங்காமல் இருக்க விரும்புகின்றன; சில குழந்தைகள் உதயமாய் வெகு நாழிகை வரையில் படுக்கையை விட்டு எழாதிருக்க விரும்புகின்றன; சில குழந்தைகள் வேளைவிலைகூடப் புசிக்க விரும்பாதிருக்கின்றன; சில குழந்தைகள் நாள் முழுதும் ஓயாமல் வாயை அரைத்தபடியேயிருக்க விரும்பிகின்றன; சில பிள்ளைகள் அழுக்குத் துணிகளை உடுத்து, ஊத்தை வாயோடு எப்போதும் திரிகின்றன; சில பிள்ளைகள் எப்போதும் விளையாட்டிலேயே விருப்பங்கொண்டிருக்கின்றன; சில பிள்ளைகள் எப்போதும் தொந்தரவு செய்கின்றன: இப்படி ஒவ்வொரு பிள்ளையினுடைய தன்மையும் ஒவ்வொரு விதமாயிருக்கின்றது.

13. ஆகையால், குழந்தைகளை அதனதன் இஷ்டப்படி ஆடவிட்டிருக்கின்ற வீடுகளில் எப்போதும் ஆரவாரமே குடிகொண்டிருக்கும்; அங்கே ஒரு காரியமும் அமைதியாய் நடவாது; எவர்க்கும் சவுக்கியம் கிடைக்காது. அப்படியின்றி வீட்டிலுள்ளவர்களுடைய சவுக்கியத்திற்காக ஏற்படுத்திய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, எல்லாப் பிள்ளைகளும் நடந்து வருவார்களானால், அங்குள்ள அனைவரும் சவுக்கியமடையலாம். பிள்ளைகள் இன்ன காலத்தில் புசிக்க வேண்டும், இன்ன காலத்தில்

தூங்கவேண்டும், இன்ன காலத்தில் வேலை செய்யவேண்டும், இன்ன காலத்தில் விளையாட வேண்டும், ஒருவர்க்கொருவர் நேசமுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்று இப்படித் தகுந்த ஏற்பாடு செய்து, வீட்டுக் காரியங்களை பரிபாலிக்க வல்லவனும், ஈவிரக்கமும் நல்ல விவேகமும் உடையவன் ஒருவன் ஏற்படுவானால் அவ்வீட்டுக்கு ஒரு குறையும் வராது.

14. பிள்ளைகள் தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுவது போலவே, போர் வீரர்களும் கப்பற்காரர்களும் இவர்போன்ற இன்னும் பலரும் தத்தம் யஜமானனுக்குக் கீழ்ப்படிந்து அவன் சொற்படி கேட்டு நடக்க வேண்டும். அப்படியே தேசத்து ஜனங்கள் அவர்களுக்காக ராஜாங்கத்தார் ஏற்படுத்திய சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டும்; நடவாமற் போனால் பற்பல சங்கடங்கள் உண்டாகும். ஆகையால் பிள்ளைகள் முதலில் வீடுகளில் பெற்றோர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் கீழ்ப்படிந்திருக்கப் பழகுவது பிற்காலத்தில் ராஜாங்கத்துக் கட்டளை முதலியவற்றிற்குக் கீழ்ப்படிவதற்கு ஆதாரமாம். கீழ்ப்படிதல் ஒன்றில்லா விட்டால் ஓர் அற்பமான வீட்டைப்போலவே மிகப்பெரிய ராஜ்யமும் வாசியோக்ய மற்றதாகிவிடும். கீழ்ப்படிதல் என்னும் நற்குணம் ஒன்று நம்மிடமிருந்தால் நம்மை என்றும் யாதொன்றும் கைவிடாமல் காப்பாற்றவல்ல கடவுளும் நம்மிடத்தில் கருணை புரிந்து கடாக்ஷிப்பார்.

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிய

I. நன்னெறி

என்று மூகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் — துன்றுசுரை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவும் நயந்து. (1)

மாசற்ற நெஞ்சுடையார் வண்சொலினி தீனியவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க — ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஓண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (2)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (3)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாரும் — பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லி னும்நண்மைநிலை போம். (4)

கோதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதி லொருதருபுரிந் தெப்பவே — தூதுகூலை [மான்
எண்ணினிரண்டு மொன்றுமதி யொண்முகத்தாய் நோக்கு
கண்ணினிரண்டு மொக்கையே காண். (5)

கடலே யனையம்யாம கல்வியா லென்னும்
அடலே ரனையசெருக் காழ்த்தி — விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும். (6)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க — வெள்ளம்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. (7)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவில் — பலியேல்
கடவு ளவிர்சடைமேல் கட்செவியஞ் சாதே
படர்சிறைய புள்ளரசைப் பார்த்து. (8)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குரைஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமேல் நின்று. (9)

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் — துப்பின்
சுழற்றுங்கொல் கற்றாளைச் சூறை வளிபோய்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு. (10)

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பில்
பொருந்துதல் தானே புதுமை — திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. (11)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்தல் — இலையால்
இரைக்கும்வண் டிதுமலர் ஒர்ந்தோதாய் மேரு
வரைக்குவந் தன்று வளைவு. (12)

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும் — நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (13)

தம்மையுந் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் — தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்ப்பப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். (14)

பிறந்தநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ — பைந்தொடீ
இன்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. (15)

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே — பொன்செய்
தறிவினையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (16)

நல்லோர் வரவான் நகைமுகங்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவார் — வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (17)

பெரியவர்தந் கோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியினிழுதாவென்க — தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (18)

எழுத்தறியார் கல்வியிற் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம் — எழுத்தறிவார்
ஆய்பு கடவுள் அணிச்சடைமுன் கண்டனவில்
வீய்பு சுரதீர் மிகை. (19)

ஆக்கு மறிவா னலது பிறப்பிலுல்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க — நீக்கு
பவரா ரவின் பருமணிகண் டென்றும்
கவராரி கடலின் கடு. (20)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுமிழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே — வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. (21)

கல்லா அறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணுரே — வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணுய் நொய்தாம்
புணையிற் புகுமாண் பொருள். (22)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் — மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதன்
விண்ணளவா யிற்றே விளம்பு. (23)

மகம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர் — அம்மா
முகக்கு மெயிறு முதிர்சுவைகா விற்கு
விகக்கும் வலியனதா மென்று. (24)

முனிவினும் நல்குவர் மூதறிவு ருள்ளக்
கனிவினும் நல்காக் கயவர் — நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதான் எட்டிபழுத்
தாயினு மாமோ அறை. (25)

உடற்கு வருமிடர்கொஞ் சோர்குபரத் தற்றோர்
அடுக்கு மொருதோய் யாக — நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். (26)

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே — வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. (27)

போதிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் — நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேல்
கைசென்று தாங்குங் கடிது. (28)

பன்னும் பலவற் பயன்றே ரறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே — நன்னுதால்
காமொான் றுயர்தின் கதவு வலியுடைத்தே
தாமொான் றிலதாயிற் ருன். (29)

சொல்லா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்
வில்லா அறிஞரது வேண்டாரே — தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். (30)

அறிவுடையா ரன்றி யதுபெறூர் தம்பால்
செறிபழியை யஞ்சார் சிறிதும் — பிறைதுதால்
வண்ணஞ்செய் வான்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. (31)

நற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்று மதியாரே — வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (32)

தக்கார்க்கே யிவர் தகார்க்களிப்பா ரில்லென்று
பிக்கார்க் குதவார் விழுமியோர் — எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பாரோ போய். (33)

பெரியார்முற் றண்ணைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும் — தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த பொலிகுழலாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து (34)

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை யாகாதே — நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றிங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னுகிப் போம். (35)

கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே — பொற்றொடி இ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம். (36)

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றுரைவ்வார் — மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ணெக்குமோ காண். (37)

II. பழமொழி விளக்கம்

நன்மைமது செயல்வேண்டுந் தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்
வன்மையினை செயல்வேண்டா பொய்வேண்டா
பிறரையொன்றும் வருத்தல் வேண்டா
கன்மநெறி வரல்வேண்டா வேண்டுவது
பலர்க்குமுப காரமாகும்
நன்மை செய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார்
தீமையுற்று நலிவர் தாமே. (1)

நன்றி தரும் பிள்ளையொன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
தாறுபெற்று மாவு துண்டோ
மன்றினடம் புரிவாரே தண்டலையா
ரேசொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனற் பலனுண்டாமே. (2)

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குதவி யீனச்செய் தாலும்
அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையா
ரேசொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. (3)

மானென்று வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான் மானே யென்று
தேனென்று மொழிபேசச் சீதைதனைச்
சிறையிருக்கத் திருடிச் சென்றோன்
வானென்று மரசிழந்தான் தண்டலையார்
திருவுளத்தின் மகிமை காணீர்
தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று
நினைக்குமிது சகசந் தானே. (4)

தின்மார்க்கர்க் காயிரந்தான் சொன்னாலும்
மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார்
சன்மார்க்கர்க் கொருவார்த்தை சொல்லுமளவே
மெய்யதனிற் றழும்பாக் கொள்வார்

பண்மார்க்க மறைபுகழுந் தண்டலையா
ரேசொன்னேன் பண்பு வாய்ந்த
நன்மாடு தனக்கொரடி நற்பெண்டிர்க்
கொருவார்த்தை நடத்தை யாமே (5)
விற்பனர்க்கு வாழ்வுவந்தால் மிகவணங்கிக்
கண்ணேட்ட மிகவுஞ் செய்வார்
சொற்பருக்கு வாழ்வுவந்தாற் கண்தெரியா
திறுமாந்து துன்பஞ் செய்வார்
பற்பலர்க்கும் வாழ்வுதருந் தண்டலையா
ரேசொன்னேன் பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தா லர்த்தராத்
திரிகுடைமே லாகுந் தானே. (6)

காலமறி தண்டலையார் வளநாட்டிற்
கொலைகளவு கள்ளே காமம்
சாலவருங் குருகிந்தை செய்பவர்பால்
மேவியவஞ் சனைசெய் தற்குஞ்
சிலமுடை யோர்நினையார் பணையடியி
லேயிருந்து தெளிந்த ஆவின்
பாலினையே குடித்தாலுங் கள்ளென்பார்
தள்ளென்பார் பள்ளென் பாரே. (7)

கானமருங் கவரியொரு மயிர்படினும்
இறக்குமது கழுதைக் குண்டோ
மானமுடன் வாழ்பவனே மாபுருடன்
சுயோதனனை மறந்தா ருண்டோ
ஆனகஞ்சே ரொலிமுழங்குந் தண்டலையா
ரேசொன்னே னரைக்கா சுக்குப்
போனதொரு மானம்பின் னுயிரம்பொன்
கொடுத்தாலும் பொருந்தி டாதே. (8)

நன்னெறி

1. 'என்றுமுகம னியம்பாதவர்' என்னும் பாட்டு.

பூவின் பொலி குழலாய்! பூ கை புகழவோ நாவிற்கு துன்று சுவை நயந்து உதவும்; தீது அற்றோர் என்றும் முகமன் இயம்பாதவர் கண்ணும் சென்று பொருள் கொடுப்பர்.

பூவின் பொலி - பூவினால் வி குழல் - கூந்தல் முகமன் - உபசார வார்த்தை [ளங்கும் | சுவை - சுவையுள்ள பொருள் இயம்புதல் - சொல்லுதல் துன்று - மிக்க

2. 'மாசற்ற நெஞ்சுடையார்' என்னும் பாட்டு.

கல் துதால்! ஈசற்கு கல்லோன் எறி சிலையோ, ஒண் கரும்பு வில்லோன் (எறி) மலரோ விருப்பு! மாசு அற்ற நெஞ்சு உடையார் வன் சொல் இனிது, எனையவர் பேசுற்ற இன் சொல் பிறிது என்க.

துதல் - நெற்றி
கல்லோன் - சாக்கிய நாயனார்
எறி சிலை - எறிந்த கல்
கரும்பு வில்லோன் - மன்மதன்
மாசு - குற்றம்
பிறிது - வேறானது

3. 'பிறர்க்குதவி செய்யார்' என்னும் பாட்டு.

புயல் சென்று பிறர்க்கு உதவி செய்யா கருங் கடல் நீர் முகந்து (பிறர்க்கு) பெய்யா கொடுக்கும்; பிறர்க்கு உதவி செய்யார் பெரும் செல்வம் வேறு, பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறு ஆம்.

பேறு - செல்வம்
முகந்து - மொண்டு
பெய்யா - பெய்து
புயல் - மேகம்

4. 'நீக்க மறு மிருவர்' என்னும் பாட்டு.

பூ குழலாய்! உமி நெல்லின் சிறிது நீங்கி பழமைபோல் புல்[illegible]தன்மை நிலைபோம்; நீக்கம் அறும் இருவர்

நீங்கி புணர்ந்தாலும், அவர் பெருமை நோக்கின் நொய்து ஆகும்.

புல்லினும் - சேர்ந்தாலும்
நொய்து - அற்பம் [லாத
நீக்கம் அறும் - நீங்குதல் இல்
திண்மை நிலை - உறுதி நிலை
இருவர் - இரண்டு நேசர்
நெல்லின் - நெல்லினின்று

5. 'காதன் மனையாளும்' என்னும் பாட்டு.

ஒது கலை எண் இரண்டும் ஒன்று மதி என் முகத்தாய்! கண் இரண்டும் ஒன்றையே நோக்கும்; காதல் மனையாளும் காதலனும் மாறு இன்றி நீது இல் ஒரு கருமம் செய்ப.

ஒது - சொல்லுகின்ற
எண் இரண்டு கலை - பதினாறு கலைகள்.
ஒன்றுமதி - பொருந்திய சந் [திரன்
காதல் - விருப்பம்
காதலன் - புருஷன்.

6. 'கடலே யனையம் யாம்' என்னும் பாட்டு.

முழங்கும் பனி கடலும் முனிக்கு அரசு கையால் முகந்து உண்ணப்படும்; யாம் கல்வியால் கடலே அனையம் என்னும் அடல் ஏறு அனைய செருக்கு ஆழ்த்தி விடல்.

முனிக்கு அரசு - அகத்தியர்
அடல் ஏறு - வலிமை பொருந் தியஆண்சிங்கம்
அனைய - ஒத்த
முகந்து - மொண்டு
செருக்கு - கர்வம்

7. 'உள்ளங் கவர்ந்தெழுந்து' என்னும் பாட்டு.

வெள்ளம் தடுத்தல் அரிதோ தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ விளம்பு; உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்கொள்ளும் குணமே குணம் என்க.

கவர்ந்து - வசப்படுத்தி
தடம் - விசாலம்

8. 'மெலியோர் வலிய' என்னும் பாட்டு.

பலி எல் கடவுள் அவிர் சடைமேல் கட்செவி படர் சிறைய புள் அரசை பார்த்து அஞ்சாது; மெலியோர் வலியோர் தமை தாம் மருவில் வலிய விரவலரை அஞ்சார்.

விரவலர் - சத்துருக்கள்
பலி - பிச்சை, பூசை
கட்செவி - பாம்பு
புள் அரசு - கருட[illegible]

9. 'தங்குறை தீர்வுள்ளார்' என்னும் பாட்டு.

திங்கள் கறை இருளை நீக்க கருதாது மேல்நின்று உலகில் நிறை இருளை நீக்கும்; விழுமியோர் தம் குறை தீர்வு உள்ளார் பிறர்க்கு உறும் வெம் குறை தளர்ந்து தீர்க்கிற்பார்.

திங்கள் - சந்திரன்	விழுமியோர் - மேலோர்
உள்ளார் - நினையார்	தீர்க்கிற்பார் - நீக்குவார்

10. 'பொய்ப்புலன்க ளைந்து நோய்' என்னும் பாட்டு.

சூறைவளி துப்பில் கல்தூணை போய் சுழற்றுங்கொல், சிறுபுன் துரும்பு சுழற்றும்; பொய்ப்புலன்கள் ஐந்தும் நோய் புல்லியர்பால் அன்றி மெய் புலவர்பால் விளையா ஆம்.

புல்லியர் - அற்பர்	துப்பு - வலிவு
புலவர் - அறிவுடையோர்.	சூறைவளி - சுழல்காற்று

11. 'வருந்து முயிரோன்பான்' என்னும் பாட்டு.

திருந்து இழாய்! சீதம் நீர் பொள்ளல் சிறு குடத்து நில்லாது வீதலோ (வியப்பு), நிற்றல் வியப்பு; வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில் பொருந்துதல் தானே புதுமை.

இழை - ஆபரணம்	சீதம் - குளிர்ச்சி
புதுமை - ஆச்சரியம்	பொள்ளல் - துவாரம்

12. 'தோலையாப் பெருஞ்செல்வம்' என்னும் பாட்டு.

இரைக்கும் வண்டு ஊது மலர் ஈர்கோதாய், மேரு வரைக்கும் வளைவு வந்தன்று; தலையாயவர் தொலையாபெரும் செல்வம் தோற்றத்தோம் என்று செருக்கு சார்தல் இலை.

தோற்றம் - பிறப்பு	வரை - மலை
ஈர்ங்கோதை - குளிர்ந்தமாலை	வந்தன்று - வந்தது

13. 'இல்லானுக் கன்பிங்கு' என்னும் பாட்டு.

நல்லாய்! மொழி யிலார்க்கு முதுநூல் ஏது? தெரியும் விழியிலார்க்கு விளக்கு ஏது? இங்கு அன்பு இல்லானுக்கு இடம் பொருள் ஏவல் என்ற எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும்.

மொழியிலார் - ஊமைகள்	இங்கு - இவ்வுலகில் [ரங்கள்
[illegible] பயன்	முதுநூல்-பழமையான சாத்தி

14. 'தம்மையுந் தங்கள்' என்னும் பாட்டு.

கடல் அல்கு கழியினும் செல்வாதோ, உயர்ந்தோர் தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்து தம்மை மதியார்; தம்மை அடைந்தோர் தம்மின் இழியினும் செல்வர் இடர் தீர்ப்பர்.

மதியார் - பெருமை படுத்திக் கொள்ளார்
அல்கு - சுருங்கிய
தம்மின் - தம்மைவிட

15. 'எந்தை நல்கூர்ந்தான்' என்னும் பாட்டு.

பைந்தொடீ இ! நின்று பயன் உதவி நில்லா அரம்பையின் கீழ் கன்றும் கனி உதவும்; எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று அவன் மைந்தர் தம் ஈகைமறுப்பரோ?

பைந்தொடீ இ - பசியவளையல் அணிந்தவளே
அரம்பை - வாழை
நல்குரவு - தரித்திரம்

16. 'இன்சொலா லன்றி' என்னும் பாட்டு.

பொன் செய்து அதிர் வளையாய்! கடல் அழல் கதிரால் பொங்காது, தண் என் கதிர் வரவால் பொங்கும், இரு நீர் வியன் உலகம் என்றும் இன் சொல்லால் அன்றி வன்சொல்லால் மகிழாது.

இரு - பெரிய
தண்ணென்கதிர் - குளிர்ச்சியான சந்திரன்
அழல்கதிர் - வெப்பமான கிரணத்தை யுடைய சூரியன்

17. 'நல்லோர் வரவால்' என்னும் பாட்டு.

தேமா தென்றல் வர தளிர் காட்டி திருந்தும், சுழல் கால் வர வருந்தும்; வல்லோர் நல்லோர் வரவால் நகைமுகம் கொண்டு இன்பு உறீஇ - அல்லோர் வரவால் அழுங்குவார்.

உறீஇ - அடைந்து
நகை - சிரிப்பு
தேமா - மதுரமான கனியையுடைய மாமரம்

18. 'பெரியவர் தம்' என்னும் பாட்டு.

தெரியிழாய்! கண் மண்டு பிணியால் வருந்து பிற உறுப்பை கண்டு கலுழும்; பெரியவர், பிறர் நோய் கண்டு தம் நோய்போல் எரியின் இழுது ஆவர் என்க.

எரி - நெருப்பு
இழுது - நெய்
தெரிஇழாய் - ஆராய்ந்தெடுத்த ஆபரண முடையாளே
கலுழும் - அழும்

Block 136